கல்கி

KALKI 20.11.94 ரூ. 3.00

உள்ளே...

பெண்கள் மனுக்கொடுத்தால் சாராயக் கடைகள் மூடப்படும்!



போட்டோ பொடிசுகளுடன் கேமரா கிங்!

'அமைதிக்காகவே வாழ்நாளை அர்ப்பணிப்பவர் தவிர, அராஜகப் பாதையிலிருந்து திசை திரும்பி, சமாதானத்துக்கு உழைப்பவருக்கும் நோபெல் பரிசு தரலாம்' என்ற சிந்தனை சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது!



• அராபத் • ரேபின் பெரெஸ்

அராஜகத்துக்கு அமைதிப் பரிசா?

பாலஸ்தீனிய விடுதலை அமைப்பின் தலைவர் யாசர் அராபத், இஸ்ரேலின் தலைவர் ரேபின், இஸ்ரேல் நாட்டு வெளியுறவு அமைச்சர் பெரெஸ் ஆகிய மூவரும் இந்த ஆண்டுக்கான நோபெல் அமைதிப் பரிசுக்குரியவர்கள் என்ற அறிவிப்பு, பல வட்டங்களில் கடும் எதிர்ப்பைக் கிளப்பியிருக்கிறது.

விமர்சகர்களின் முக்கிய எதிர்ப்பு, அராபத்தை நோக்கித்தான். "அராபத்தின் கடந்த காலம் நிறைய ரத்தக்கறை படிந்த ஒன்று. வன்முறையில் நாட்டம் கொண்டவர் அவர். அவரது வருங்காலமும் அமைதி முயற்சிகள் நிரம்பியதாக இருக்கும் என்று கணிக்கும் வகையில் இல்லை." இப்படிக் கூறி அராபத்துக்கு அமைதிக்கான நோபெல் பரிசளிக்கப்படுவதை எதிர்த்து, நோபெல் குழுவிலிருந்தே விலகிவிட்டார் கிறிஸ்டியான்சென் என்பவர்.


அமைதிக்கான நோபெல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அந்தப் பரிசுக்கு அருகதை உள்ளவர்தானா என்ற சர்ச்சை எழுவது ஒன்றும் புதிதல்ல. 1978 ல் எகிப்து நாட்டின் பிரதமர் சதாம், இஸ்ரேலியப் பிரதமர் பெகின் இருவருக்கும் அமைதிக்கான நோபெல் பரிசு வழங்கப்பட்ட போதும் விமர்சனங்கள் எழுந்தன. காரணம் 'ரத்தவெறி பிடித்தவர்' என்று பெகினை சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டதுண்டு - அப்படிப்பட்டவருக்கா அமைதிப் பரிசு என்பதில்தான் கருத்து வேறுபாடுகள்.

1973 ம் ஆண்டுக்கான நோபெல் பரிசு, அமெரிக்காவின் பிரதம ஆலோசகர் கிஸிஞ்சருக்கும், வட வியட்னாம் அரசுத் தலைவரான 'லெ டாக் தௌ'க்கும் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போது, அதைக் கடுமையாக எதிர்த்தது வேறு யாருமல்ல; லெ டாக் தௌவேதான். "அமைதி ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையெழுத்திட்டதே தவிர, வியட்னாமில் அதன் போர்த் திருவிளையாடல்களை அது நிறுத்திக் கொள்ளவில்லை. இந்த நிலையில் கிஸிஞ்சரோடு இணைந்து நானும் நோபெல் பரிசைப் பெறுவதென்பது அபத்தமானது" என்று கூறி, அப்பரிசைப் பெற மறுத்துவிட்டார் தௌ. அப்படிப் பெற்றிருந்தால் அமைதிக்கான நோபெல் பரிசைப் பெற்ற முதல் ஆசியர் என்ற கௌரவம் கூட அவருக்குக் கிட்டியிருக்கும்!

அராபத், ஹமாஸ் என்ற பயங்கரவாத இயக்கத்தை ஆதரித்து உதவுகிறார் என்கிறது இஸ்ரேல். "காஸா, இஸ்ரேல் எதிர்ப்பாளர்களின் புகலிடமாகவே மாறி வருகிறது" என்று இஸ்ரேலின் பிரதமர் ரேபின் குற்றம் சாட்டி இருக்கிறார். முன்பு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருந்த காஸா பகுதி, இப்போது பாலஸ்தீனியர்களுக்கு உரிமையாகி விட்டது என்பதும், இன்று யாசர் அராபத் அதன் பொறுப்பு அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

நோபெல் பரிசுக் குழுவினரின் நிலைமையும் ஒருவிதத்தில் பரிதாபமானதுதான். யாரும் விமர்சிக்க முடியாத அளவில், அமைதிக்கான நோபெல் பரிசைத் தொடர்ந்து தர, செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளும், மதர் தெரஸா போன்ற நபர்களும் எண்ணிக்கையில் அதிகம் இல்லையே!

— ஜி.எஸ்.எஸ்.



• விதான
சௌதா



கர்நாடகத் தேர்தல்:

மொய்லியின் தப்புத் தாளமும்

"சுதந்திர தினமாக இருந்தாலும் சரி, குடியரசு தினமாக இருந்தாலும் சரி அதனை கட்சிக்குச் சாதகமாய் திருப்பிக் கொள்ளும் தந்திரத்தை பி.ஜே.பி. கையாண்டு வருகிறது. இதற்கு நான் இடம் தரப் போவதில்லை. வருகிற குடியரசு தினத்தன்று கூடச் சில போராட்டங்களை ரகசியமாக..." என்று கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி டீ.வி.யில் பேட்டியளித்துக் கொண்டிருக்கும்போது, பத்திரிகையாளர் எம்.ஜே. அக்பர் குறுக்கிடு கிறார்: "வருகிற குடியரசு தினத்தன்று நீங்கள் முதல்வராக இருப்பீர்களா?"

"என்ன... என்ன கேட்கிறீர்கள்?"- என்று தடுமாறுகிறார் மொய்லி.

"வருகிற குடியரசு தினத்தின்போது நீங்கள் முதலமைச்சராக இருப்பீர்களா என்று கேட்கிறேன்."

"அதுவந்து... 'டெல்லி ஹைகமாண்ட்' முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஆனால் நான் முதலமைச்சராக இருக்கிறேனோ இல்லையோ, காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியி லிருக்கும் என்பதை வேண்டுமானால் நான் உங்களுக்கு உத்தரவாதமாகச் சொல்ல முடியும்"- என்று சமாளிக்கிறார் மொய்லி.

மொய்லியின் உத்தரவாதத்தைப் பரிசோதிக்கும் விதமாகத் தேர்தல் வந்து விட்டது. இருமுனைப் போட்டிகளையே சந் தித்துப் பழக்கப்பட்டுப் போன கர்நாடகத்தில் முதல் தடவையாக நான்கு முனைப் போட்டி!

காங்கிரஸ் - ஜனதாதளம் - பங்காரப்பா வின் கர்நாடக காங்கிரஸ் கட்சி – பி.ஜே.பி. என்ற நான்கு கட்சிகளும் சம பலத்துடன் இருக்கின்றன என்று சொல்வதைவிடவும் சமபலத்துடன் இருப்பதாகத் தோற்றம் தரு கின்றன என்று சொல்வது சரியாக இருக்கும்.


காங்கிரஸ் இந்த முறை கொஞ்சம் பயத் துடன்தான் களத்தில் இறங்குகிறது. சாதனை கள் என்று சொல்லிக் கொள்கிற மாதிரி பெரிதாக ஒன்றும் இல்லை. மக்களை வசீகரிக்கும் தலைவர்களும் இல்லை. 'நல்ல அரசாங்கத்தையும், நல்ல நிர்வாகத்தையும் வழங்க வேண்டும்' என்று மொய்லி நினைத்த தும் பேசியதும் உண்மை. ஆனால் தப்பித்

தவறிக் கூட அதனைச் செய்ய விட்டு விடாமல் பார்த்துக் கொண்ட பெருமை, கட்சியின் உள்வட்டத்தையும் டெல்லியின் மேலிடத்தையும்தான் சேர வேண்டும். ஒரு சீனியர் பத்திரிகையாளர் சொன்னார்! "மொய்லியை சுதந்திரமாய்ச் செயல்பட விட்டிருந்தால் நிச்சயம் நல்ல நிர்வாகம் செய்திருப்பார். ஆனால் அவரை எங்கே விடுகிறார்கள்? உண்மையைச்

"மாறினாலும் எல்லாரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்தானே? அரசாங்கம் கவிழவில்லையே! காங்கிரஸ் அரசு கவிழ்ந்து, தேர்தலுக்கான வாய்ப்பை உண்டாக்கவில்லையே!"

"ஆனாலும் உள்கட்சிச் சண்டைகள் மிக மோசமானவையாக இருக்கின்றனவே... இப்போது கூட மொய்லி கோஷ்டி, எஸ்.எம். கிருஷ்ணா கோஷ்டி, ஜனார்த்தன பூஜாரி, சங்கரானந்த் கோஷ்டிகள் என்று நிறைய சண்டை போட்டுக் கொள்கிறார்களே..."

"போட்டால் என்ன சார்? நிலையான அரசாங்கம் தருவது காங்கிரஸ்தான். நாங்கள் உள்ளுக்குள் சண்டை போட்டுக் கொண்டாலும் கடைசியில் மேலிடத்துக்குக் கட்டுப்படுகிறோம். எதிர்க்கட்சிகள் அப்படி இல்லையே!"



இவரது கூற்றை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. என்னதான் காங்கிரஸில் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டாலும் மக்களுக்கு அது பெரிதாகப் படுவதில்லை.

பங்காரப்பாவின் மெல்லிசையும்!

சொல்ல வேண்டுமானால், பாத்ரூம் போவதற்குக்கூட டெல்லியைக் கேட்டுக் கொண்டுதான் போக வேண்டிய நிலைமை அவருடையது..."

இந்த நிலையில் கட்சியின் வெற்றி வாய்ப்புகள் எப்படி என்று காங்கிரஸின் முக்கிய பிரமுகர் ஒருவரைக் கேட்டபோது, "சமீபத்திய கலவரங்கள், துப்பாக்கிச் சூடுகள்... இவைகளை மனத்தில் வைத்துக் கொண்டுதானே கேட்கிறீர்கள்? மக்கள் வோட்டுச் சாவடிக்குச் செல்லும்போது, இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கப் போவதில்லை. நாம் போடப் போகும் வோட்டு நிலையான அரசாங்கத்தைத் தருமா என்பதைத்தான் யோசிப்பார்கள். அப்படி நிலையான அரசாங்கத்தைத் தரக்கூடிய கட்சி காங்கிரஸ்தான் என்பது அவர்கள் மனத்தில் நன்றாகப் பதிந்து போயிருக்கிறது. அதனால் காங்கிரஸைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்" என்றார்.

"எது நிலையான அரசாங்கம்? ஒரு தேர்தலுக்கும் மறு தேர்தலுக்கும் மத்தியில் மூன்று முதலமைச்சர்கள் மாறி விட்டார்களே?"

எதிர்க்கட்சிகளில் லேசான கருத்து வேறுபாடுகள் வெளிப்பட்டாலும் - "பார் பார் எதிர்க்கட்சிகள்னாலே இப்படித்தான் அடிச்சுக் பாங்க"- என்ற கருத்து பதிந்து போயிருப்பது காங்கிரஸுக்கு ஒரு பிளஸ் பாயிண்ட்.

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் தேர்வின்போதே கோஷ்டிச் சண்டைகளும் மேலிடத்தின் சார்பு நிலையும் அம்பலத்துக்கு வந்து விட்டன. மத்திய தேர்வுக் குழுவில் ஒரு மரியாதை நிமித்தமாகக் கூட கர்நாடக முதல்வரைச் சேர்த்துக் கொள்ளவில்லை. மகாராஷ்டிர முதல்வர், பஞ்சாப், கேரளா, ஆந்திரா என்று எல்லா காங்கிரஸ் முதல்வர்களும் இருக்க, தம்முடைய பெயர் இல்லாமல் போய்விட்டதில் ரொம்பவும் அப்செட் ஆகி விட்டார் மொய்லி.

கடந்த ஆறேழு மாதங்களாகவே தேர்தலைச் சந்திக்கத் தயாராகிவிட்டது ஜனதாதளம். ஹெக்டே, தேவேகௌடா இருவரும் ஒன்றாகச் சேர்ந்திருப்பது அந்தக் கட்சிக்கு ஒரு பெரிய பலம். சில மாதங்கள் முன்பு

மத்தியில் ஜனதாதளம் மட்டும் உடையா மலிந்திருந்தால் நிச்சயம் இம்முறை கர்நாடக அரசாங்கத்தைக் கைப்பற்றியிருக்கும் என்றே சொல்லலாம். படித்தவர்கள் மத்தியில் அந்தப் பிளவு ஒருவகையான அதிருப்தியை உண்டு பண்ணி விட்டது.

"அங்கே கட்சி உடைந்திருக்கலாம்... ஜார்ஜ் பெர்னான்டஸும் மற்றவர்களும் தனியாகப் போயிருக்கலாம். அதனால் எந்தப் பாதிப்பும் இங்கு எங்களுக்கு இல்லை. நாங்கள் முன்னைவிட அதிக ஒற்றுமையுடன் இருக்கிறோம்" என்று ஹெக்டே சொன்னாலும் மக்கள் எவ்வளவு தூரம் ஒப்புக் கொள்கிறார்கள்?

ஜார்ஜ் பெர்னான்டஸ் போனது கட்சிக்கு நிச்சயம் இழப்புதான். ஒவ்வொரு தேர்தலின்போதும் சூறாவளிப் பயணங்கள் அடித்துப் பரபரப்பான பொதுக் கூட்டங்கள் நடத்தி, ஒரு கலக்குக் கலக்குவது அவர் வழக்கம். கன்னடத்தில் அவர் அளவுக்குச் சூடுபறக்கப் பேசும் தலைவர்கள் குறைவு. அதனால் இந்தப் பரபரப்பு ஜனதாதளத்திற்கு மிஸ்ஸிங்.

இந்த முறை எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் கட்சி பி.ஜே.பி. ஏறக்குறைய தலைமைச் செயலகமான விதான சௌதாவின் படிகள்வரை வந்தாயிற்று என்ற நினைப்பில் இருக்கும் பி.ஜே.பிக்காரர்கள் அதிகம். "முதல்வர் யார்? ஈஸ்வரப்பாவா, எடியூரப்பாவா என்பதுதான் கேள்வி"- என்று கூடச் சொன்னார் ஒரு தொண்டர். ஹூப்ளி கலவரமும், சமீபத்தில் நடந்த உருதுச் செய்தி அறிக்கை தொடர்பான கலவரங்களும் தங்களுக்குத்தான் சாதகமாக இருக்கப் போகிறது என்று இதன் தலைவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் பாரதிய ஜனதாவிற்குப் பெரிய அடி விழுந்தது ஸ்ரீகண்ட தத்த நரசிம்மராஜ உடையார் மூலம். முன்னாள் மைசூர் மகாராஜாவின் புதல்வரான இவர், தேர்தல் சமயம் பார்த்து பாரதிய ஜனதாவிலிருந்து விலகி, நரசிம்மராவ் முன்னிலையில் காங்கிரஸில் சேர்ந்து விட்டார். மொத்தக் கர்நாடகத்திலும் மைசூர் மகாராஜாவுக்கு விசுவாசிகள் இன்னமும் உண்டு. இதனால் கலங்கிப் போயிருந்த பாரதிய ஜனதாவுக்கு உடனடியாக இன்னொரு அடியும் விழுந்தது. பெங்களூர் நகரில் தற்சமயம் எம்.பி.யாக இருக்கும் பிரபலர் வெங்கடகிரி கௌடா கட்சியின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவர். இவரும் கட்சிக்கெதிராக அறிக்கைகள் விடவே திகைத்துப் போயிருக்கிறது கட்சி. கூடவே, சமீபத்தில் ஜனதாதள்த்தை விட்டு வெளியேறி பா.ஜ.க.வில் சேர்ந்த ஜீவராஜ் ஆல்வாவுக்கு எம்.எல்.ஏ. டிக்கெட் கொடுத்ததைக் கண்டித்து, கட்சிக்குள்ளேயே போராட்டம், எதிர்ப்பு, உண்ணாவிரதம்-என்று கிளம்ப தள்ளாட்டம்தான்.

எந்தப் பிரச்னையும் இல்லாமல், அல்லது ஏராளமான பிரச்னைகள் இருந்தும் எதைப் பற்றியும் கவலைப் படாமல் 'ரெடி ஜூட்' என்று கிளம்பியிருப்பவர் பங்காரப்பா. இவரது சில அதிரடி ஸ்டண்ட்கள் சக கட்சி அரசில்வாதிகளை மட்டுமல்லாது பொது மக்களையும் திணற அடித்திருக்கின்றன. அவரவரும் கோஷ்டி, ஜாதி, தேர்தல் டிக்கெட் என்று மண்டையை உடைத்துக் கொண்டிருக்க, இவர் பாட்டுக்கு ரொம்பக் கூலாக இந்த நேரம் பார்த்து ஒரு காசெட் வெளியிட்டார். தேர்தல் பிரசாரத்துக்கான ஆவேசப் பேச்சு அடங்கிய ஆடியோ கேசட் என்று நினைத்தால் நீங்கள் ஏமாந்தீர்கள். அத்தனையும் இவர் பாடிய மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய கேசட்! அடுத்த நாள் வந்த செய்தி இன்னொரு அதிரடி கலக்கல்: "பங்காரப்பா கட்சியில் டிக்கெட் கிடைக்காததால் இரண்டு பேர் தீக்குளிக்க முயற்சி! ஒருவர் இறந்தும் போய்விட்டார்!"

பெருவாரியான இடங்களைக் கர்நாடக காங்கிரஸ் கட்சி பெறாவிட்டாலும் போட்டியிடும் அத்தனை இடங்களிலும் காங்கிரஸின் அடித்தளத்தை இது அசைக்கப் போகிறது என்பது மட்டும் உண்மை. "நாங்கள்தான் வெற்றி பெறுவோம். ஏனெனில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறும் ரகசியம் எனக்குத் தெரியும். அதனால் அதனை எங்கே எப்படி சந்திப்பது என்பதும் எனக்குத் தெரியும்" என்கிறார் பங்காரப்பா.

"மலைநாடு மற்றும் கர்நாடகத்தின் வடக்கேயுள்ள கடற்கரை ஓரங்கள்... இந்தப் பகுதிகளிலெல்லாம் பங்காரப்பாவின் கர்நாடக காங்கிரஸுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. கிராமப் புறங்களில் இவர் செய்யும் தமிழ்நாட்டு அரசியல் பாணிப் பிரசாரம் மக்களிடையே திகைப்பை ஏற்படுத்தியுள்ளது. முப்பது முதல் நாற்பது சீட்டுகள் வரை பங்காரப்பா பெறலாம்"- என்று கூறுகிறார் ஒரு தினப்பத்திரிகையின் ஆசிரியர்.

இவர்களுக்கிடையில் பேராசிரியர் நஞ்சுண்டசாமியின் விவசாயிகள் சங்கமும் இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளும் வோட்டுக்களைப் பிரிப்பதன் மூலம் வெற்றி தோல்விகளைத் திசை திருப்பும் சக்திகளாக விளங்குகின்றன. ஆக மொத்தத்தில் வெற்றி யாருக்கு? பிரபல ஜோதிடர்கள் கூட கப்சிப்!

பெங்களூரிலிருந்து: **அமுதவன்**



நம்மவர்

தமிழ் சினிமாவின் மூடநம்பிக்கைகள் பலவற்றை இந்தப் படத்தில் தவிர்த்திருக்கிறார்கள். சோகம் என்றால் பிழியப் பிழிய அழுதாக வேண்டும் என்பதில்லை; காதல் என்பது ஊட்டி மலைச்சாரலில் பூக்களின் நடுவேதான் எட்டிப் பார்க்க முடியும் என்பதுமில்லை என்றெல்லாம் நிரூபித்திருக்கிறார்கள். (சண்டைக் காட்சிகளை மட்டும் தவிர்க்க முடியவில்லை!)

ஒரு கல்லூரி ஆசிரியரின் வாழ்க்கைதான் கதை. கமல் கல்லூரி ஆசிரியர். காதலுக்கு கௌதமி. பின்னவர் நடிப்பில் மிகப் பெரும் வளர்ச்சி. கமல் பற்றிக் கேட்கவா வேண்டும்? வானமே எல்லை எனில் அதையும் தொட்டிருக்கிறார்.

மகன் இறந்துவிடும்போது நாகேஷின் நடிப்பு, தமிழ் சினிமா இன்றுவரை அறியாத ஒரு கலைப் படைப்பு. அளவிட முடியாத ஆழ்ந்த சோகத்தைக் கூட இவ்வளவு மென்மையாக வெளியிட முடியும் என்பது ஒரு பாடம் - கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு.

காதல் காட்சிகளும் அப்படியே. பொய்க் கலப்பில்லாத சுத்தமான உணர்வுப் பிரவாகம். கொஞ்சமாய் டயலாக். நிறைய பாவங்கள். கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டிய லைட்டிங். காமிரா மலைச்சாரல் ஓடையாய் வழிகிறது.


ஒவ்வொரு காட்சி முடிவிலும் நறுக்கென்று ஷாட், அந்த சீனின் மொத்த சாரத்தையும் வடித்தெடுத்தாற்போல். அப்புறம் மெள்ள வழுக்கிக் கொண்டு அடுத்த சீன்.


திக்குவாயாய் நடிப்பவர், வில்லன் பையன் போன்றோர் புதிய அறிமுகங்கள் என்றாலும் பெயரெடுக்கும் அளவுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

மகேஷ், பாடல்கள் அனைத்தையும் சீனுக்குப் பொருத்தமாய் அமைத்திருப்பது விசேஷம். பின்னணி இசையிலும் கவனம் தெரிகிறது.

இவ்வளவு அற்புதங்களையும் செய்வதற்கு சேதுமாதவன் என்ற தைரியசாலிதான் தேவைப்பட்டிருக்கிறார். ஒவ்வொரு காட்சியையும் பொறுமையாய் மனத்தில் பதிய வைக்க அவர் எடுத்திருக்கும் முயற்சிகளுக்கு ஒரே பரிசு : சீக்கிரம் குடும்பத்தோடு தியேட்டருக்கு விரையுங்கள் சார்!

— துளசி


மழை
மழையாம்
ஜோக் மழையாம்!
மதி...
பார்த்து வாங்க, அங்கங்கே
மேன்ஹோல் திறந்து கிடக்கும்!


உங்க தலைவர் யாருக்கும் தலை வணங்க மாட்டார்னு சொன்னியே!
பல்லவன்
அம்பேத்கார்
ஆகவே, மக்களே உங்கள் பொன்னான வாக்குகளை...
45 அடி பள்ளம்
63 அடி பள்ளம் இடது பக்கமாக போகவும்
69 அடி பள்ளம்
30 அடி பள்ளம் வலது பக்கம் திரும்பு!

எக்ஸ்நோரா - மாணவர் பிரிவும் கொடாக் நிறுவனமும் இணைந்து, மாணவ-மாணவிய ருக்கான புகைப்படக் கலை பற்றிய பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன. அதில் பங்கேற்ற பத்மா சேஷாத்ரி பள்ளி மாணவி சிவசங்கரி, மாணவன் ஆனந்த் (எட்டாம் வகுப்பு) இருவரும் திரைப்பட ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராமைச் சந்தித்தார்கள். புகைப்படக் கலை பற்றிய பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

சிவசங்கரி : போட்டோகிராபி என்றால் என்ன?

பி.சி. ஸ்ரீராம் : சொல்கிறேன். முதலில் புகைப்படக்கலை பற்றிய பயிற்சியின் போது நீங்கள் எதையெல்லாம் போட்டோ எடுத்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்....

சிவசங்கரி : நான் முதலில் யானையை எடுத்தேன்.

ஆனந்த் : இரண்டு சொக்குகள் ஜோடியாக நின்றதைப் பார்த்தேன். உடனே கிளிக் செய்து விட்டேன்....

ஸ்ரீராம் : அவற்றை எதற்காகப் போட்டோ எடுத்தீர்கள்?

சிவசங்கரி, ஆனந்த் (இருவரும்): அழகாக இருந்தது: எடுத்தோம்.

ஸ்ரீராம் : ம்.. அதுதான் போட்டோ கிராபி என்பது. நாம் பார்க்கிற அழகான ஒரு விஷயத்தை மற்றவர்களுக்கும் உணர்த்தப் பயன்படுகிற ஒரு பாஷைதான் போட்டோகிராபி.

ஆனந்த் : பயிற்சியின்போது எங்களுக்குக் கொடுக்கப்பட்ட கேமராவும் இப்போது நீங்கள் எங்களுக்குக் காட்டுகிறீர்களே... இந்தக் கேமராவும் ஒன்றுதானா? இவற்றால் எடுக்கப்படும் படங்களில் வித்தியாசம் இருக்காதா?

ஸ்ரீராம் : நிச்சயமாக வேறுபாடு இருக்கும். ஆனால் உங்களைப் போன்று போட்டோ கிராபியைக் கற்றுக் கொள்ள ஆரம்பிப்பவர்களுக்குச் சாதாரண கேமராவே போதும். போட்டோவின் ஆரம்பம் என்ன? கிளிக் செய்தால் 'பொம்மை' வரவேண்டும் என்பது தான். இதுதான் அரிச்சுவடி.. அதன் பிறகு தான் இந்த பொம்மை இப்படி வந்திருக்கலாமே- அப்படி வந்திருக்கலாமே- என்று உங்களுக்கே தோன்றும். இதெல்லாம் பழக்கத்தில்தான் தோன்றும் என்பதால் ஒரே நாளில் சொல்லிக் கொடுத்துவிட முடியாது.

சிவசங்கரி : அப்படியானால் போட்டோ கிராபியை முறையாகக் கற்றுத் தருவதற்குக் கல்லூரிகள் ஏதும் கிடையாதா?

ஸ்ரீராம் : சினிமாடோகிராபிக்குத்தான் இருக்கின்றனவே தவிர, ஸ்டில் போட்டோ கிராபிக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இதையும் கல்லூரி-பள்ளிகளில் சொல்லித் தருவது அவசியம் என்று தான் கருதுகிறேன்.

ஆனந்த் : ஸ்டில் போட்டோ எடுப்பதற்கான அரிச்சுவடிகள் என்னென்ன?'



• நாம் எடுத்த படங்களைக் காட்டி விளக்குகிறார் ஸ்ரீராம்.

ஸ்ரீராம் : போட்டோகிராபி என்பது அடிப்படையில் நாம் ஒரு காட்சியைப் பார்ப்பது போல்தான். நாம் ஒரு காட்சியை எப்படிப் பார்க்கிறோம்? கண் முதலில் பார்க்கிறது. கண்ணுக்குள் இருக்கும் லென்ஸ், வெளியில் தெரியும் காட்சியை விழித் திரையின் மேல் பிம்பமாக விழச் செய்கிறது. அந்த பிம்பத்தை மூளை 'டெவலப்' செய்து அந்தக் காட்சியை நம்மை உணரச் செய்கிறது. இல்லையா?

போட்டோ பொடிசுகளுடன் கேமரா கிங்!

இதேதான் போட்டோகிராபியும். கண்ணுக்குப் பதில் அங்கே கேமரா - லென்ஸ். விழித்திரைக்குப் பதில் பிலிம். நமக்குள் மூளை செய்கிற காரியத்தை போட்டோகிராபியில் கெமிக்கல்களைக் கொண்டு டெவலப் செய்து பிரிண்ட் போடுகிறோம். அடிப்படை இதேதான்.

சிவசங்கரி : அபெர்சர், ஸ்பீட் அட்ஜஸ்ட்மெண்ட் என்று கேமராவில் சொல்கிறார்களே, அதைக் கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்....

ஸ்ரீராம் : அபெர்சர் என்பது வேறொன்றுமில்லை. கண்ணில் 'பாவை' இருக்கிறதே அதேதான். அதாவது, மிகவும் பிரகாசமான வெளிச்சத்தை நாம் பார்க்கிறபோது, கண் பாவை என்ன செய்கிறது? சுருங்குகிறது. வெளிச்சம் நார்மலாக இருந்தால் அதுவும் நார்மலாக இருக்கிறது. வெளிச்சம் குறையக் குறைய பாவையும் விரிந்து கொண்டே போகிறது. காரணம், விழித்திரையில் பிம்பம் ஒரு சரியான வெளிச்சத்தில் விழும் போதுதான் பார்க்க முடியும். இதேதான் கேமராவிலும் அபெர்சர் மூலம் அட்ஜஸ்ட் செய்து படம் பிடிக்கிறோம்; வெளிச்சத்துக்குத் தகுந்த மாதிரி அபெர்சரை சுருக்கவோ, விரிக்கவோ செய்கிறோம்.

அப்புறம் ஸ்பீட். கேமராவை நாம் கிளிக் செய்கிறபோது, ஒரு விநாடியில் எத்தனையில் ஒரு பகுதி நேரம் கேமராவின் ஷட்டர் திறந்து மூடுகிறது என்பதுதான் ஸ்பீட் அட்ஜஸ்மெண்ட் என்பது. இதெல்லாம் நாம் படம் எடுக்கிறபோது கிடைக்கும் வெளிச்சம், நாம் எதை போட்டோ எடுக்கிறோமோ - அது அசையும் பொருளா, அசையாப் பொருளா - என்பதையெல்லாம் பொறுத்து மாறுபடும். இதைப் பழக்கத்தில்தான் சரியாகப் புரிந்து கொண்டு செயல்பட முடியும்.

ஆனந்த் : பிலிமிலும் ஸ்பீட் பிலிம் என்று சொல்கிறார்களே, அது எதற்கு?

ஸ்ரீராம் : அதுவும் நமக்குக் கிடைக்கிற வெளிச்சம், எடுக்கப்படுகிற காட்சி இவற்றுக்குத் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் செய்து கொண்டு போட்டோ எடுப்பதற்கான ஒரு வசதிதான். இதுவும் பழகப் பழகத்தான் வரும்.

சிவசங்கரி : இப்போது ஆட்டோமேடிக் அட்ஜஸ்ட்மெண்ட்கள் உள்ள கேமராக்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே?

ஸ்ரீராம் : உண்மைதான். ஆனால் உண்மையிலேயே போட்டோகிராபியைக் கற்றுக் கொள்ள நினைப்பவர்கள் எடுத்தவுடனேயே ஆட்டோமேடிக் சிஸ்டத்தை உபயோகிக்கக் கூடாது. ஆரம்பத்தில் எல்லா அட்ஜஸ்ட்மெண்ட்களையும் சுயமாகச் செய்துதான் போட்டோ எடுக்க வேண்டும். பழகப் பழக உங்கள் அட்ஜஸ்ட்மெண்ட்களும் ஆட்டோமேடிக் அட்ஜஸ்ட்மெண்ட்களும் ஒன்றாகவே இருப்பதைக் கண்கூடாகப் பார்ப்பீர்கள்.

ஆனந்த் : ஒரு போட்டோ என்பது எப்படி இருக்க வேண்டும்?

ஸ்ரீராம் : அது எடுப்பவர், எதற்காக அந்த போட்டோவை எடுக்கிறார் என்பதைப் பொறுத்தது. உதாரணமாக பாஸ்போர்ட் சைஸ் போட்டோ எடுக்க வேண்டுமானால், முகம் பளிச்சென்று தெரிகிற மாதிரி இருப்பது அவசியம். காரணம், அந்தப் போட்டோவின் நோக்கமே, முகம் சந்தேகத்திற்கு இடமின்றி அனைவருக்கும் அடையாளம் தெரிய வேண்டும் என்பதுதான். ஆனால், வயதான ஒரு பெரியவர், மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்தபடியே அந்த நிழலில் கண்ணயர்ந்து கொண்டிருக்கும் ஒரு காட்சியை எடுத்துக் கொள்வோம். அவர் ஏன் அந்த நேரத்தில் அந்த மர நிழலில் சாய்ந்தபடி கண்ணயர்ந்து கொண்டிருக்கிறார்? காரணம், கொளுத்துகிற வெயில். அதில் நடந்து வந்த களைப்பு. நீங்கள் எடுக்கும் ஒரு போட்டோவில் இத்தனை விஷயங்களையும் சொல்லியாக வேண்டும். எப்படி எடுப்பது? மரநிழலில் அவர் சாய்ந்தபடி இருப்பதால் முகம் அத்தனை பிரகாசமாக இருக்காதுதான். எனவே, முகம் பளிச்சென்று தெரிய ஃப்ளாஷ் போட்டு எடுத்து விடலாமே என்று எண்ணி விடக் கூடாது. அப்படி எடுத்தால், வேலை வெட்டி இல்லாத ஒரு பெரியவர் மரத்தடியில் சாய்ந்து பொழுது போகத் தூங்குகிறார்

அடுத்த இதழில்....

●● சூப்பர் ஸ்டார் சச்சின்!

- சிறப்புக் கட்டுரை

●● துப்புரவுத் தொழிலாளரின் துயர் என்று நீங்கும்?

என்று உண்மைக்கு எதிர்மறையான செய்தியைச் சொல்லி விடக்கூடும்.

எனவே, அவர் மரத்தடியில் சாய்ந்து கண்ணயர்கிற நிலையை கிடைக்கிற வெளிச்சத்தை மட்டும் பயன்படுத்தித்தான் எடுக்க வேண்டும். அவர் அருகில் வைத்திருக்கும் மூட்டையும் போட்டோவில் வர வேண்டும். அப்போதுதான் அவர் ஒரு பயணி என்பது தெரியும். கூடவே போட்டோவின் பின்னணியில் தெரிகிற பொட்டல் காடும் கூச வைக்கும் வெயிலும் வர வேண்டும். அப்போதுதான் போட்டோவைப் பார்க்கிறவர்கள் விளக்கமேதும் இல்லாமலேயே இத்தனை செய்திகளையும் தெரிந்து கொள்ள முடியும்.

சிவசங்கரி : அடேயப்பா! ஒரு போட்டோ எடுப்பதில் இத்தனை விஷயங்கள் இருக்கிறதா?

ஸ்ரீராம் : ஆமாம். நான் சென்ற வாரம் சினிமா லொக்கேஷன் பார்ப்பதற்காக குட்டநாடு என்ற கிராமத்திற்குச் சென்றிருந்தேன். கேரளாவில் உள்ள அந்த ஊர், தண்ணீரால் (பேக்வாட்டர்) சூழப்பட்டது. நாம் வீட்டை விட்டு வீதியில் இறங்குகிற மாதிரி அவர்கள் தண்ணீரில்தான் இறங்க முடியும். எனவே, வீட்டை விட்டு வெளியில் செல்ல வேண்டுமானால் அவர்களுக்குப் படகு அவசியம். அதில்தான் சென்றாக வேண்டும். ஆக, படகு என்பது அவர்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒன்று. அப்படிப் பிரித்து விட்டால் அவர்களின் வெளியுலக வாழ்க்கையே ஸ்தம்பித்துப் போய்விடும். இந்த நிலையில் அந்த மக்களைப் படமெடுக்கும் போது, படகிலிருந்து பிரித்துப் படமெடுத்தால் என்னவாகும்? அந்த ஊரினுடைய - தனித் தன்மை வெளிப்படாது. அப்புறம் அந்த போட்டோவில் எப்படி ஒரு செய்தி இருக்க முடியும்? ஆக, போட்டோகிராபியில் இதெல்லாம் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

ஆனந்த் : போட்டோ எடுப்பதற்கான சப்ஜெக்ட்களை எப்படித் தேர்ந்தெடுக்கலாம்?

ஸ்ரீராம் : இது அவரவர் டேஸ்டைப் பொறுத்தது. போட்டோகிராபியில் பத்திரிகைகளுக்காகப் புகைப்படம் எடுக்கிற பிரஸ் போட்டோகிராபி, வன விலங்குகளை - இயற்கையைப் படம் பிடிக்கும் நேச்சர் போட்டோகிராபி, ஃபாஷன் போட்டோகிராபி, இண்டஸ்டிரியல் போட்டோகிராபி என்று பல வகை உண்டு. விளையாட்டுகளை மட்டுமே எடுக்கிற ஸ்போர்ட்ஸ் போட்டோகிராபர்களும் உண்டு. இவை எதுவுமே இல்லாமல் 'மழை', 'தாய்மை' என்பது போல் ஏதேனும் ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு போட்டோ எடுப்பவர்களும் இருக்கிறார்கள்.

சிவசங்கரி : ஒரு போட்டோகிராபருக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகள் என்ன?

ஸ்ரீராம் : எந்தக் கணத்திலும் கேமராவை இயக்கத் தயாராய் இருக்க வேண்டும். அதே சமயம் பொறுமையும் தேவை. ஒரு நல்ல போட்டோவுக்காக சில சமயங்களில் நாற்பது ஐம்பது பிரேம்களைக் கூட வீணாக்க வேண்டியிருக்கும். அது பற்றியெல்லாம் கவலைப்படக் கூடாது.

ஆனந்த் : சினிமாடோகிராபிக்கு, போட்டோகிராபி தெரிந்திருப்பது அவசியமா?

ஸ்ரீராம் : நான் ஸ்டில் போட்டோகிராபியைத் தொடர்ந்துதான் சினிமாவுக்கு வந்தேன். அப்படியில்லாமல் நேரடியாகவும் சினிமாவுக்கு வர முடியும்.

சிவசங்கரி : எங்களைப் போன்று ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கு உங்கள் அட்வைஸ் என்ன?


ஸ்ரீராம் : போட்டோகிராபி என்பது வெறும் தியரி அல்ல; எனவே, அதை ஒரே நாளில் - ஒரே வாரத்தில் - மாதத்தில் - வருடத்தில் கற்றுக் கொள்ள முடியாது. பழகப் பழகத்தான் ஒரு சிறந்த போட்டோகிராபராக வர முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதோடு, கேமராவின் லென்ஸ் சுத்தமாக இருக்க வேண்டும். கேமராவையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லையென்றால் எதிர்பார்க்கும் ரிசல்ட் போட்டோவில் வராது.

ஆனந்த், சிவசங்கரி : தாங்க் யூ வெரிமச்!

ஸ்ரீராம் : ஆல் த பெஸ்ட்!

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

அட்டை வண்ணப்படமும், படமும் : **யோகா**


உன்னைமாதிரி ஏற்கனவே
ஒன்பதுபேரை சந்திச்சவன்.
நீ என்ன சுண்டக்காய்..!
மாநிலங்களில் தேர்தல்கள்
அமெரிக்கா செல்லவிருக்கும் எங்கள் இதய தெய்வமே...! வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்...
எதிர்க் கட்சிகள்
தமிழ்நாடு சட்டசபை
கன்வேயர் பெல்ட் ஏற்பாடு பண்ணினது நமக்கு வசதியாப் போச்சு! எத்தனை தடவைதான் குண்டுக்கட்டா வெளியே தூக்கிப் போடறது?



கல்கி



1994
நவம்பர் 20
பவ
கார்த்திகை 4
மலர் : 53
இதழ் : 16

ஜனநாயகத்துக்கு மரண அடி!

ஜனநாயகம் என்பது சட்ட மன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமே அல்ல. மக்கள் ஆட்சியில் மக்களிடமே அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனில், அதற்கு அஸ்திவாரம் உள்ளாட்சித் தேர்தல்களே. இதைத் தாமதப்படுத்திக் கொண்டே போவது மக்களின் சுயாட்சி உரிமைகளுக்குத் தடை விதிப்பதே ஆகும்.

உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சிறப்பு அதிகாரிகளின் பதவிக் காலத்தை 1995 டிசம்பர் 31 வரை நீட்டித்து தமிழக அரசு சட்டமியற்ற உத்தேசித்துள்ளது. இதற்காகச் சட்டமன்றத்தில் தாக்கலாகியுள்ள மசோதா, ஜனநாயகத்துக்கு ஒரு மரண அடி.

உள்ளாட்சித் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்த முடியாததற்குக் கூறப்படும் காரணங்கள், நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு என்ற கதையாகத்தான் உள்ளன. தேர்தலை நடத்தக் கூடாது என்று தீர்மானித்த பிறகு, காரணங்கள் கண்டு பிடிப்பது கஷ்டமேயில்லை. சிரமங்கள் இருந்தாலும் நடத்திக் காட்டுவதுதான் சாதனை என்பதை முதல்வர் உணர்தல் வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்காது போனால், அதிகார வர்க்கத்தின் ஆணவம் அதிகரிக்கும். லஞ்ச ஊழல் மலியும். மக்கள் அவதிப்படுவார்கள். மேலும், தங்களுக்கு என்ன தேவை, எதற்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதையெல்லாம் உள்ளூர்வாசிகள்தாம் நன்கு உணர முடியுமே தவிர, அரசு நியமித்த அதிகாரிகள் அல்ல.

'உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்தால் ஊழலே இராதா?' என்றால் ஓரளவு இருக்கும்தான்; ஆனால் அடுத்த தேர்தலில் பதவி இறக்கம் செய்யும் அதிகாரம் மக்களிடம் இருக்குமல்லவா? இந்த அதிகாரம் அடிமட்டத்திலிருந்தே செயல்படும் போது, சட்ட மன்றம், நாடாளுமன்றத்திலும் ஆரோக்கியமான பாதிப்பை உருவாக்கும். உள்ளாட்சித் தேர்தல்களை ஒத்திப் போட்டுக் கொண்டே போவது, அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயகக் கோட்பாடுக்கு முற்றிலும் முரணானது.

'ஜெ'யை தெய்வமாகவே மதிக்கும் அளவுக்கு மக்களிடம் அவருக்குச் செல்வாக்கு உள்ளதென்பது உண்மையெனில், உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்த அவர் ஏன் தயங்க வேண்டும்?

தமிழக அரசின் தகிடுதத்தங்கள்!

தமிழக அரசின் ஊழல்களை அடுக்கடுக்காக அம்பலப்படுத்துகிற இந்திய பிரதம கணக்காயரின் அறிக்கை வெளியாகியுள்ளது: அரசு நிறுவனங்கள் தங்களிடம் உள்ள உபரி பணத்தை அரசுடைமையான வங்கிகளில்தான் போட்டு வைக்கலாம் என்ற விதியை மீறி, லிட்கோ நிறுவனம் அதை ABFSL நிறுவனத்தில் போட்டு வைத்தது. அந்த நிறுவனத்துக்கும் பங்கு பத்திர ஊழலில் சம்பந்தப்பட்டிருந்த ஃபேர்குரோத் நிறுவனத்துக்கும் தொடர்பு இருந்ததால், லிட்கோவுக்கு 150 லட்சம் ரூபாயும் வட்டியும் நஷ்டமாயிற்று. இதை எடுத்துக் காட்டும் பிரதம கணக்காயரின் அறிக்கை, ஸ்பிக் நிறுவனம் தொடர்பாக நடந்த பேரத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது:


ஸ்பிக் விவகாரத்தில் ஷேர்களைக் குறைத்து மதிப்பிட்ட காரணத்தால், எம்.ஏ. சிதம்பரம் அசோசியேட்ஸ் நிறுவனத்துக்கு பாண்டு பத்திரங்களை விட்டுக் கொடுத்ததில், அரசு நிறுவனமாகிய டிட்கோவுக்கு 12 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது பிரதம கணக்காயரின் அறிக்கை.

'இவ்வாறு குறைத்து மதிப்பிடுவது தவறு' என்று எடுத்துக்காட்டப் போய்த்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகாவுக்குப் பதவி பறிபோனது. பின்னால் திராவக அபிஷேகமும் நடந்தது. யாரும் மறந்திருக்க முடியாது. இப்போது பிரதம கணக்காயரே (ஆடிட் விசினாலும்) 'குற்றம் குற்றமே' என்று எடுத்துக் காட்டியுள்ளார். அரசின் பதில் என்ன?

''குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டி அரசுக்கு எழுதினோம். இன்று வரை பதிலே இல்லை'' என்கிறது பிரதம கணக்காயரின் அறிக்கை!

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா — பாரதியார்

Kalki Shopping Page



Buy
SAREES
PANT BITS
SHIRTINGS &
READYMADES

LIBERTY STORES

- R.S.PURAM
- GANDHIPURAM
- SAIBABA COLONY
- ZIMSON SHOPPING ARCADE

KAYCEE

Quality Textiles

SAIBABA COLONY - COIMBATORE

L.S.MANI

கலைப்பிரியர்களுக்கு மட்டும்

மாதம் **2**

- புதிய திரைப்படங்கள்
- நாடகங்கள்
- இன்னிசை நிகழ்ச்சிகள்

CINEMA	DRAMA	MUSIC	DANCE

All at A/c Theatres Only.

மறுமலர்ச்சி ஆர்ட்ஸ் அகாடமியின் 16வது ஆண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு புதிய உறுப்பினர்களுக்கு பல சலுகைகள் காத்திருக்கிறது.

இன்றே உறுப்பினராவீர்.

விவரங்களுக்கு
மறுமலர்ச்சி ஆர்ட்ஸ் அகாடமி (பதிவு)
அலுவலக எண் 18, முதல்மாடி
266, P.H. ரோடு, அமைந்தகரை,
சென்னை - 600 029. Phone : 6424998

Add Sales

கேட்டறியுங்கள் உங்கள் புதிய

ஜாதகபலன் ஜோதிட போன்

இந்த வாரபலன்கள்

0011 222 222 0+☐☐

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் குரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் டயல் செய்யவும்.

31	32	33	34	35	36
மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி
37	**38**	**39**	**40**	**41**	**42**
துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்

மன ஜோதிடம்

உங்கள் வருங்கால ரகசியங்களை அறிந்திருங்கள்



☎ **0011 222 222 030**

பொருத்தம்



உங்கள் துணையும் நீங்களும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்களா? என்று தெரிந்து கொள்ளுங்கள்

0011 222 222 043

பட்சி சாஸ்திரம்



ஒரு பண்டைய ஆருட முறை உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில் சொல்கிறது.

☎ **0011 222 222 025**

இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ. யு.எஸ்.ஏ.

Kalki Shopping Page

இயற்கை மூலிகைப் பொடிகள் சிகிச்சை

சர்க்கரை, ஆஸ்த்மா, மூட்டுவலி, நரம்புத் தளர்ச்சி, ஞாபக சக்தி, அல்சர், காஸ்டிரிக், மூலம், B.P., இருதயக் கோளாறு, தோல் வியாதிகள், உடல் இளைக்க, கிட்னி, விஷக்கடிகள், முடி கறுத்து நீண்டு வளர, கர்ப்பப்பை கோளாறுகள், கண் தொல்லைகள் முதலியவற்றிலிருந்து பூரண குணம் பெற நம் மூன்னோர்கள் சித்தர்கள் கூறியபடி நோய் வென்று வாழலாம். பரம்பரை சித்த வைத்தியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை அபூர்வ மூலிகைப் பொடிகள் அனைத்தும் கிடைக்கும்.

மருத்துவரை நேரில் சந்திக்க மாலை 5 to 8.

SAKTHI NATURE CURE RESEARCH AND SERVICE CENTRE

1, YMCA BUILDING, ROYAPETTAH,
MADRAS -600 014. Ph: 831141
(Opp. Govt. Royapettah Hospital)

உயர்ரக சுங்குடி
புடவைகள் மற்றும்

ராணி சாரீஸ்

இந்த துணி லேபிலை
கவனித்து வாங்குங்கள்

RANI SAREES
MADURAI - 12
R.A.M

தரத்தின் உத்திரவாதம்

மதுரை
டெக்ஸ் டைல்ஸ்

2.சிவப்பிரகாசம் ரோடு,
பாண்டி பஜார், சென்னை-17.
(பிரில்லியண்ட் டுடோரியல் அருகில்)

A range of emotions from

GRASIM GWALIOR SUITING

IN A CLASS OF ITS OWN

SUITING - SHIRTING
READYMADES
EXCLUSIVE SHOWROOM

KRISHNA

170, N.S.R. ROAD,
SAIBABA COLONY
COIMBATORE - 641 011.
PHONE: 441292

L.S.MANI

Adyar
STUDENTS XEROX

- **ADYAR**
  Opp Adyar Bus Terminus ☎:411358
- **ANNA SALAI**
  Near Anand Theatre ☎:8521433
- **ANNA NAGAR WEST**
  Thirumangalam Junction ☎:6261764
- **NUNGAMBAKKAM**
  Near Ganpat Hotel ☎:8278983
- **PONDY BAZZAR**
  Next to Nagesh Theatre ☎:4346580
- **TEYNAMPET**
  Opp. Anna Arivalayam ☎:454845
- **MYLAPORE**
  Opp.Jammi Building ☎:4997380
- **GUINDY**
  Opp.Railway Station ☎:2347016
- **PARRYS**
  Opp.High Court ☎:582513

♦ துணுக்கு ஸ்பெஷல் என்பதற்காகத் தலையங்கத்தைக் கூட மூன்று சிறு பகுதிகளாகத் தான் (துணுக்கு சைஸில்) வெளியிட வேண்டுமா?
சேலம் - 2, சூர்யநிலா

♦ ஒரே ஒரு பக்கத்தில் மூன்று விஷயங்கள் குறித்துத் தலையங்கம் எழுதியிருப்பது பாராட்டுக்குரியது. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்கிற பழமொழிக்கு உதாரணங்களாக அமைந்து விட்ட முத்தான - சத்தான தலையங்கங்களுக்கு மீண்டும் மீண்டும் பாராட்டுகள்.
பெங்களூர் - 72, ப.மூர்த்தி

♦ எம்.ஜி.ஆரின் புகழையும் பெருமையையும் மட்டுமே தமது தகுதியாகக் கொண்டு



ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, இன்று தமிழக மக்களின் சொத்தாகி விட்ட எம்.ஜி.ஆரை வைத்து 'அடிமட்ட அரசியல்' நடத்துவதைத் தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்!
சேலம் - 6, பொன்.குமார்.

♦ 'துணுக்கு ஸ்பெஷலில்' ஏராளமான துணுக்குளை அள்ளி வழங்கி, எங்களை 'துணுக்'குறச் செய்து விட்டீர்கள்!
தஞ்சாவூர் - 5, வனிதா ரவி

♦ துணுக்கு ஸ்பெஷலில் வெளியான ஒவ்வொரு செய்தியும் மொறுகலான நொறுக்ஸ் தான்... ஜமாய்ச்சிட்டீர் வாத்யாரே..!
சேலம் - 9, மு.இரவிச்சந்திரன்

♦ துணுக்கர்கள் வாழ்விலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் கூட துணுக்கைப் போன்றே சுவையாக இருந்தன.
போளூர், எல்.பாபு

♦ இந்த வாரம் ஏன் கல்கி லேட்டு? அதுக்கு ஒரு குட்டு (லேசாத்தான்). ஆயினும் துணுக்கு ஸ்பெஷல் அத்தனையும் தேன் சொட்டு!
தம்மம்பட்டி, க.கிருஷ்ணமூர்த்தி.

♦ தென்பாண்டி மக்களின் தெய்வமாக மதிக்கப்படும் தேவரைப் பற்றி ரத்தினச் சுருக்கமாகச் சொல்லி, அவருக்குச் சிறப்பு சேர்த்த விதம் அபாரம்.
கும்பகோணம் - 1, எஸ்.கே.மூர்த்தி

♦ வருடத்தின் முக்கிய தினங்கள் மிகவும் பயனுள்ள விவரங்கள். ஆனால் அதில் மிகவும் முக்கிய மான "ஆகஸ்ட்-15" சுதந்திர தினம் என்பதைக் குறிப்பிடாதது ஏனோ?
சென்னை - 83, எஸ்.கிரிஜா.

♦ 'வருடத்தின் முக்கிய தினங்கள்' என்ற தொகுப்பில், டிசம்பர் 24- "உழவர் தினம்" எனக் குறிப்பிட்டது தவறு: ஜனவரி 16 என்று இருத்தல் வேண்டும்.
அயன்புரம், கி.ராமதாஸ்.

♦ இந்து சமுதாயத்தில் கணவன் ஒருவனுக்கு ஏற்படும் விபத்து, மனைவியை எந்தெந்த விதத்தில் பாதிக்கச் செய்கிறது என்பதை உணர்ச்சி பூர்வமாக, 'ஒரே ஒரு பூ' என்ற சிறுகதை மூலம் வெகு சிறப்பாக சித்திரித்துக் காட்டியுள்ளார் கிருஷ்ணா. பாராட்டுகள்.
வால்குடி, எம்.இராஜேந்திரன்

வேட்டோனாலும் தேன் சொட்டு!



●● யாரையாவது போட்டியாகக் கருது கிறீர்களா?" என்று சுகன்யாவிடம் கேட்டபோது ரொம்பவும் சாந்தமாகச் சொன்னார்: சினிமாவில் போட்டின்னு யாரையும் பெரிசா எடுத்துக்கக் கூடாது. இந்த கேரக்டருக்கு சுகன்யா பெட்டர்னு டைரக்டருக்கும் தயாரிப்பாளருக்கும் தோணுச்சுன்னா என்னைத் தேடி வருவாங்க... நம்ம பர்ஃபாமன்ஸை வைச்சுத்தானே நம்ம மார்க்கெட்டே!

●● சரண்யாவைச் சந்தித்தபோது ஆதங்கத்தோடு பேசினார்... "சிவலப்பேரிபாண்டி படத்தில் நான் நன்றாக நடித்திருந்தும் எனக்கு வேறு படங்களில் நடிக்க சான்ஸ் வரவில்லை. என்னதான் திறமையும் முயற்சியும் இருந்தாலும் சினிமாவைப் பொறுத்தவரை அதிர்ஷ்டம் நிச்சயம் வேண்டும்!"

சரத்குமாரின் புதிய பாலிசி!

●● காதலன் படத்தில் வந்த ராப் பாடலைப் போல பாண்டியராஜன் நடிக்கும் 'வள்ளி வரப் போறா' படத்திலும் ஒரு ராப். திரோஷா டான்ஸ்(?) ஆடும் இந்தப் பாடல் காட்சியை 140 ஷாட்டுகளாகப் படம் பிடித்திருக்கிறார்கள். தமிழில் அதிக ஷாட்டுகள் கொண்ட பாடல் இதுதானாம்!


●● சரத்குமாரின் சமீபத்திய பாலிசி, (டேக் இட் ஈஸி பாலிசி அல்ல) ஒரே ஷெட்யூலில் முழு படத்தையும் முடித்துக் கொடுப்பது. 'நாட்டாமை'யை இப்படித்தான் ஒரே மூச்சில் முடித்துக் கொடுத்தார். இப்போது 'வேலுச்சாமி' படத்திற்காக தொடர்ந்து நாற்பது நாட்கள் கால்ஷீட். இதனால் தயாரிப்பாளர்கள் மகிழ்ந்துபோய் இருக்கி றார்கள்.



●● குஷ்பூவுக்குக் கோயில் கட்டிய கால மெல்லாம் போச்சு என்பது மட்டுமல்ல; முன்பு ஐந்து லகரம் வாங்கிய கையால் மூன்று லகரத்திற்கு இறங்கி வந்து விட்டார். இனி வரப் போகும் 'முத்துக் குளிக்க வாரீயளா' படத்தில் கனமான பாத்திரமாம் குஷ்பூவுக்கு. அதன் பிறகாவது மார்க்கெட்டும் கனமாகுமா?

●● இரண்டு நடிகைகள் 'விடுதலை'யை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். டைரக்ட் செய்பவர் ஸ்ரீபிரியா. கதாநாயகியாக நடிப்பவர் ராதிகா. ஆனால் சினிமாவல்ல; சன் டீவிக்கான பதின்மூன்று வாரத் தொடர்!

தொகுப்பு: **ராம்கம்பர்**



திருட ஒரு பரபரப்பு; கொளுத்த ஒரு உறுத்தல்!

தீபாவளிக்குச் சுமார் ஒரு வாரம் முன்பு, ஒரு குடும்பமே கைது செய்யப்பட்டது! எதுக் காகன்னு நினைக்கறீங்க? ரொம்ப ஒற்றுமையா ஒண்ணு சேர்ந்து ஜவுளிக் கடைகளில் துணி திருடினதற்காக! இவங்க வீட்டை சோதனை போட்டப்ப, பல்லாயிரக்கணக் கான ரூபாய் மதிப்புள்ள துணிமணிகள் அகப்பட்ட தாம்.

இந்தச் செய்தியைப் படிச் சுட்டு ஒருத்தர் என்கிட்டே கேட்டார் :

''திருடறது கூட ஒரு நோய்னு சொல்வாங்களே டாக்டர்... கிளெப்டோ மேனியா....''

''அப்படியெல்லாம் சொல்லி பக்கா திருடர்கள் தப்பிச்சுக்க முடியாது'' என் றேன்.

கிளெப்டோமேனியா என்ற ஒரு வகை நோய் இருப் பது உண்மைதான். ஆனால் உலகிலேயே அற்ப சொற்பம் பேருக்குத்தான் இந்த நோய் இருக்குது. இதனாலேயே இந்த நோய் பத்தி அதிக ஆராய்ச்சி பண்ணப்படலை. இதுக்கு முறையான சிகிச்சையோ தீர்வோ கண்டு பிடிக்கப்படலை.


கிளெப்டோமேனியா என்கிறது ஒரு வகை நடத்தைக் கோளாறுன்னு சொல்லலாம். இதனால் பாதிக்கப்பட்ட வங்க பிறருடைய பொருள்களை எடுத்துக்கிட்டு போயிடு வாங்க. இதைத் 'திருட்டு'ன்னு சொல்ல முடியாது. காரணம், அவங்க அந்தப் பொருளை எடுத்துக்கிட்டுப் போறது, அதை வித்து லாபம் பார்க்கவோ அல்லது அனுபவிச்சு சந்தோஷப் படவோ அல்ல. பெரும்பாலும் அதிக மதிப்பில்லாத பேனா, ஸ்பூன் மாதிரியான சின்ன பொருள்களாகக் கூட அது இருக்கும். கிளெப்டோமேனியாகாரங்களுக்கு இந்த மாதிரி பொருள்களை எடுத்துக்கிட்டுப் போகணும்னு ஒரு உந்துதல் உள்ளுக்குள்ளே இருக்கும். அது அதிகமாகி அதிகமாகி பயங்கர டென்ஷனாயிடுவாங்க. ஒரு பொருளை எடுத்த பிறகே அந்த டென்ஷன் அடங்கி அமைதி ஆவாங்க. அந்த உந்துதலும் சரி, அதன் விளைவான 'திருட்டு' செயலும் சரி அவங்க கட்டுப்பாட்டுலயே இருக்காது.

ஒரு சிலர், இந்த மாதிரி செய்துட்டமேன்னு பின்னால் வருத்தப்பட்டு, எடுத்த பொருளைத் திருப்பித் தருவதுண்டு. தங்கள் செயலைப் பத்தி வருத்தமோ அவமானவோ இல் லாம, தொடர்ந்து இயல்பா இருக்கிறவங்களும் உண்டு. கிளெப்டோமேனியா உள்ளவங்களுக்கு, பொருள்களை எடுக்கிற நேரத்துல மற்றவங்க பார்க்கிறாங்க அப்படிங்கற உணர்வோ, பயமோ இருக்கவே இருக்காது. அவங்க அதை பகிரங்கமாகவே கூடச் செய்வாங்க.

இந்த பரிதாபகரமான நிலைக்குக் காரணம், மூளை யில் உள்ள ரசாயனக் கோளாறா? அல்லது நரம்பியல் கோளாறா? அல்லது மனவியல் பாதிப்பா? எதுவுமே உறுதி யாகத் தெரியவில்லை! சிறு வயதில் துன்புறுத்தலுக்கும் புறக்கணிப்புக்கும் ஆளானவங்க இப்படி நடந்துக்கக் கூடும்னு ஓர் அனுமானம் இருக்கு. ஆனால் அதுவும் நிரூ பிக்கப்படலை.

இப்போதைக்கு மனவியல் சிகிச்சை மற்றும் behaviour therapy என்கிற சிகிச்சைகளை இந்த வகையானவங்களுக் குக் குடுக்கறாங்க. அதாவது அவங்க தவறா நடந்துக்கற ஒவ்வொரு முறையும் ஒரு சின்ன தண்டனையைக் கொடுப் போம். அவங்களுக்குள்ள உந்துதல் ஞாபகம் வந்து, செய லுக்கு முட்டுக்கட்டை போட ஆரம்பிக்கும்.

சொல்லப் போனா கிளெப்டோமேனியா உள்ள வங்க நிலைமை கூடத் தேவலாம். பொருள்களைத் தீயிட்டுக் கொளுத்தற உந்துதலும் (pyromania) சூதாடிக் கிட்டே இருக்கணும்ங்கற கட்டுப்படுத்த முடியாத உந்துதலும் (pathological gambling) துரதிர்ஷ்டவசமாகச் சிலருக்கு உண்டு! இதெல்லாம் ரொம்ப ரொம்ப அபூர்வமான நோய் கள் என்பதுதான் ஆறுதல்!



— டாக்டர் ரேணுகா

பார்க் டவுன்

பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806
223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354
கிளை: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு ★
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும். 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி
மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/-
முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு
முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535

பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேமிப்பு திட்டம்
10% P.a.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக
டெபாசிட் செய்யும்பொழுதே வழங்கப்படும்.
* தனிபோகம் டெபாசிட் திட்டம் 20%
குறைந்த அளவு ரூ.20,000 டெபாசிட் காலம் 5 ஆண்டுகள்.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❐ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❐ வெள்ளி விடுமுறை

'ஜனநாயகம் என்பது ஓர் அரசியல் சடங்கு; காலத்துக்கேற்ற வாறு இச் சடங்குகள் நிர்ணய மாகின்றன. ஜனங்கள் தங்களிடம் அதிகாரமிருப்பதாக பாவித்துக் கொள்கிறார்கள். எவன் இந்த பாவனையை உருவாக்குவதில் வல்லவனாக இருக்கிறானோ அவனே சிறந்த அரசியல் தலைவன்'– (வேதபுரத்து அரசியல் தத்துவங்கள் – ஆசிரியர்: புரட்சிதாசன். பக்:231-32)

அபூர்வா அவள் அலுவலக அறை யில் உட்கார்ந்திருந்தாள். ஏ.ஸி. சப்தத்தைத் தவிர வேறொன்றும் கேட்காத அளவுக்கு அங்கு அமைதி. அவள் ஃபைல்களில் மூழ்கி யிருந்தாள்.



அமைச்சர்கள் பற்றிய அந்தரங்க ஃபைல். 'இன்டர்-காம்' ஒலித்தது.

"நான் தான் நஞ்சுண்டன் - வரலாமா?"

"வாங்க..."

அபூர்வாவுக்கு அந்த ஃபைல்களைப் படித்த பிறகு, தான் செய்தது சரிதான் என்று பட்டது.

அவள் அமைச்சர்களை அவர்கள் பொறுப்பிலிருக்கும் துறைகளைச் சொல்லும் படி கேட்டபோது, பெரும்பான்மையோருக் குச் சரிவரச் சொல்லத் தெரியவில்லை. அவள் அந்தக் கூட்டத்தை 'திடுதிப்'பென்று கலைத்துவிட்டு எழுந்து போய் விட்டாள்.

சரிவரச் செய்யத் தெரியாதவர்களை அமைச்சரவையினின்றும் நீக்கப் போவதாக அவள் பூர்வ பீடிகையாகச் சொல்லியிருந் தாள்.

இப்பொழுது அதைச் செய்தாக வேண் டும். மந்திரிகள் அனைவருக்கும் 'காகிதப் பட்டங்கள்' அப்பழுக்கற்றிருந்தன. வேதபுரத் துப் பல்கலைக் கழகங்களில் மிகவும் சுலப மாகச் செய்யக் கூடியது பட்டம் பெறுவது என்று தோன்றுகிறது. அமைச்சர்கள் நிய மனம் பெறுவது அவர்களுக்கிருக்கும் வேறு பல தகுதிகளுக்காக; நிர்வாகத் திறமையோ அல்லது மக்கள் நலனில் அக்கறை என்பதோ இத் தகுதிப் பட்டியலில் இல்லை எனத் தெரிகிறது.

கதவு லேசாகத் தட்டப்படும் ஒலி.

"உள்ளே வாங்க."

நஞ்சுண்டன் புன்னகையுடன் வந்தான்.

அவன் மிக பவ்வியமாகக் கேட்டான். "நான் உட்காரலாமா?"

"உட்காருங்க..."

அவன் உட்கார்ந்தான்,

"எல்லா மந்திரிகளும் அரண்டு போயிருக் காங்க," என்றான் அவன்.

"நல்லது."

"ஒண்ணு ஞாபகப்படுத்த விரும்பறேன்."

"என்ன?"

அவன் உடனே பதில் சொல்லவில்லை, மேஜையின் மீதிருந்த 'பேப்பர் வெய்ட்டை' எடுத்துச் சிறிது உருட்டி விட்டான்.

21

வேதபுரத்து வியாபாரிகள்

அவள் அவனை மீண்டும் 'என்ன?' என்று கேட்க விரும்பவில்லை.

பேசாமலிருந்தாள்.

"நீங்க ஒரு ஸ்ட்ராங் வுமன்!" என்றான் நஞ்சுண்டன்,

'இதை எனக்கு ஞாபகப் படுத்துவானேன்? எனக்கே தெரியும்."

"அதை நான் உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்பலே, இதுவும் உங்களுக்குத் தெரியும் – நீங்க மந்திரிகளைச் சீட்டுக் கட்டா குலுக்கிப் போட்டு ஆட முடியாது. அந்த உரிமை தலைவருக்குத்தான்..."

"எங்கே அந்தத் தலைவர், கூப்பிடுங்க, கேட்டுடறேன்..."

நஞ்சுண்டன், திடுக்கிட்ட நிலையில் அவளை நிமிர்ந்து நோக்கினான்.



"என்ன இப்படிப் பேசறேன்னு பாக்க றீங்களா, இந்த நாற்காலி மகிமை..." என்றாள் அபூர்வா.

"அந்த நாற்காலி நிரந்தரமில்லே..."

"உட்கார்ந்தா, நிரந்தரமாக்கிக் கொள்ள முடியும்னு தோணுது. சரி, பேச்சு திசை மாறிப் போய்க் கிட்டிருக்கு... நான் கேட்ட கேள்விக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலே... எங்கே அந்தத் தலைவர்?"

"நீங்க சந்திக்கிறதுக்கு இன்னும் உரிய நேரம் வரல்லே?"

"இதை யார் தீர்மானிக்கிறது?"

"தலைவர்தான்."

"தலைவர்தான் அப்படித் தீர்மானித் திருக்கார்ங்கிறதை நான் எப்படி நம்பறது?"

"நான் சொல்றேன்."

"நீங்க யாரு?"

நஞ்சுண்டன் புன்னகை செய்தான்.

"என்ன சிரிக்கறீங்க?" என்றாள் அபூர்வா.

"வேதபுரத்திலே இந்த மாதிரி பேச்சைக் கேட்டு ரொம்ப நாளாவுது. தலைவரும் உங்களோட பேசறதை விரும்புவார்னுதான் தோணுது..."

"அப்பொ நான் தலைவரைச் சந்திக் கலாமா?"

"அவர் கிட்டேயிருந்து உத்தரவு வந்ததும், கூட்டிக் கிட்டுப் போறேன்..."

"உத்தரவு எப்படி வரும்? நேர்முகச் சந்திப்பிலா, இல்லாட்டா..."

நஞ்சுண்டன் இடை மறித்தான். "பொறுமையா இருங்க..."

"சரி... இந்த அமைச்சரவையே தேவையில்லேன்னு எனக்குத் தோணுது. அவங்களோட இலாக்கா என்னன்னு அவங்களுக் கேத் தெரியலே?..."

"அப்போ சட்டசபை, தேர்தல், பொது ஜன வாக்கு, ஜனநாயகம் எல்லாமே அர்த்த மில்லாமெ போயிடும்."

"இப்பொ அதுக்கு என்ன அர்த்தமிருக்கு?"



விளக்கம் →

"நல்ல கேள்வி. இதிலதான் என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியலே..."

"நான் நினைக்கிறேன்...." என்று கூறியவள், மேலே தொடராமல் நிறுத்தினாள்.

"சொல்லுங்க."

"அந்தந்தக் காலத்துக்கு மனிதனுக்குப் புதுப் புது சடங்கு தேவையாயிருக்கு. இந்தச் சடங்கும் ஒரு பாவனைதான். இந்தக் காலத்துச் சடங்கு ஜனநாயகம். ஜனங்க தங்க கையிலே அதிகாரம் இருக்கிறதா நினைச்சுக்கிற ஒரு பாவனை. வேதபுரத்துக்கு வந்தப்புறந்தான் இதனோட முழு அர்த்தமும் எனக்குத் தெரியுது..."

"நீங்க பிறந்த நாட்லே!" என்று கேட்டான் நஞ்சுண்டன்.

"அது இன்னொரு 'எக்ஸ்ட்ரீம்'...ஜனநாயகங்கிற பேரிலே மக்கள் அராஜகம். பத்து வயசுப் பையன் கையிலே கூட துப்பாக்கி, இங்கே வேதபுரத்திலே அரசாங்க அராஜகம்... இந்த ரெண்டு அராஜகத்திலே எது தேவலைன்னு தீர்மானிக்கிறதுதான் கஷ்டம்."

"மன்னிக்கவும், மேடம். இப்போ இந்த அராஜக அமைப்புக்கு நீங்க துணைத் தலைவர்..." என்று சிரித்துக் கொண்டே சொன்னான் நஞ்சுண்டன்.

"நான் இந்த 'ஸெட்-அப்'பை மாத்தி அமைக்கப் போறேன். அது செய்ய எந்த அளவுக்கு என் கையிலே அதிகாரமிருக்குன்னு எனக்குத் தெரியணும்..."

நஞ்சுண்டன், பேசாமலிருந்தான்.

அப்பொழுது 'இன்டர்-காம்' ஒலித்தது.

அபூர்வா எடுத்தாள்.

வனிதா.

"என்ன மந்திரி சபையைக் கலைச்சுட்டீங்களா? இங்கே எனக்கு டெலிஃபோன் தொல்லை தாங்கலே."

"யார் சொன்னாங்க?"

"ரேடியோவிலும், டீ.வி.யிலும் சொல்லிட்டாங்களாமே?"

"ஐ ஸீ, அப்புறம் உன்கிட்டே நான் பேசறேன்."

அவள் டெலிஃபோனைக் கீழே வைத்தாள். நஞ்சுண்டனை உற்றுப் பார்த்தாள். அவன், தலை சற்றுக் குனிந்த நிலையில் கையிலிருந்த 'பேப்பர்' வெய்ட்டைத் தொடர்ந்து உருட்டிக் கொண்டிருந்தான்.

"அப்போ என்ன செய்யலாம் சொல்லுங்க. நான் இந்த ஆட்களை, அமைச்சர்களை வீட்டுக்கு அனுப்பிச்சாகணும்.. நோட்டு போட்டுத் தலைவருக்கு அனுப்பவா?"

"அவங்களை அனுப்பிச்சாச்சுன்னு உங்களுக்கும் தெரியும்... இப்போ ஃபோன் வந்திருக்கு உங்களுக்கு... அப்புறம் எதுக்காக என்னை ஆழம் பாக்கறீங்க?" என்று கேட்டான் நஞ்சுண்டான்.

"ஆழம் பாக்கலே... உங்களுக்கு அது தெரியுங்கிறப்போ, எதுக்காக என்கிட்டே வந்து என் உரிமையின் எல்லையைப் பத்தி விவாதிக்க வந்தீங்க? தலைவர் எப்படி உத்திரவு இட்டார்? நான் இன்னும் அவருக்கு என் 'நோட்'டை அனுப்பவேயில்லே? எல்லாம் புதிரா இருக்கே?"

"டெலி பதி மேடம், டெலிபதி. தலைவருக்கு இந்த மாதிரி ஒரு புரிதல் இருந்தா... மன்னிக்கவும், வேற வார்த்தை தெரியலேங்கிறதினாலே அதே வார்த்தையைப் பயன்படுத்தும்படியாயிருக்கு – இதுக்குப் பேருதான் 'ஜனநாயகம்'... நீங்க என்ன நினைக்கறீங்கன்னு புரிஞ்சுக்கிட்டு தலைவர் அமைச்சர்களை வீட்டுக்கு அனுப்ப உத்தரவிட்டிருக்கலாம்."

"உங்களுக்கு இது பத்தி ஒண்ணும் தெரியாது?"

"தெரியாது."

"அப்போ நான் எந்த நடவடிக்கை எடுத்தாலும், தலைவர் டெலிபதி மூலம் புரிஞ்சுக்கிட்டு, அதை ஆதரிப்பாரு. அப்படித்தானே அர்த்தம்?"

"இதுக்கு நான் எப்படி வாக்குறுதி தர முடியும்?"

"சரி, எதுக்காக இப்போ என்னைப் பாக்க வந்தீங்க?"

"நீங்க எதுக்காக வேதபுரம் வந்திங்கங்கிறதைப் பத்தி நினைவிருக்கான்னு கேக்க வந்தேன்."

"நினைவிருக்கு... புஸ்தகம் எழுதப் போறேன். ஒரு வேளை புதுத் தலைப்பா இருக்கலாம்."

"என்ன?"

"துணைத் தலைவர் டயரி. அப்போ நான் இங்கே வந்தது, எனக்கேற்பட்ட அனுபவங்கள், துணைத் தலைவரானது எல்லாத்தையும் பத்தி எழுதித்தானே ஆகணும்?"

"நல்லது... அதிலே என் பெயரை இழுக்க வேண்டாம்..."

"அவையடக்கமா? உங்க பெயரைச் சொல்லாம, என் வேதபுரத்து 'டயரி'யை எப்படி எழுத முடியும்?"

● பாராசூட்டிலிருந்து குதிக்கும் பயிற்சி நடந்து கொண்டிருந்தது. பயிற்சியாளர் சொன்னார், "குதிக்கும் போது, குடை பகுதி விரிந்தால் கீழே போவீர்கள்; விரியாவிட்டால் 'மேலே' போய்விடுவீர்கள்."

— ஜ'லி

"எழுத முடியும். நீங்க உங்க சொந்த முயற்சியினாலும், சாமர்த்தியத்தினாலும் இந்த நிலைக்கு வந்தீங்கன்னு தைரியமா எழுதலாம். நீங்க என்னைச் சந்திச்சது, நான் தான் உங்களுக்குக் குடி உரிமை பெற உதவியது - இதைப் பத்தியெல்லாம் எழுதணும்னு அவசியமேயில்லே. தலைவரா பார்த்து உங்களைத் தேர்ந்தெடுத்தார், அவ்வளவு தான்..."

"நீங்க எனக்கு உதவி செய்தீங்கன்னு ஜனங்களுக்குத் தெரியாதா? கலியன், தம்புசாமி..." என்று அவள் சொல்லி முடிப்பதற்குள், நஞ்சுண்டன் குறுக்கிட்டான்.

"யாரும் ஒண்ணும் வாயைத் திறக்க மாட்டாங்க... உங்க கையிலே அதிகாரம் இருக்கிறப்போ, நீங்க சொல்றது பொய்னு வழக்காட யாருக்கும் துணிவிருக்காது..."

"நீங்க ஏன் உங்க பெயர் வர வேணாங்கிறீங்க?"

"நான் எப்போதுமே திரைக்குப் பின்னாலிருப்பதைத்தான் விரும்பறேன்... வெளிச்சம் பட்டா என் கண் கூசும்," என்று சிரித்துக் கொண்டே கூறினான் நஞ்சுண்டன்.

"ஓ.கே. அதை நான் 'டயரி' எழுதறப்போ பாத்துக்கலாம். ஞாபகப்படுத்தியதற்கு நன்றி. இப்போ சொல்லுங்க, எதுக்காக என்னைப் பாக்க வந்தீங்க?"

"அதான் சொன்னேனே?"

"இன்னும் சொல்லலே."

நஞ்சுண்டன் புன்னகை செய்தான்.

அவன் தன் கைப்பையைத் திறந்து ஒரு தாளை அவளிடம் நீட்டினான்.

"என்ன இது?"

"பாருங்க..."

அதில் பல பெயர்கள், முகவரியுடன் காணப்பட்டன. ஒவ்வொருவருக்கும் எண் கொடுக்கப்பட்டிருந்தது.

மை காட்? அவள் விலக்குவதாக இருந்த அமைச்சர்களுக்குப் பதிலாகப் புதிய அமைச்சர்களின் பெயர்கள்!

"தலைவரிடமிருந்து வந்தது இந்த 'லிஸ்ட்'. நீங்க அறிவிக்கலாம்."

"விலக்கியதை அறிவிச்ச மாதிரி, இதையும் அறிவிச்சுடலாமே!..."

"அதெப்படி? புதிய துணைத் தலைவர், புதிய அமைச்சரவை... இதெல்லாம் நீங்கதான் அறிவிக்கணும்...."

"இவங்களைப் பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாதே..." என்று சொல்லிக் கொண்டே அந்தப் பெயர்களைப் படித்தான். ஆண்டிப்படி ஆனை முகத்தான், கோவில் பட்டி கோச்செங்கணான், கும்மிடிப் பூண்டி குலசேகரன்...."

அவன் கேட்டான்! "இதெல்லாம் புது பெயரா?"

"கொடுத்திருக்கிற நம்பர் கரெக்ட். பெயரைப் பத்தி கவலைப் படாதீங்க..."

"அரசாங்கம் இப்படித்தான் நடக்கப் போறதா?"

"எப்படி?" என்று கேட்டான் நஞ்சுண்டன்.

"நீங்க தலைவர் சொன்னதா என்கிட்டே தாளை நீட்டறதும், அதுக்கு நான் ஒப்புக் கையெழுத்துப் போடறதுமா?"

"அமைச்சர்களை விலக்கியது உங்க முடிவு. தலைவர் குறுக்கிடலியே... புது 'லிஸ்ட்' கொடுத்திருக்காரு, அவ்வளவுதான். சொல்லப் போனா, யார் மந்திரியா இருந்தா என்ன? சர்வ அதிகாரமும் உங்ககிட்டே இருக்கப் போறது..."

"அப்படியா?"

"நிச்சியமா..."

"நான் எந்த முடிவு வேண்டுமானாலும் எடுக்கலாம். ஆட்சி அமைப்பிலே அடிப்படை மாறுதல்களைக் கொண்டு வர்ற அளவுக்கு. அப்படித்தானே?..."

"ஆனா அதன் விளைவுகளைச் சந்திக்க நீங்க தயாராகவுமிருக்கணும்."

"எந்த மாதிரி விளைவுகள் ஏற்படும்னு நீங்க நினைக்கறீங்க?"

"நீங்க எந்த மாதிரி அடிப்படை மாறுதல்களைக் கொண்டு வரணும்னு நினைக்கறீங்கங்கறதைப் பொறுத்த விஷயம் இது."

"ஒரு சிலர் கையிலேருக்கிற அதிகாரம், மக்களைப் போய்ச் சேரணும்ங்கிறதுதான் என் முதல் திட்டம். நாட்டிலே எல்லாத் துறையிலும் பரவியிருக்கிற ஊழலை ஒழிக்கணுங்கிறதுதான் என்னுடைய இரண்டாவது திட்டம்..."

"போதும், எனக்கு இதெல்லாம் மனப்பாடம்..."

"மனப்பாடமா?"

"ஆமாம். தலைவர், பதவிக்கு வந்தவுடனே இப்படித்தான் அடிக்கடி சொல்லிகிட்டிருந்தாரு. இதையெல்லாம் நாளைக்கு டீ.வி.யிலே பேசறப்போ சொல்லுங்க. சொல்லறப்போ இன்னும் கொஞ்சம் உணர்ச்சிகளை கூட்டிச் சொல்லுங்க. நல்ல 'இஃபெக்ட்' இருக்கும்.. சரி, நான் வரட்டுமா?" என்று எழுந்தான் நஞ்சுண்டன்.

எப்போதோ வீழ்ந்த விதை

என். சிவானந்தம்

(அறிமுக எழுத்தாளர்)

"அன்ன யாவினும் புண்ணியம் கோடி... அன்னயா வினும் புண்ணியம் கோடி" - என்று உரத்த குரலில், மகா கவி பாரதியின் பாடலை மனப் பாடம் செய்து கொண்டிருந் தாள் மரகத மீனாட்சி, என் மகள். பத்தாம் வகுப்பு.

அப்போது பூஜையறைக் குள் நுழைந்த நான், கமகமக் கும் ஊதுபத்தியைக் கொளுத் தினேன். ஆனால் என் மனம் அதில் லயிக்கவில்லை. மகள், பாரதியின் பாட்டை மனப் பாடம் செய்யும் ஓசையில் தான் லயித்தது.

எப்போது அடுத்த வரிக்கு வருவாள் என்று நான் காத்திருந் தேன். ஆனால் அவள் அடுத்த வரிக்கு வரவே இல்லை; அன்ன யாவினும் புண்ணியம் கோடி யும் சட்டென்று நின்று விட் டது. மனப்பாடம் செய் வதையே நிறுத்தி விட்டாள் போல் தெரிந்தது. என்னுடைய செவிச் செல்வத்திற்குச் சற்றே ஏமாற்றம்.

நான் தொடங்கினேன். ஊதுபத்தியை சுவாமி படத் தின் முன்பாக மெதுவாகச் சுழற்றியபடியே, "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்... அதற்குள் "அப்பா, அப்பா" என்று மீனா அலறும் ஓசை கேட்டது. எதற்காக இப்படி அலறுகிறாள் ஊதுபத்தியை அப் படியே போட்டு விட்டு, என்னவோ ஏதோ வென்று ஓடினேன்.

வாசலில், ரோஜா மலர்ச் செடியருகே, அன்றலர்ந்த ரோஜா மலரே போன்று அழ காக அமர்ந்திருந்தாள் மீனா. அவளுடைய கண்கள் எதனையோ வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தன. அருகில், தமிழ்ப் பாடநூல், அனாதையாகக் குப்புறக் கவிழ்ந்து கிடந்தது. எதற்காக அலறினாள்? நான் போய் அங்கு நின்றபோது, என்னை நிமிர்ந்து பார்த்து விட் டுத் தன்னுடைய அழகான கட்டு விரலை நீட்டிக் காட்டி, "இது என்ன செடிப்பா?" என்று கேட்டாள்.

ரோஜா மலர்ச் செடியருகே, இரண்டங்குல உயரத்திற்கு இரண்டே இரண்டு இலைகளுடன் புதிதாக முளைத்திருந்த ஒரு சிறிய செடியைக் காட்டித்தான் கேட்டாள் அவள். "இதுக்கா இப்படி அலறினே?" என்று நான் எகிறி விட வில்லை. குழந்தைகளின் குழந்தைத்தனமான கேள்விகளை உடனடியாகப் புறக்கணித்து விடாமல், அவற்றிற்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பது என்னுடைய இயல்பு.

அவள் காட்டிய சிறிய செடியைக் கொஞ்சம் சீரியசாக ஆராய்ந்து பார்த்தேன். அந்த இரண்டு இலைகளை வைத் துக் கொண்டு, அந்தச் செடியை இனம் கண்டு கொள்ள என்னால் உடனடியாக இயலவில்லை. ஆனால், அந்த இலை கள் எனக்கு மிகவும் பரிச்சயமானவையாகவே தென்பட்டன. எனக்குள் ஒரு சிறிய தவிப்பு ஏற்பட்டதுதான் வியப்பானது! ஒரு தூரத்து உறவினரை, நெடுங்காலம் கழித்து, எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தால், அவர் யார் என்று உடனடி யாக அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமல் ஒரு தவிப்பு ஏற்படுமே, அது மாதிரி தவிப்புத்தான் எனக்கு அப் போது ஏற்பட்டது. "என்னங்க என்னை அடையாளம் தெரிய லையா?" என்று அவர் கேட்டு விட்டால் அந்தத் தவிப்பு இன்னும் அதிகரிக்குமே, அதே மாதிரிதான் ஏற்பட்டது. அந்தச் சின்னஞ் சிறிய செடி, "என்னை அடையாளம் தெரி யலியா?" என்று கேட்பது மாதிரியே தோன்றியது. அந்தச் செடியையே வைத்த கண் வாங்காமல் பார்த்தேன். மீனா வுக்குப் பொறுக்கவில்லை.

"என்ன செடிப்பா, உங்க ளுக்கே தெரியலையா; அப்போ பிடுங்கிடறேன்" என்றபடியே கையை நீட் டிய அவளை அவசர மாகத் தடுத்தேன். "இரும்மா, அவசரப் படாதே; இது என்ன செடின்னு உடனடி யாகத் தெரியலே; ஆனால் பாது காப்பா வளர்க்க வேண் டிய செடின்னு தோணுது" என் றேன். எனக்கு அப்படித்தான் தோன் றியது. என்னுடைய பார்வை அந்தச் செடி யின் மீதேதான் இருந்தது. சட்டென்று எனக்குப் புலப்பட்டு விட்டது. "அடடே சார் நீங்களா! பாத்து ரொம்ப


நாளாச்சே" என்று அடையாளம் தெரிந்து கொண்ட குதூகலம் எனக்கு ஏற்பட்டு விட்டது. அந்த இளம் செடியை இனம்கண்டு கொண்ட நான், "அற்புதம்டா" என்றேன்.

என்ன அற்புதமோ என்று அவள் என் முகத்தையே ஆவலுடன் பார்த்தாள். "இந்த செடிக்குப் பேர் என்ன தெரியுமா? - சிறியாநங்கை. -இளையாநங்கைன்னும் சொல்றதுண்டு" என்றேன். மீனா சிரித்தாள்.

"சிறியா நங்கை - இளையாநங்கை. என்னப்பா யாரோ லேடி பேர் மாதிரி சொல்றீங்க?" - வியப்புடன் கேட்டாள்.

"நீ சொல்றது கரக்ட்தான். இந்தச் செடி வளர்ந்து முற்றி நிற்கும் போது பார்த்தா, புதுசாத் தாய்மையடைந்த ஒரு அழகான பெண் மாதிரியே பொலிவா இருக்கும்."

என்னுடைய விளக்கம் கேட்டு மீனா வாய் விட்டுச் சிரித்தாள். "பூச்செடியாப்பா?" என்றாள். அழகான மலர்களைக் கொடுக்கின்ற பூச்செடிகள் மீதுதான் அவளுக்கு ஆர்வம்.



"பூச்செடின்னு சொல்ல முடியாது. ஆனால் பூவும் வரும்; சின்னச் சின்ன வெண்ணிற மலர்கள். இது எவ்வளவு உன்னதமான செடி தெரியுமா? செடின்னு சொல்றதே கூடத் தப்பு. மூலி கைன்னு சொல்லணும். விஷக்கடி முறிவு மூலிகை. சுமார் இருபது வருஷத்துக்கு முன்னால் நம்ம வீட்டிலே இதே எடத்துல இந்தச் செடி பெருசா வளர்ந்து, செழிப்பா அழகா இருந்துச்சு. செடியா இருந்தாலும் பார் வைக்கு ஒரு சின்ன மரம் மாதிரியே அமைப்பு. இலைக எல்லாம் கவர்ச்சியான பசுமை நிறம், ஆனா ரொம்பக் கசப்பு. இலையைக் கடுகளவு கிள்ளி வாய்லே போட்டா வாய் பூரா கசக்கும். பாம்பு கடிச்சு சாகக் கிடக்கிறவனைக் கூட இந்த இலையின் சாறு பிழைக்க வெச்சிடும். நம்ப வீட்லே இருந்த செடி பல பேருடைய உயிரைக் காப்பாத்தியிருக்கு. ஏறக்குறைய மூணு வருஷம் இருந்துட்டு அப்புறம் பட்டுப் போச்சு. இப்போ இத்தனை வருஷத்துக்கப்புறம் முளைத்து வந்திருக்குது பாத்யா, எப்போதோ விழுந்த விதை..."

"நீங்க சொல்றதெல்லாம்



புதுசா இருக்கே" என்று மீனா வியப்போடு, அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் மீண்டும் பூஜையறைக்குள் நுழைந்தேன். சில சமயங்களில் பூஜையின் போதும் சிந்தனையை இறைவன் மீது செலுத்த முடிவதில்லை. அன்றும் அப்படித்தான். வாய் இறைவனின் திருநாமத்தை முணுமுணுத்தாலும் என்னுடைய மனம் சிறியாநங்கைச் செடியின் மீதுதான்! எப்போதோ விழுந்த விதை இத்தனை காலம் கடந்து இப்போது முளைத்திருக்கிறதே! இந்தச் சிறியாநங்கைச் செடி போன்று வாழ்க்கையிலும் சில சம்பவங்கள் நடந்து விடுவதுண்டு. கடந்த வாரம் கோயில் பாளையத்திற்கு அருகில் உள்ள கோட்டைப்பாளையம் சென்று வந்ததை நினைத்துக் கொண்டேன்.

பெயர்தான் கோட்டையே தவிர அங்கே கோட்டையும் இல்லை. கொத்தளமும் இல்லை. ஓட்டு வீடுகளும் குடிசைகளும்தான் இருந்தன. கோயில் பாளையத்திற்கு மேற்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவு. பஸ் வசதியும் இல்லை. நடந்துதான் செல்ல வேண்டும். அங்கே ஒரு நண்பரைச் சந்திக்கச் சென்ற நான் இரவு எட்டு மணியளவில் கோயில்பாளையம் வந்து வசமாக மாட்டிக் கொண்டேன்.

அன்று புளியம்பட்டி சந்தை நாள். முகூர்த்த நாள். பேருந்துகளில் ஏகப்பட்ட கூட்டம். பேருந்து நிலையம் என்று எதுவும் இல்லை. சாலையோரமாக நின்று கொண்டு, அந்த வழியாகப் பேருந்துகள் வரும் போது கை நீட்ட வேண்டும். போலீஸ்காரனே கைநீட்டினாலும் கூட நிற்காமல் போகும் பேருந்துகள், நான் கைநீட்டினால் நிற்கவா போகிறது? ஒரு பஸ்கூம் நிற்கவில்லை. கூட்டம் அப்படி!

கணபதி வரையிலும் பஸ் கிடைத்து விட்டால் போதும். கணபதி மெடிக்கல்ஸ் முன்புறமாக என்னுடைய மொபட் நிற்கிறது. அங்கேயிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவுள்ள உடையாம்பாளையத்திற்கு மொபெட்டில் சென்று விடலாம். ஆனால் கணபதி வரையிலும் பஸ்ஸில்தான் சென்றாக வேண்டும். கோயில்பாளையத்திலிருந்து கணபதிக்கு இருபது கிலோ மீட்டர் தொலைவு.

எப்படி ஊர் போய்ச் சேருவது? ஒன்றும் புரியாமல் நின்றேன். அப்போதுதான் ராசா மாதிரி ஓர் இளைஞன், மோட்டார் சைக்கிளில் வந்தான். வண்டியை என்னருகே வந்து நிறுத்தினான். கனிவான குரலில் கேட்டான்.

"பஸ் கெடைக்கலீங்களா? நீங்க உடையாம்பாளையம்தானே போகணும்?"

குறிப்பாக என்னுடைய கிராமத்தின் பெயர் சொல்லிக் கேட்கிறான்! அதனால் என்னைத் தெரிந்தவனாகத்தான் இருக்க வேண்டும். நான் இருந்த படபடப்பில் அது எல்லாம் என் சிந்தனைக்கே வரவில்லை. "இல்லீங்க; கணபதி வரையிலும்தான் போகணும், அங்கேதான் என்னுடைய மொபட் இருக்கு" என்றேன்.

"கணபதிதானே; நானும் அங்கேதான் போறேன். உக்காருங்க" என்றான். அவன் யார் என்று எல்லாம் நான் சிந்திக்கவில்லை. உடனடியாக அந்த வண்டியின் பின்புறம் ஏறி வசதியாக அமர்ந்து கொண்டேன். வண்டி காற்றைப் பிளந்து கொண்டு பறந்தது. அப்படியொரு வேகம். இருபது கிலோ மீட்டர் தூரத்தை இருபதே நிமிடங்களில் கடந்து, கணபதியில் கணபதி மெடிக்கல்ஸ் கட்டடம் அருகே என்னை இறக்கி விட்டான்.

"ரொம்ப தேங்க்ஸ்ப்பா தம்பி" என்று உண்மையான நன்றியுணர்வுடன் சொன்னேன். வண்டியிலிருந்து இறங்கி நின்று அடக்கமாக ஒரு புன்னகை செய்தவன் மிகவும் பணிவுடன், "ஐயாவுக்கு என்னை அடையாளம் தெரியுதுங்களா?" என்றவன் தொடர்ந்தான்.

"உங்களுக்குத் தெரியாது; ஆனா உங்களை எனக்கு நல்லாத் தெரியும். என் பெயர் ராஜா. கோயில்பாளையத்திலே இருக்கற ராஜா அரிசி மண்டி என்னுதுதான். எங்க அம்மிச்சியவங்க ஊர் உடையாம்பாளையம். அங்கே இருந்த ஸ்கூல்லே நான் அஞ்சாவது வரைக்கும் படிச்சேன். நான் அஞ்சாம் கிளாஸ் ஆனா இருக்கிற போது உங்களைப் பார்த்திருக்கேன், எனக்கு அப்போ இதே மாதிரி ஒரு உதவி செஞ்சிருக்கீங்க."

எனக்கு வியப்பாக இருந்தது. "நான் உதவி செய்திருக்கேனா?" என்றேன்.

"ஆமாங்க. ஒரு தபா நாங்க ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் பேரூருக்கு எக்ஸ்கர்சன் போனோம். நான் லேட்டா வந்ததால் எல்லாரும் என்னைய உட்டுட்டுப் போயிட்டாங்க. ஸ்கூல் வாசப்படிலே உக்காந்துட்டு நான் அழுதுக்கிட்டே இருந்தேன். நீங்கதான் உங்க சைக்கிள்ல என்னை ஏத்திட்டு இதே கண

"தலைவரே, அரசியலில் நிரந்தரப் பகைவனும் கிடையாது; நிரந்தர நண்பனும் கிடையாதுன்னீங்களே.. பின்னே எதுதான் நிரந்தரம்?"
"லஞ்சம் ஒண்ணுதான்!"
— அம்பை தேவா

பதிலே கொண்டாந்து உட்டீங்க."

எனக்குப் புரிந்து விட்டது. வாய் விட்டுச் சிரித்தேன்.

"நீ அந்த ராஜாப் பையனா? டேய் ஆர் மொசா, சம்முகா, சின்சாமி நானும் வந்துட்டேன்... நானும் வந்துட்டேன்" என்று நான் சொல்லச் சொல்லப் பெரிதாகச் சிரித்தான் ராஜா.

"தொடர்ந்து படிச்சியா?"

"இல்லீங்க. அஞ்சாவதுலியே ரெண்டு வருசம் உக்காந்துட்டேன். உனக்குப் படிப்பு ஏறாதுன்னு சொல்லி, கோயில்பாளையத்திலே அரிசி மண்டி வெச்சுக் குடுத்துட்டார் எங்க அப்பாரு... நல்லா இருக்கேன்."

"நல்லா இருப்பா" என்று நானும் வாழ்த்தினேன். மேலும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு ராஜா புறப்பட்டான்.

கணபதியில் அவனுக்கு எந்த வேலையும் இல்லை. எனக்காகவே, எனக்கு உதவி செய்வதற்காகவே வந்திருக்கிறான்! கடைசிப் பேருந்தும் கிடைக்காமல் நான் நிற்பதைப் பார்த்து, என் நிலையை ஒரு நொடியில் புரிந்து கொண்டு நான் கேட்காமலேயே எனக்கு உதவ வந்தவன். இரவு பதினொன்றாகி விட்டதால் கடையைப் பூட்டிக் கொண்டு போக வந்தவன் கண்ணில்தான் நான் தென்பட்டிருக்கிறேன். அவன் இந்த உதவியை எனக்குச் செய்ய முன்வந்ததும் சிறியாநங்கைச் செடி முளைத்த மாதிரி எப்போதோ போட்ட விதைதான்! நான் அந்தச் சுவையான நிகழ்ச்சியை நினைவுகூர்ந்தேன்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அழகான காலைப் பொழுது. நான் அலுவலகம் செல்லும் நேரம். சைக்கிளில் சென்று கொண்டிருந்த நான், ஆரம்பப் பாடசாலை வாசற்படியின் மீது அமர்ந்து கொண்டு ஒரு பொடியன் அழுது கொண்டிருப்பதைப் பார்த்தேன். பள்ளி மாணவர்கள் கும்மாளமடித்து விளையாடிக் கொண்டிருக்கும் அந்த இடம் வெறிச்சென்றிருக்க, ஒரு சிறுவன் மட்டும் சோகமே வடிவாக அமர்ந்து அழுது கொண்டிருந்தபடியால், சைக்கிளை நிறுத்தினேன்.

"ஏண்டா அழறே?"

"எல்லாரும் என்னை உட்டுட்டுப் பேருருக்கு உல்லாசப் பயணம் போயிட்டாங்க."

"ஏன் உன்னை உட்டுட்டுப் போனாங்க?"


"நானு லேட்டா வந்துட்டேன். எட்டு மணிக்குள் வரோணும்னு சொல்லியிருந்தாங்க. நானு இப்பத்தான் வந்தேன்; நான் வர்றதுக்குள் போயிட்டாங்க."

ஒரு சிறிய டிபன் பாக்ஸ் அவனுடைய கையில் தென்பட்டது. பரிதாபமாக என்னைப் பார்த்தான். "நீ எத்தனாவது படிக்கறே?" என்றேன். "அஞ்சாம் வகுப்பு" என்றான். அவனுடைய நிலை எனக்குத் தெளிவாகப் புரிந்தது. கோவையிலிருந்து உடையாம்பாளையத்திற்கு அப்போது பஸ் வசதி கிடையாது. கணபதி வரையிலும்தான் பஸ். உடையாம்பாளையத்திலிருந்து கணபதி வரையிலும் நடந்து சென்று, அங்கிருந்துதான் பஸ்ஸில் செல்ல வேண்டும். பேரூருக்கு உல்லாசப் பயணம் செல்லும் அவனுடைய தோழர்கள் இப்போது கணபதியை நோக்கி நடந்து சென்று கொண்டிருப்பார்கள். காலை எட்டு மணிக்குள் வர வேண்டும் என்று ஆசிரியர்கள் சொல்லியிருப்பார்கள் போல் தென்பட்டது; இவன் காலதாமதமாக வந்த படியால் இவனுக்காகக் காத்திருக்காமல் அவர்கள் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். சிறுவர்கள் தானே; குறைந்தபட்சம் நாற்பது நிமிடங்கள் நடந்தால்தான் கணபதியை அடைய முடியும். இந்தச் சிறுவனைச் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு சென்றால், அந்தப் பையன்களுடன் இவனைச் சேர்த்து விட முடியும்.

"என் கூடச் சைக்கிள்லே வர்றியா, உன்னைக் கொண்டு போய் உன்னுடைய பிரண்ட்ஸ்ங்ககிட்டே சேத்திடறேன்."

அவன் உடனடியாகத் தாவி என்னுடைய சைக்கிளில் தொற்றிக் கொண்டான். சைக்கிளை வேகமாகச் செலுத்தினேன். நான் அந்த மாணவர் கூட்டத்தருகே சென்று சைக்கிளை நிறுத்த, ராஜா கீழே குதித்துச் சிட்டுக் குருவி பறப்பது மாதிரி ஓடிச் சென்று தன்னுடைய நண்பர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டான். அந்த இளம் உள்ளத்தில் அப்போது வீழ்ந்த நன்றி என்றும் உணர்வு ஒருவித்தாகப்பட்டுப் போகாமல் நின்று விட்டது. இன்றைக்கு அது எனக்குப் பயன்பட்டுள்ளது.

வீட்டில் புதிதாக முளைத்துள்ள இளையாநங்கைச் செடியினையும் ராஜாப் பையன் நன்றி மறக்காமல் எனக்குச் செய்த உதவியினையும் இணைத்துப் பார்த்து, "எப்போதோ வீழ்ந்த விதை" என்ற சிந்தனையுடன் இறைவனுக்குக் கற்பூர ஆராதனை செய்தேன்.



"இன்று, நான் உன் வீட்டுக்குச் சாப்பிட வரதுல உன் மனைவிக்கு ஆட்சேபணை எதுவும் இருக்காதே?"
"ஊஹூம், அது விஷயமா நேத்திக்கே அவளிடம் மூன்றுமணி நேரம் பேசி ஒரு மாதிரி சமாதானப்படுத்தி விட்டேன்!"
— சோம. முத்துக்குமார்

MTV யில் வராத மேற்கத்திய இசை!



தென்றல் தாலாட்டுகிற மாதிரிகூட மேற்கத்திய இசை இருக்க முடியுமா...? முடியும் என்று நிரூபித்தார்கள் 'டூஃப்பே கலெக்டிவ்' என்ற இசைக் குழுவினர். சமீபத்தில் சென்னையில் இவர்கள் நிகழ்ச்சியைக் கேட்ட போது, எம்.டி.வி. மைக்கேல் ஜாக்ஸன் ரேஞ்சிலான அட்டகாச மேற்கத்திய சங்கீதம் மட்டுமே கேட்டு - பார்த்துப் பழகிய நமக்கு இனிய ஆச்சர்யம்.

15-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐரோப்பிய சாஸ்திரீய சங்கீதத்தை நமக்கு அறிமுகப்படுத்தி அசத்தினார்கள்.

டூஃபே என்பவர் அந்தக் கால கட்டத்தைச் சேர்ந்த பாடலாசிரியர். எனவே இசைக் குழுவுக்கு அந்தப் பெயர். அவர் காலத்துக்குச் சற்று முந்தைய பிந்தைய பாடல்களையெல்லாம் சேர்த்து ஐரோப்பிய சாஸ்திரீய சங்கீதத்துக்குப் புத்துயிர் கொடுத்திருக்கிறது இந்தக் குழு.

பால் பிவான், கைல்ஸ் லெவின், வில்லியம் லையான்ஸ், ஏஃபேல் மிஜ்ராகி, பீட்டர் ஸ்கூஸ் என்ற ஐந்து ஆண்களுடன் சூசன்னா பெல் என்கிற பெண்ணும் இருக்கிறார். காதலின் மென்மையான உணர்வுகள், காதலியின் அழகு, பூத்துக் குலுங்கும் வசந்தத்தின் அழகு... என்று இவர்கள் சாஸ்திரீய முறையில் பாடுகிறபோது, நம்மையறியாமலேயே தாளம் போடுகிறோம்.

இவர்கள் பயன்படுத்தும் ஷாம், பேக்பைப், வியல், ரிபெக், ஹார்ப் போன்ற இசைக் கருவிகளும் அந்தக் காலத்தில் இருந்தவைதான். "இவை எல்லாமே வழக்கில் இல்லாமல் அழிந்து போயின. மாதிரிக்குக் கூட ஏதும் இல்லாததால் சரித்திரக் குறிப்புகளை வைத்துக் கொண்டு நாங்கள் தயாரித்தோம். இன்னும் சிலவற்றைக் டெல்லி, கல்கத்தா நகரங்களின் பழைய சாமான்கள் விற்கும் கடைகளில் கண்டுபிடித்தோம்!" என்கிறார்கள்.

நாம் பாபா சைகல், பிரபுதேவா யுகத்தில் இருக்கிறோம்; அவர்கள் பழமையைத் தேடிப் போக ஆரம்பித்திருக்கிறார்கள்!

— நிர்மலா சக்கரவர்த்தி



• டூஃப்பே இசைக் குழுவினர்

பார்த்திபன்

7. அருள்மொழித் தேவி

பொன்னனும் வள்ளியும் உறையூர்க் கோட்டை வாசலுக்கு வந்த அதே சமயத்தில், ராணி அருள்மொழித்தேவி அரண்மனை உத்தியான வனத்துக்குள் பிரவேசித்தாள். பல்லவ தூதருக்கு மகாராஜா கூறிய பதிலை ஏவலாளர்கள் உடனே வந்து மகாராணிக்குத் தெரிவித்தார்கள். மன்னர் வரும் வரையில் பொழுது போக்குவதற்காக, ராணி உத்தியான வனத்துக்குள் சென்றாள். அவ்வனத்தில் சண்பக மலர்கள் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு மூலைக்குப் போய், அங்கே அமைத்திருந்த பளிங்குக்கல் மேடையில் உட்கார்ந்து கொண்டாள்.

அங்கிருந்து பார்த்தபோது மேற்குத் திசையில் சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருந்த காட்சி, அடி மரங்களின் வழியாகத் தெரிந்தது. மேல் வானம் முழுவதும் பத்தரை மாற்றுத் தங்க விதானத்தைப் போல் தகதகவென்று பிரகாசித்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே தங்க நிறத்தின் சோபை மங்கிக் கொண்டு வந்தது; அடிவானத்தில் சூரியன் மறைந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் மேல் வானம் முழுவதும் ஒரே இரத்தச் சிவப்பாய் மாறிற்று. இந்தக் காட்சி அருள்மொழித் தேவிக்கு ரண களத்தையும் அங்கே இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதையும் ஞாபகப் படுத்திற்று. தேவி நடு நடுங்கிக் கண்ணை மூடிக் கொண்டாள்.

மறுபடி அவள் கண்ணைத் திறந்து பார்த்தபோது, வெள்ளி நிலவின் இன்பக் கிரணங்கள் மரக் கிளைகளின் வழியாக எட்டிப் பார்க்கத் தொடங்கியிருந்தன. ராணி உள்ளத்தில் பழைய ஞாபகங்கள் குமுறிக் கொண்டு வந்தன. பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னால் பார்த்திப மன்னனுக்கு மாலையிட்டு, இந்த அரண்மனைக்கு அவள் வந்தாள். அந்த நாளிலிருந்து இம்மாதிரி வெண்ணிலவு பிரகாசித்த எத்தனையோ இரவுகளில் அவளும் பார்த்திபனும் இந்த உத்தியான வனத்தில் கைகோத்துக் கொண்டு உலாவியதுண்டு. இந்தப் பளிங்குக்கல் மேடை மீது உட்கார்ந்து, இருவரும் நேரம் போவதே தெரியாமல் இருந்ததுண்டு. அந்த நாளில் பார்த்திபன் சில சமயம் புல்லாங்குழல் கொண்டு வந்து இசைப்பான். அருள்மொழி மெய்மறந்து கேட்டுக் கொண்டிருப்பாள். கண்ண பெருமானே பார்த்திபனாக உருக்கொண்டு வந்து மணம் புரிந்ததாக எண்ணிப் பூரிப்படைவாள். இப்படி சில காலம் வாழ்க்கையே ஓர் இன்பக் கனவாகச் சென்று கொண்டிருந்தது.

பிறகு விக்கிரமன் பிறந்த போது, இன்ப வாழ்க்கையின் சிகரத்தை அவர்கள் அடைந்தார்கள். அதே உத்தியான வனத்தில் அதே பளிங்குக் கல்லின் மீது குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சியதெல்லாம் அருள்மொழிக்கு நினைவு வந்தது. ஆஹா! அந்த ஆனந்தமான நாட்கள் அப்படியே நீடித்திருக்கக் கூடாதா?

ஆனால், எப்படியிருக்க முடியும்! பார்த்திபனுடைய இருதயத்தின் அடிவாரத்திலே சொல்ல முடியாத வேதனையொன்று பதுங்கிக் கிடந்து, அவனுடைய நெஞ்சை அரித்துக் கொண்டிருக்கையில், அவர்களுடைய ஆனந்த வாழ்க்கை எப்படி நீடித்திருக்க முடியும்? பார்த்திபனுடைய இந்த அந்தரங்க வேதனையை வெகுகாலம் கழித்தே அருள்மொழி அறிந்தாள். அறிந்தது முதல் அந்த வேதனையில் அவளும் பங்கு கொண்டாள். அதற்குத் தானே காரணமோ என்று எண்ணி எண்ணி மனம் நொந்தாள்.

ஆமாம்; அவர்களுடைய கலியாணத்தின் போதே அந்தக் காரணமும் ஏற்பட்டு விட்டது. அருள்மொழி, சேர வம்சத்தைச் சேர்ந்த ஒரு சிற்றரசன் மகள். அந்த நாளில் அவளைப் போல் சௌந்தரியவதியான ராஜகுமாரி இல்லையென்று தென்னாடெங்கும் பிரசித்தியாயிருந்தது. அவளைப் பார்த்திபனுக்கு மணம் செய்விக்க ஏற்பாடுகள் நடந்த

பிறகு, காஞ்சி மகேந்திரவர்ம சக்கரவர்த்தியிடமிருந்து சேர மன்னனுக்குத் தூதர்கள் வந்தார்கள். பட்டத்து இளவரசர் நரசிம்ம வர்மருக்கு அருள்மொழியைத் திருமணம் முடிக்க விரும்புவதாகச் சக்கரவர்த்தி செய்தி அனுப்பியிருந்தார். அருள்மொழியின் உற்றார் உறவினருக்கெல்லாம் இது பெரிதும் சம்மதமாயிருந்தது. ஆனால் அருள்மொழி அதற்கு இணங்கவில்லை; பார்த்திப சோழரையே பதியாகத் தன் மனத்தில் வரித்து விட்டதாகவும், வேறொருவரை மணக்க இசையேனென்றும் கண்டிப்பாய்ச் சொன்னாள். மகேந்திர சக்கரவர்த்தி மிகவும் பெருந்தன்மையுள்ளவராதலால் அதற்குமேல் வற்புறுத்தவில்லை. இளவரசர் நரசிம்மவர்மருக்குப் பாண்டியன் மகளை மணம் முடித்து வைத்தார்.

கனவு

பார்த்திபனுக்கும் அருள்மொழிக்கும் மணம் நடந்த பிறகுதான் பார்த்திபனுக்கு மேற்கூறிய சம்பவம் தெரிய வந்தது. அவர் சில சமயம், "நீ சாம்ராஜ்ய சக்கரவர்த்தினியாய் காஞ்சி சிம்மாசனத்தில் வீற்றிருக்க வேண்டியவள்; அதற்கு மாறாக, இந்த உள்ளங்கை அகல சோழ ராஜ்யத்திற்கு ராணியாயிருக்கிறாய்" என்று சொல்லுவதுண்டு. முதலில் இதை ஒரு விளையாட்டுப் பேச்சாகவே அருள்மொழி எண்ணியிருந்தாள். நாளாக ஆக, தன் பதியினுடைய மனத்தில் இந்த எண்ணம், மிக்க வேதனையை அளித்து வந்தது என்று தெரிந்து கொண்டாள். அதைப் போக்குவதற்காக, அவள் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் முடியவில்லை. விக்கிரமன் பிறந்ததிலிருந்து, மகாராஜாவின் அந்தரங்க வேதனை அதிகமாகியே வந்ததாகத் தெரிந்தது. ஒரு சமயம் அவர், "உன் வயிற்றில் பிறந்த பிள்ளை ஒரு பெரிய சாம்ராஜ்யத்திற்குச் சக்கரவர்த்தியாயிருக்க வேண்டியவன். என்னாலல்லவா இன்னொருவருக்குக் கப்பம் கட்டும் சிற்றரசு அவனுக்கு லபிக்கிறது!" என்பார். இன்னொரு சமயம், "அருள்மொழி! உன் பிள்ளைக்கு என்னால் சாம்ராஜ்யப் பட்டாபிஷேகம் செய்து வைக்க முடியாது. ஆனால், வீரத் தந்தையின் புதல்வன் என்ற பட்டத்தை நிச்சயம் அளிப்பேன்!" என்பார்.

அவருடைய வாக்கை நிறைவேற்றும் சமயம் இப்போது வந்துவிட்டது. பழைய காலத்து வீர பத்தினிகளைப் போல் அவருடன் தானும் உயிர் விடுகிறதாயிருந்தால் பாதகமில்லை. அந்தப் பாக்கியத்தையும் தனக்கு அளிக்க மறுக்கிறாரே? தான் வீரத் தாயாக இருந்து விக்கிரமனை வீரமகனாக வளர்க்க வேணுமாமே? ஐயோ, அவரைப் பிரிந்த பிறகு உயிரைத்தான் தாங்க முடியுமா?

இப்படி எண்ணியபோது அருள்மொழிக்கு நெஞ்சு பிளந்துவிடும் போலிருந்தது. திடீரென்று அழுகை பீறிக் கொண்டு வந்தது. "ஓ!" வென்று கதறிவிட்டாள்.

"அருள்மொழி! உன்னை வீர பத்தினி என்றல்லவா நினைத்தேன்? இவ்வளவு கோழையா நீ?" என்று கடினமான குரலில் கூறிய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். பார்த்திப மகாராஜா அங்கு நின்றார். உடனே, அவளுடைய அழுகை நின்றது. கண்ணீரும் வறண்டு விட்டது.

"வா! அரண்மனைக்குப் போகலாம்! அழுவதற்கும் சமாதானப் படுத்துவதற்கும் இப்போது நேரமில்லை" என்றார் மகாராஜா.

இருவரும் கைகோத்துக் கொண்டு, வாய் பேசாமல் அரண்மனைக்குள் போனார்கள்.

பார்த்திபனும் அருள்மொழியும் அரண்மனைக்குள் பிரவேசித்து, பூஜாக்கிரஹத்துக்கு வந்தபோது தீபாராதனை நடக்கும் சமயமாயிருந்தது. பூஜாக் கிரஹத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. இடது பக்கத்தில் பார்வதி தேவியின் அற்புதச் சிலை ஒன்று இருந்தது. தேவியின் இருபுறத்திலும் விநாயகரும் முருகக் கடவுளும் வீற்றிருந்தார்கள். இன்னொரு பக்கத்தில் ஸ்ரீதேவி பூதேவி சமேதரான மகாவிஷ்ணு தரிசனம் தந்தார். எல்லா விக்கிரகங்களும் சண்பகம், பன்னீர், பாரிஜாதம் முதலிய மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தெய்வ சந்நிதியில் இளவரசர் விக்கிரமன், கைகூப்பிய வண்ணம் நின்று ஆராதனையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அமரர்கல்கி

அர்ச்சகர் தீபாராதனை செய்து, மூவருக்கும் பிரஸாதம் கொடுத்துவிட்டு, வெளியே சென்றார். விக்கிரமன் மகாராஜாவைப் பார்த்து, "அப்பா! சித்திர மண்டபத்துக்குப் போகலாம் என்றீர்களே?" என்று கேட்டான். "இதோ நான் வருகிறேன், விக்கிரமா! நீ முன்னால் போ!" என்றார் மகாராஜா.

விக்கிரமன் வெளியே சென்றதும், மகாவிஷ்ணுவின் பாதத்தினடியில் வைத்திருந்த நீளவாட்டான மரப்பெட்டியை மகாராஜா சுட்டிக்காட்டிச் சொன்னார்:- "தேவி! அந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது என்று என்னை நீ பல தடவை கேட்டிருக் கிறாய். நானும் 'காலம் வரும்போது சொல்லுகிறேன்!' என்று சொல்லி வந்திருக்கிறேன். சொல்ல வேண்டிய காலம் இப்போது வந்து விட்டது. சோழ வம்சத்தின் புராதன பொக்கிஷம் இந்தப் பெட்டிக்குள்ளே இருக்கிறது. இதோ திறந்து காட்டுகிறேன், பார்!"

இவ்விதம் சொல்லிக் கொண்டே மகாராஜா அந்த மரப் பெட்டியைத் திறந்தார். பெட்டிக்குள்ளே பளபளவென்று ஜொலித்த ஓர் உடைவாளும் ஓர் ஓலைச்சுவடியும் காணப் பட்டன. உடைவாளின் பிடி தங்கத்தினாலானது. இரத்தினங்கள் இழைத்தது. வாளும் எண்ணெய் பூசிக் கூர்மையாய்த் தீட்டி வைத்திருந்தது. ஆகவே பிடியும் வாளும் ஒன்றோடொன்று போட்டியிட்டு ஒளி வீசின. இதற்கு மாறாக, ஓலைச் சுவடியோ மிகப் பழைமையானதாய்க் கருநிறமாயிருந்தது.

பார்த்திபன் சொன்னான் :- "தேவி! இந்த உடைவாள் சோழ வம்சத்திலே முற்காலத்திலே பிரசித்தி பெற்றிருந்த சக்கரவர்த்திகளின் காலத்திலிருந்து வந்தது. கரிகால் வளவனும் நெடுமுடிக் கிள்ளியும் இந்த உடைவாளைத் தரித்து, உலகத்தை ஆண்டார்கள். ஓலைச் சுவடியில் உள்ளது நமது தமிழகத்தின் தெய்வப் புலவர் அருளிய திருக்குறள். இந்த உடைவாளும் குறள் நூலும்தான் சோழர் குலத்தின் புராதன பொக்கிஷங்கள். இவற்றை நீ வைத்துக் காப்பாற்றி, விக்கிரமனுக்கு வயது வரும்போது அவனிடம் சேர்ப்பிக்க வேண்டும். அருள்மொழி! இந்தப் புராதன உடைவாளை என் தகப்பனார் அணிந்திருந்தார்; ஆனால் நான் அணியவில்லை. கப்பங்கட்டும் சிற்றரசனாயிருந்து கொண்டு, கரிகால் வளவனும் நெடுமுடிக் கிள்ளியும் அணிந்த உடைவாளை அணிய நான் விரும்பவில்லை. விக்கிரமனிடம் நீ இதையும் சொல்ல வேண்டும். எப்போது அவன் ஒரு சின்னஞ்சிறு பிரதேசத்துக்காவது சுதந்திர மன்னனாகிறானோ, அப்போதுதான் இந்த உடைவாளைத் தரிக்கலாமென்று கூற வேண்டும். அக்காலத்தில் இந்த உடைவாளைத் தரித்து, இந்தத் தெய்வத் திருக்குறளில் சொல்லியிருக்கும் வண்ணம் இராஜ்ய பாரம் செய்யும்படியும் கூற வேண்டும். இந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். அருள்மொழி! இதை நிறைவேற்றுவதாகத் தெய்வ சன்னிதானத்தில் எனக்கு வாக்குறுதி அளிக்க வேண்டும். விக்கிரமனை வீரமகனாக நீ வளர்க்க வேண்டும்."

இதைக் கேட்ட அருள்மொழித் தேவி கண்களில் நீர் ததும்ப விம்முகின்ற குரலில், "அப்படியே செய்கிறேன் மகாராஜா!" என்றாள். பார்த்திபன் அப்போது "இறைவன் அதற்கு வேண்டிய தைரியத்தை உனக்கு அளிக்கட்டும்!" என்று சொல்லி அருள்மொழியைத் தழுவிக் கொண்டு அவளுடைய கண்களில் பெருகிய கண்ணீரைத் தம்முடைய மேலாடையால் துடைத்தார்.

8. சித்திர மண்டபம்

உறையூர்த் தெற்கு ராஜ வீதியிலிருந்த சித்திர மண்டபம் அந்தக் காலத்தில் தென்னாடெங்கும் புகழ் வாய்ந்திருந்தது. காஞ்சியிலுள்ள மகேந்திர சக்கர



வர்த்தியின் பேர் பெற்ற சித்திர மண்டபம் கூட உறையூர்ச் சித்திர மண்டபத்துக்கு நிகராகாது என்று ஜனங்கள் பேசுவது சகஜமாயிருந்தது. பார்த்திப மகாராஜாவும் இளவரசர் விக்கிரமனும் வெண் புரவிகளின் மீதேறி இந்தச் சித்திர மண்டபத்தின் வாசலை அடைந்த அதே சமயத்தில், அங்கே படகோட்டி பொன்னனும் வந்து சேர்ந்தான். இந்த அகாலவேளையில் மகாராஜாவைப் பார்க்க முடியுமோ என்னவோ என்ற கவலையுடன் வந்த பொன்னன், திடீரென்று மகாராஜாவைப் பார்த்ததும் இன்னது சொல்வதென்று தெரியாமல் திகைத்தான். "மகாராஜா..." என்னும்போதே அவனுக்கு நாக்குழறியது. அந்தக் குழறிய குரலைக் கேட்டு மகாராஜாவும் இளவரசரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். "பொன்னா! நீ எங்கே வந்தாய்?" என்றார் மகாராஜா. பொன்னனின் மௌனத்தைக் கண்டு, ஒருவாறு அவன் வந்த காரணத்தை ஊகித்தவராய், குதிரை மீதிருந்து கீழிறங்கினார். இளவரசர் விக்கிரமனும் லாகவமாய்க் குதிரை மீதிருந்து குதித்தார். "பொன்னா! இந்தத் தீவர்த்தியை வாங்கிக் கொள்!" என்றார் மகாராஜா. அருகே தீவர்த்தி வைத்துக் கொண்டு நின்ற ஏவலாளனிடமிருந்து பொன்னன் தீவர்த்தியை வாங்கிக் கொண்டான். அந்த வேளையில் மகாராஜா எதற்காக சித்திர மண்டபத்துக்கு வந்திருக்கிறார்; எதற்காகத் தன்னை தீவர்த்தியுடன் பின்தொடரச் சொல்லுகிறார் என்பதொன்றும் அவனுக்குப் புரியாவிட்டாலும், மகாராஜா தன்னைத் திரும்பிப் போகச் சொல்லாமல்



தம்முடன் வரும்படி சொன்னதில் அளவி லாத குதூகலமுண்டாயிற்று. மகாராஜாவும் இளவரசரும் முன் செல்ல, பொன்னன் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு சித்திர மண்டபத்துக்குள் புகுந்தான்.

அந்தச் சித்திர மண்டபத்துக்குள் முதல் முதலாகப் பிரவேசிக்கிறவர்களுக்கு, 'நமக்குள்ள இரண்டு கண் போதாது; இரண்டாயிரம் கண் இருந்தால்தான் இங்கேயுள்ள சித்திரங்களை ஒருவாறு பார்த்துத் திருப்தியடையலாம்' என்று தோன்றும். அந்த விஸ்தாரமான மண்டபத்தின் விசாலமான சுவர்களில் விதவிதமான வர்ணங்களில் பல வகைச் சித்திரங்கள் தீட்டப் பெற்றிருந்தன. அந்த மண்டபத்தைத் தாங்கிய சிற்ப வேலைப்பாடுள்ள தூண்களிலும் சித்திரங்கள் காணப்பட்டன. மேல் விமானத்தின் உட்புறங்களையும் சித்திரங்கள் அலங்கரித்தன. ஒரு சுவரில் ததீசி முனிவரிடம் இந்திரன் வச்சிராயுதத்தைப் பெறுவது, இந்திரன் விருத்திராசுரனைச் சம்ஹரிப்பது, பிறகு இந்திரலோகம் வருவது, தேவர்களும் தேவ மாதர்களும் இந்திரனை எதிர்கொண்டு வரவேற்பது, இந்திரனுடைய சபையில் தேவ மாதர்கள் நடனம் புரிவது முதலிய காட்சிகளைச் சித்திரித்திருந்தது. இன்னொரு பக்கத்தில், திருப்பாற்கடலில் மந்திரகிரியை மத்தாகவும் வாஸுகியைக் கயிறாகவும் கொண்டு, தேவர்கள் ஒரு பக்கமும் அசுரர்கள் ஒரு பக்கமும் நின்று கடையும் பிரம்மாண்டமான காட்சியைச் சித்திரித்திருந்தது. அடுத்தாற்போல, பரமசிவனுடைய தவத்தைக் கலைப்பதற்குக் காமதேவன் மலர்க்கணை தொடுப்பது முதல், குமரப் பெருமான் ஜனனம் வரையிலும் உள்ள காட்சிகள் காணப்பட்டன. இந்த உருவங்கள் எல்லாம் கேவலம் உயிரற்ற சித்திரங்களாகத் தோன்றவில்லை. கால், கை, முகம் இவற்றின் சரியான அளவு எடுத்துச் சாமுத்திரிகா லட்சணத்துக்கு இணங்க எழுதப்பட்டிருக்கவுமில்லை. ஆனாலும், அந்த உருவங்களின் ஒவ்வொரு அவயவத்திலும் காணப்பட்ட தெளிவும், முகத்தில் பொலிந்த பாவமும், தத்ரூபமாய் அந்தத் தேவர்களின் முன்னால் நாம் நிற்கிறோமென்னும் மயக்கத்தை உண்டாக்கின.

பிரதி மாதம் மூன்று தினங்கள் இந்தச் சித்திர மண்டபம், பிரஜைகள் எல்லாரும் பார்ப்பதற்கென்று திறந்து வைக்கப்படுவதுண்டு. அவ்வாறு திறந்திருந்த நாட்களில் பொன்னன் இரண்டு மூன்று தடவை இந்தச் சித்திரங்களைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறான். இப்போதும் அந்தச் சித்திரங்கள் அவனுடைய கண்ணையும் கருத்தையும் கவரத்தான் செய்தன. ஆனாலும் இன்று அவற்றை நின்று பார்க்க முடியாதபடி மகாராஜாவும் இளவரசரும் முன்னால் விரைந்து போய்க் கொண்டிருந்தபடியால், பொன்னனும் அவர்களைப் பின் தொடர்ந்து விரைந்து சென்றான்.

சித்திர மண்டபத்தின் இரண்டு மூன்று கட்டுக்களையும் தாண்டிச் சென்று கடைசியாக, பூட்டிய கதவையுடைய ஒரு வாசற்படியண்டை மகாராஜா நின்றார். முன்னொரு தடவை பொன்னன் இதே இடத்தில் நின்று, இந்த வாசற்படிக்கு உட்புறத்தில் என்ன இருக்குமோ என்று யோசித்திருக்கிறான். இந்தக் கதவைத் திறக்கக் கூடாதென்பது மகாராஜாவின் கட்டளை என்று காவலாளர்கள் அப்போது தெரிவித்ததுண்டு. மகாராஜா இப்போது அந்தக் கதவண்டை வந்து நின்று, தம் கையிலிருந்த சாவியினால் பூட்டைத் திறக்கத் தொடங்கியதும் பொன்னனுடைய ஆவல் அளவு கடந்ததாயிற்று. "இதனுள்ளே ஏதோ பெரிய அதிசயம் இருக்கிறது. அதை நாம் இப்போது பார்க்கப் போகிறோம்" என்று எண்ணியபோது அவனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

கதவு திறந்ததும், "பொன்னா! நீ முதலில் உள்ளே போ! தீவர்த்தியை நன்றாய்த் தூக்கிப் பிடி! சுவருக்கு ரொம்பச் சமீபமாய்க் கொண்டு

அருள்வாக்கு

எவன் பொருளைச் செலவழித்து, தக்ஷிணை கொடுத்து, யக்ஞம் செய்கிறானோ அவனுக்கு, யஜமானன் என்று பெயர். 'யஜ்' என்றால் 'வழிபடுவது' என்று அர்த்தம். யஜமானன் என்பதற்கு root meaning யக்ஞம் பண்ணுபவன் என்பதே. இப்போது நம் தமிழ் தேசத்தில் முதலாளியை 'யஜமானன்' என்கிறோம். முதலாளிதானே சம்பளம் தருகிறான்? அதனால் யக்ஞத்திலே தக்ஷிணை கொடுத்து வந்த யஜமானின் ஸ்தானத்தில் இவனை வைத்து விட்டோம். ஸாதாரண மக்களும் இப்படி முதலாளியை யஜமான் என்பதிலிருந்து, இந்த தேசத்தில் வேத வழக்கம் எவ்வளவு ஆழ வேரோடியிருக்கிறது என்று தெரிகிறது.

இன்னொரு வார்த்தையும் நம் தேசத்தின் ஆழ்ந்த வைதிகப் பிடிமானத்தைக் காட்டுகிறது. தமிழ் நாட்டில் ஒருத்தனுக்கு இலவசமாகச் சாப்பாடு போடுகிற இடத்துக்கு "சத்திரம்" என்று பேர் சொல்கிறோம். வடக்கே போனால், சத்திரம் என்று

சொல்ல மாட்டார்கள். "தரம் சாலா" என்பார்கள். "தர்ம சாலை" என்பதன் திரிபு அது. இங்கே தக்ஷிணத்தில் மட்டும் ஏன் சத்திரம் என்கிறார்கள்? சத்திரம் என்றால் என்ன? "ஸத்ரம்" என்பதுதான் 'சத்திரம்' என்றாகியிருக்கிறது. ஸத்ரம் என்பது ஒரு வகை யாகத்தின் பெயர். அந்த யாகத்திற்கும் மற்ற யாகங்களுக்கும் என்ன வித்யாஸம் என்றால், மற்ற யாகங்களில் யஜமானன் என்கிற ஒருவன், தன் திரவியத்தைச் செலவு செய்து, தக்ஷிணை கொடுத்து, யாகம் பண்ணுகிறான்; ரித்விக்குகள் என்ற பிராம்மணர்கள் (புரோஹிதர்கள்) யஜமானிடம் தக்ஷிணை வாங்கிக் கொண்டு, அவனுக்காக யக்ஞத்தை நடத்தித் தருகிறார்கள். ஸத்ர யாகங்களில் மட்டும் யாகம் பண்ணும் அத்தனை பேருமே யஜமானர்கள். ஒரு யக்ஞத்தில் லோக க்ஷேமமும், அதில் கலந்து கொள்கிற எல்லோருக்கும் சித்த சுத்தியும், அதைத் தரிசிப்பவர்களுக்குக் கூட நன்மையும் ஏற்படுகின்றனவென்றாலும், இதனால் விசேஷமாகப் புண்ணியம் அடைவது யஜமானன்தான். ஸத்ர யாகங்களில் ரித்விக்குகளே யஜமானர்களாக இருப்பதால், அத்தனை பேருக்கும் ஸமமான புண்ணியம். இந்த யக்ஞம் தன்னுடையது என்ற உரிமை எல்லோருக்கும் இருக்கிற ஸோஷலிஸ யக்ஞம் இது. இதை வைத்தே, எவரானாலும் உரிமையோடு வந்து, யஜமானர்கள் மாதிரி வயிறாரச் சாப்பிட்டுப் போகிற இடத்துக்கு "சத்திரம்" என்று பேர் வந்து விட்டது. இந்த வார்த்தையிலிருந்து, சத்திரத்தில் சாப்பிடுகிறவனை விடச் சாப்பாடு போடுகிறவன் தன்னை உயர்வாக நினைக்கவில்லை என்ற உயர்ந்த பண்பும் தெரிகிறது.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

போகாதே! தீவர்த்திப் புகையினால் சித்திரங்கள் கெட்டுப் போகும்" என்றார் மகாராஜா.

பொன்னன் உள்ளே போய் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தான். அங்கிருந்த சுவர்களிலும் சித்திரங்கள்தான் தீட்டியிருந்தன. ஆனால், அவை என்ன சித்திரங்கள், எதைக் குறிப்பிடுகின்றன என்பது அவனுக்குத் தெரியவில்லை.

பொன்னனுக்குப் பின்னால், விக்கிரமனுடைய கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பார்த்திப மகாராஜா அந்த இருள் சூழ்ந்த மண்டபத்துக்குள்ளே புகுந்தார்.

"குழந்தாய்! பூட்டி வைத்திருக்கும் இந்த மண்டபத்துக்குள்ளே என்ன இருக்கிறது என்று பல தடவை என்னைக் கேட்டிருக்கிறாயே! உனக்கு இன்னும் கொஞ்சம் வயதான பிறகு இந்தச் சித்திரங்களைக் காட்ட வேணுமென்றிருந்தேன். ஆனால் இப்போதே காட்ட வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. விக்கிரமா! இந்த மண்டபத்தை நான் வேணுமென்றே இருளடைந்ததாய் வைத்திருந்தேன். இதற்குள்ளே என்னைத் தவிர வேறு யாரும் வந்ததில்லை. யாரும் இந்தச் சுவரிலுள்ள சித்திரங்களைப் பார்த்ததுமில்லை!... பொன்னா! தீவர்த்தியைத் தூக்கிப் பிடி!" என்றார் மகாராஜா.

அவருடைய பேச்சில் கவனமாயிருந்த பொன்னன் சட்டென்று தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தான்.

"அதோ, அந்த முதல் சித்திரத்தைப் பார்! குழந்தாய் அதில் என்ன தெரிகிறது?" என்று மகாராஜா கேட்டார்.

"யுத்தத்துக்கு படை கிளம்புகிறது. ஆஹா எவ்வளவு பெரிய சைன்யம்! எவ்வளவு யானைகள்; எவ்வளவு தேர்கள்; குதிரைகள்; எவ்வளவு காலாட் படைகள்!" என்று விக்கிரமன் வியப்புடன் கூறினான்.

பிறகு, சட்டென்று திரும்பித் தந்தையின் முகத்தைப் பார்த்து, "அப்பா!...." என்று தயங்கினான்.

"என்ன விக்கிரமா? கேள்?" என்றார் மகாராஜா.

"ஒன்றுமில்லை, அப்பா! இந்தச் சித்திரங்கள் யார் எழுதியவையென்று யோசித்தேன்" என்றான் விக்கிரமன்.

"நீ நினைத்தது சரிதான். குழந்தாய்! என் கையினால், நானே எழுதிய சித்திரங்கள்தாம் இவை. இந்தப் பன்னிரண்டு வருஷ காலமாய் இரவிலும், பகலிலும் தூங்கும்போதும் விழித்திருக்கும் போதும் நான் கண்டு வந்த கனவுகளைத்தான் இங்கே எழுதியிருக்கிறேன். குழந்தாய், நன்றாய்ப் பார்! யாருடைய சைன்யங்கள் இவை, தெரிகிறதா?"

"ஆஹா! தெரிகிறது. முன்னால் புலிக் கொடி போகிறதல்லவா? சோழ ராஜ்யத்தின் படைகள்தான் இவை. ஆனால் அப்பா!"

என்று மறுபடியும் தயங்கினான் விக்கிரமன்.

''என்ன கேட்க வேணுமோ, கேள் விக்கிரமா!''

''அவ்வளவு கம்பீரமாக நடந்து போகும் அந்தப் பட்டத்து யானையின் மேல், யானைப் பாகன் மட்டுந்தானே இருக்கிறான். அம்பாரியில் யாரும் இல்லையே, அப்பா!''

''நல்ல கேள்வி கேட்டாய்! வேண்டுமென்றேதான் அப்படி யானையின் மேல் யாரும் இல்லாமல் விட்டிருக்கிறேன். இந்தச் சோழவம்சத்திலே எந்தத் தீரன் இம்மாதிரி பெரிய சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு திக்விஜயம் செய்வ[illegible]ாகக் கிளம்பிப் போகிறானோ, அவனு[illegible] உருவத்தை அந்த யானையின் மேல் [illegible] வேணும். குழந்தாய்! தற்சமயம் இந்த சோழராஜ்யம் ஒரு கையகல முள்ள சிற்றரசாக இருக்கிறது. வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர்களும் மேற்கே சேரர்களும் இந்தச் சோழ நாட்டை நெருக்கிச் சிறைப் பிடித்திருக்கிறார்கள். ஆனால் இந்த நாடு எப்போதும் இப்படியிருந்த தில்லை. ஒரு காலத்தில் நம்முடைய வம்சம் மிக்க புகழ் வாய்ந்திருந்தது. விக்கிரமா! உன்னுடைய மூதாதைகளிலே கரிகால் வளவன் நெடுமுடிக் கிள்ளி முதலிய மகாவீரர்கள் இருந்திருக்கிறார்கள். சோழர் என்ற பெயரைக் கேட்டதும் மாற்றரசர்கள் நடுங்கும்படியாக அவர்கள் வீரச் செயல்கள் புரிந்திருக்கிறார்கள். அப்போது பல்லவர் என்ற பெயரே இந்தத் தென்னாட்டில் இருந்ததில்லை. சோழ சாம்ராஜ்யம் வடக்கே வெகு தூரம் பரவியிருந்தது. அந்நாளில் பாண்டியர்களும் சேரர்களும் சோழ மன்னர்களுக்குத் திறை செலுத்திக் கொண்டிருந்தார்கள். கடல்களுக்கு அப்பால் எத்தனையோ தூரத்திலுள்ள அரசர்களெல்லாம் சோழ சக்கரவர்த்திகளுக்குக் காணிக்கைகளுடன் தூதர்களை அனுப்பி வந்தார்கள். இப்போது கடல்மல்லைத் துறைமுகம் பிரசித்தி பெற்றிருப்பது போல, அந்நாளில் காவேரிப் பட்டினம் பெரிய துறைமுகமாயிருந்தது. காவேரிப் பட்டினத்திலிருந்து பெரிய கப்பல்கள் கிளம்பித் தூர தூர தேசங்களுக்கெல்லாம் சென்று, பொன்னும் மணியும் கொண்டு வந்து, சோழ மன்னர்களின் பொக்கிஷத்தை நிரப்பி வந்தன. குழந்தாய்! மறுபடியும் இந்தச் சோழநாடு அம்மாதிரி மகோன்னத நிலையை அடைய வேண்டுமென்பது என் உள்ளத்தில் பொங்கும் ஆசை; நான் இரவிலும் பகலிலும் காணும் கனவு! அதோ, அந்தச் சித்திரத்தைப் பார்!''

இவ்விதம் மகாராஜா ஆவேசம் கொண்டவர் போல் பேசிக் கொண்டு, மேலும் மேலும் சித்திரங்களைக் காட்டிக் கொண்டே போனார். அடுத்த சித்திரத்தில், சோழ சைனியம் ஒரு பெரிய நதியைக் கடக்கும் காட்சி காணப்பட்டது. பிறகு அப்படைகள் பெரிய தோர் மலையில் ஏறிச் சென்றன. அப்பால் ஒரு பெரிய யுத்தக் காட்சி காணப்பட்டது. அதிலே சோழர் சைன்யம் வெற்றியடைந்த பிறகு மாற்றரசர்கள் காணிக்கைகளுடன் வந்து சரணாகதி செய்கிறார்கள்.

இம்மாதிரி பல நதிகளைத் தாண்டியும், பல மலைகளைக் கடந்தும், பல மன்னர்களை வென்றும் கடைசியில் சோழ சைனியம் இமயமலையை அடைகிறது. பர்வத ராஜாவான இமயத்தின் உச்சியில் சோழர்களின் புலிக்கொடி நாட்டப்படுகிறது. இதற்குப் பிறகு சோழ நாட்டின் தலைநகருக்குச் சைன்யம் திரும்பி வருவதும் நகரமாந்தர் அந்த வீரப்படையை எதிர்கொண்டழைப்பதுமான கோலாகலக் காட்சிகள்.

இன்னொரு பக்கத்தில் புலிக்கொடி பறக்கும் பெரிய பெரிய கப்பல்கள் துறைமுகங்களிலிருந்து கிளம்பும் காட்சியை அற்புதமாகச் சித்திரித்திருந்தது. அந்தக் கப்பல்கள் தூர தூர தேசங்களுக்குப் போய்ச் சேருகின்றன; அந்தந்தத் தேசங்களின் மன்னர்கள் பரிவாரங்களுடன் எதிர்கொண்டு வந்து, சோழ நாட்டின் தூதர்களை உபசரிக்கிறார்கள். கடல் சூழ்ந்த அந்நாடுகளில் சோழர்களின் புலிக் கொடி கம்பீரமாய்ப் பறக்கிறது; புலிக்கொடி பறக்கும் தேசங்களிலெல்லாம் பெரிய பெரிய கோயில்களும் கோபுரங்களும் வானை அளாவி எழுகின்றன; இத்தகைய அற்புதமான சித்திரங்களே அந்த மண்டபம் முழுவதும் நிறைந்திருந்தன.

(தொடரும்)



''கணக்குக் காட்டறதுல நம்ம கட்சிச் செயலாளரை யாருமே பீட் பண்ண முடியாதுப்பா!''

''எப்படி?''

''மேடையில 'மைக் டெஸ்டிங் ஒன்-டூ-த்ரீ' என்று டெஸ்ட் பண்ண வகையிலே செலவு ரூ. 5000ன்னு கணக்கு எழுதியிருக்கிறாரே!''

- குடந்தை கவிட் ரவி

ஒரு விநாடியும் ஒரு யுகமும்

சத்யராஜ் குமார்

கண்ணாடியில் முகம் பார்ப்பதேயில்லை. ஈரக் கேசத்தை சின்னக் கொண்டையாய் முடிந்த போது ஜன்னலருகில் முகம் பார்க்கும் கண்ணாடி தெரிந்தது. பழைய நாட்கள் விநாடி மின்னலாய் ஜெயந்தியின் நெஞ்சை வெட்டியது.

அப்போதெல்லாம் கண்ணாடி முன்னால் மணிக்கணக்கில் நிற்பாள். நிதானமாய் ஃபேஸ் க்ரீம் தடவுவாள். ஆற அமரப் பவுடர் பூசுவாள். நெற்றி மையத்தில் அழகான சைசில் நடுவிரலால் கவனமாய்க் குங்குமப்பொட்டு. தலை வகிடின் துவக்கத்திலும் குங்குமச் சிவப்பைத் தீற்ற மறக்க மாட்டாள். அன்றாடம் குறைந்தபட்சம் இரண்டு முழம் குண்டு மல்லிகை தலைப் பின்னலில் செருகியாக வேண்டும். கோத்த பூச்சரத்தைத் தலையின் பின்னால், பக்கவாட்டில் என்று மாற்றி மாற்றி சூடிப் பார்ப்பாள். தாலிக் கொடியை வெளியே எடுத்து, சூரியக் கட்டியாய் மின்னும் மாங்கல்யத்தை மார்புச் சேலையின்மேல் தவழச் செய்து ரசித்து ரசித்துப் பார்ப்பாள்.

தைப்பதற்கு நிறையத் துணிகள்.

மூச்சுத் திணற வேலை இருக்கிறது. நைந்து போன கந்தலான நினைவுகளை உதறினாள் ஜெயந்தி.

வெள்ளைப் புடைவையை அவசரமாய் உடலுக்குச் சுற்றினாள். ஆபரணமில்லாமல் காதும், கழுத்தும் மூளியாய்க் கிடந்தன. நெற்றியில் பாலைவன வெறுமை.

"அம்மா, துண்டு குடு," என்றது பாத்ரூம், மழலையாய். ஐந்து வயது நிவேதா. குளிக்கிறாள். குளித்தபின் ஜட்டியையும், ஸ்கூல் யூனிஃபார்மையும் ஏதோ அவளுக்குத் தெரிந்த அளவில் துவைக்கக் கூட செய்வாள். அப்படிப் பழக்கியிருக்கிறாள் ஜெயந்தி. தன் வேலையைத் தானே செய்ய வேண்டும். எல்லாமே தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது குழந்தை. எதிர்காலத்தில் பெண். என்னுடைய நிலைமை இவளுக்கும் வராதென்பது என்ன நிச்சயம்?

சமையல்கட்டும், பூவும் பொட்டும் மட்டுமே உலகமில்லை என்பது புருஷனை இழந்த பிறகுதான் ஜெயந்திக்கு உறைத்தது. கைக் குழந்தையுடன் வாழ்க்கை நீச்சலுக்கு எத்தனை தத்தளித்தாள். நிவேதாவுக்கு புருஷக் கனவுகளையும், கோழிச் சிறகு அரவணைப்பையும் ஊட்டி வளர்க்கப் போவதில்லை.

"உனக்கு எத்தனை தரம் சொல்றது? குளிக்கப் போறப்ப மறக்காம துண்டை எடுத்துக்கோன்னு."

"ஸாரிம்மா. இன்னிக்கு மட்டும் துண்டை எடுத்துக்குடு. ப்ளீஸ்."

நிவேதாவின் கையில் துண்டைத் திணித்தபோது- கதவு தட்டப்பட்டது.

கதர் வேஷ்டி. கதர் ஜிப்பா. நெற்றி நிறைய சந்தனப்பட்டையுடன் வீட்டு சொந்தக்காரர் பரமசிவம்.

"வாங்க. உள்ள வாங்க."

ஹோல்டிங் சேரை விரித்துப் போட்டாள்.

கக்கத்திலிருந்த கறுப்பு லெதர் பையைக் கைக்கு மாற்றினபடி சொன்னார். "அய்யப்பன் கோயிலுக்கு வந்தேன். அப்படியே உன்னைப் பார்த்துட்டுப் போகலாம்னு..."

ஒண்ணாந்தேதியானால் டாணென்று அய்யப்பன் கோயிலுக்கு வருவார். ஜெயந்தி உள்ளே போய் அலமாரியைத் திறந்தாள். பேப்பர் விரிப்புக்குக் கீழே எடுத்து வைத்த பணத்தைக் கவரில் போட்டு அவரிடம் நீட்டினாள்.

புன்னகைப் பரமசிவமானார். "அம்மா ஜெயந்தி, உன்னோட புருஷன் இருந்த வரைக்கும் கூட இவ்வளவு கரெக்டா ஒண்ணாந்தேதி ஒண்ணாந்தேதி வாடகைப் பணம்




கிடைச்சதில்லை."

"உங்களுக்கு மட்டுமில்லைங்க. மளிகைக் கடைக்காரர், பால்காரர் எல்லாருக்குமே மாசக் கடைசில தயாரா பணம் எடுத்து வெச்சிருவேன். அடுத்தவங்க ஒத்தை வார்த்தை சுருக்குன்னு சொல்லிட்டாலும் என்னால தாங்கிக்க முடியாது."

"தெரியும், தெரியும். இங்க வர்றப் போவெல்லாம் எனக்கு ஒரே ஒரு வருத்தம்தான்."

"என்ன வருத்தம்?"

"நெத்தி நெறையப் பொட்டோட, தலை நிறையப் பூ வெச்சு லட்சுமிகரமா சுமங்கலிக்



கோலத்துல இருப்பியே. அப்படியே பார்த்துப் பழகின கண்ணுக்கு இந்தக் கோலத்தை சகிக்கக்க முடியலைம்மா. சின்ன வயசு, இந்தக் கோலம் உனக்குத் தேவையில்லே. நீ..."

"பரிதாபப் பேச்சுப் பேசி தயவு செஞ்சு என்னை பலவீனப்படுத்தாதீங்க..."

கை குவித்தாள் ஜெயந்தி.

பரமசிவம் மவுனமாய் வெளியேறவும், உமா வரவும் சரியாயிருந்தது.

ஆரம்பத்தில் இருந்த சொற்ப நகைகளை விற்று ஒரே ஒரு தையல் மெஷினை வாங்கினாள் ஜெயந்தி. அக்கம்பக்கப் பெண்களுக்கு ஜாக்கெட் தைத்துக் கொடுத்தாள். ஃபிட்டிங் பிடித்துப் போய் அறிமுகமில்லாதவர்களும் வர ஆரம்பித்தார்கள். அப்படி வந்தவள்தான் மாதர் சங்க பிரசிடெண்ட் வத்சலா ரமணன். இவளுடைய தையல் திறமையும், வாழ்க்கை நிலைமையும் புரிந்து ஒரு கார்மெண்ட் தொழிற்சாலையுடன் தொடர்பு செய்து தந்தாள். சப் காண்ட்ராக்டில் தைப்பதற்கு துணிகள் கொண்டு வந்து போட்டார்கள். வேலை அதிகமானது. அந்த ஒற்றை மெஷினோடு ராப்பகலாய்த் தேய்ந்தாள் ஜெயந்தி. இன்றைக்கு இன்னொரு தையல் மெஷின் வாங்கிவிட்டாள். உமாவை வேலைக்கு வைத்தாள்.

"ஜெயந்திக்கா, துணிங்க வந்துருச்சா?"

"நேத்து சாயந்தரமே டெம்போலலோடு வந்துருச்சு. காலர் ஸ்டிச்சிங் நீ கொஞ்சம் கவனமாப் பண்ணணும் உமா. நீ தெச்சுப் போட்டதுல அஞ்சு பீஸை ஃபாக்டரில ரிஜெக்ட் பண்ணிட்டாங்க."

"பார்த்துச் செய்யறேன்க்கா."

"பெட்டில துணிங்க இருக்கு. சிவப்பு நூல் போட்டுக்க. தெச்சிட்டிரு. நான் நிவேதாவை ஸ்கூலுக்கு அனுப்பிட்டு வரேன்."

"அம்மா, புராகிரஸ் ரிப்போர்ட்ல கையெழுத்துப் போடணும்."

"மூணாவது ராங்க் வாங்கிருக்கே... ஃபர்ஸ்ட் எப்ப வாங்குவே?"

"அடுத்த மாசம்."

"பார்க்கலாம்."

"டீச்சர் சொல்லிட்டாங்க. ஸ்கூல் ஃபீஸ் கட்ட இன்னிக்குதான் கடைசி நாள்ன்னு."

"அடடா! மறந்துட்டேனே. சாயந்தரம் வந்து கட்டிடறேன்."

"அம்மா."

"என்ன?"

"எங்க கிளாஸ்ல எல்லாரும் அப்பாகிட்டதான் கையெழுத்து வாங்கறாங்க. ரமா, உஷா, மாலா எல்லாருக்கும் ஃபீஸ் கட்ட அவங்க அப்பாதான் வருவாங்க. நம்ம அப்பா வர மாட்டாங்களா?"

ஒரு விநாடி கலங்கிப் போனாள் ஜெயந்தி. ஊஹூம். குழந்தை முன்னால் உடைந்து போகக்கூடாது.

"அப்பா வர மாட்டார்டா. நீ சின்னக் குழந்தையா இருக்கறப்ப வானத்துக்குப் போயிட்டார்."

"ஏன் போனார்?"

"சாமி கூப்ட்டுச்சு. சாமிகிட்ட போயிட்டார்."

"ஊர்ல சிவகாமிப் பாட்டி செத்துப்

போனாளே அந்த மாதிரி செத்துப் போய்ட் டாரா?"

ஓ் உதட்டைக் கடித்து, "ம்." என்றாள். ஜெயந்தி எல்லாவற்றையும் சமாளித்து விட்டாள். நிவேதாவின் இந்த ஏக்கத்தைச் சமாளிப்பதுதான் சிரமமூட்டுகிறது. நம் பிக்கை இருந்தது. இதையும் சமாளிக்கலாம். இன்னும் கொஞ்சம் பெரியவளானால் மேல் பூச்சற்ற வார்த்தைகளால் உணர்த்தலாம்.

நிவேதாவின் மனசைத் திசை திருப்ப விரும்பி, "அடுத்தவாரம் உனக்கு நாலு நாள் ஸ்கூல் லீவு. தெரியுமா?"

"தெரியும். பூஜா ஹாலிடேஸ்."

"அப்ப நாம ஊருக்குப் போகப் போறோமே. போய் தாத்தாவைப் பார்க்க போறோமே."

"ஹைய்யா."

உற்சாக நிவேதா குதித்தாள்.

ரயில்வே ஸ்டேஷன். பிளாட்பாரங்கள் ஜனத்திரளால் மிதிபட்டன. டீ.வி. பெட் டிகளில் விளம்பர இரைச்சல். நீலகிரி எக்ஸ் பிரஸ் இன்னும் சில நிமிஷங்களில் இரண் டாவது பிளாட்பாரத்துக்கு வரப் போவதாக தலைக்கு மேல் ஒரு அசரீரி.

இரும்பு கர்டர் ஓரமாய் சூட்கேசை வைத்துக் காத்திருந்தாள் ஜெயந்தி. நிவேதா சற்றுத் தள்ளி கலர் கலராய் பல்பு எரியும் எடை பார்க்கும் இயந்திரத்தைக் காட்டி நச்சரித்தாள்.

"அம்மா, நான் வெய்ட் பார்க்கணும்."

"பேசாம இரு. கூட்டத்துல காணாம போயிருவே."

"எதிர்லதான இருக்கு. அம்பது பைசா குடும்மா. மேல ஏறி நின்னா சக்கரம் சுத்தும். சக்கரம் நின்னா காசைப் போடணும். காசைப் போட்டா கார்டு வரும். அம்பது பைசா குடும்மா."

நச்சரிப்பு தாங்காமல் பர்சைப் பிரித் தாள். ஐம்பது பைசா சில்லறையைப் பொறுக்கி நிவேதாவின் கையில் தந்தாள். நிவேதா எடை பார்க்கும் இயந்திரத்துக்கு வேகமாய் ஓடினாள்.

"நல்லாருக்கியா ஜெயந்தி?"

முரட்டுக் குரல். சட்டெனத் திரும்பி னாள்.

முள்முள்ளாய்த் தாடி வைத்த அவன் மொச்சைப் பற்களால் நிகோடின் தடயங் களுடன் சிரித்தான். "புருஷன் நான் முன்னங் கிப்பத்தை மாதிரி முழுசா இருக்கறப்ப உனக்கு இப்படி ஒரு விதவைக் கோலம் தேவைதானா?"

அவனைப் பார்த்ததுமே ஜெயந்தியின் நெஞ்சுக்குள் தீ மூண்டது. மனசுக்குள் அந்த அமில தினம் தெரிந்தது.

"ஜெயந்தி, குமுளில ஜீரோ டிகி குளிர். தாக்குப் பிடிக்கவே முடியலை. வர்ற வழில கடலூர்ல உனக்குப் பிடிச்ச குண்டுமல்லியை மறக்காம வாங்கிட்டு வநதேன். எங்கே தலையைக் காட்டு."

ஜெயந்தி அசையாமல் வெறித்தாள்.

"ஏய்? என்ன பேசாம இருக்கே?"

"நீங்க எங்க போனிங்க?"

"குமுளி."

"எதுக்குப் போனிங்க?"

"பிசினஸ் சமாசாரமாத்தான்."

"பொய். பச்சைப் பொய். யாரவ? சொல் லுங்க, யாரவ?"

"ஜெ...ய...ந்தி?"

"எதிர்வீட்டுப் பையன் எப்பவோ சொன்னான். அடுத்த தெரு அல்லி சொன்னா. உன்னோட வீட்டுக்காரர் தியேட் டர்ல, ஓட்டல்ல, பார்க்ல எவளோ ஒருத்தி யோட அடிக்கடி சுத்தறார்ன்னு. நான்



தியோடர் ட்ரீசர் என்ற பிரபல அமெரிக்க எழுத்தாளரை 'டெலினி யேட்டர்' என்ற பத்திரிகையின் ஆசிரிய ராக நியமித்தார்கள். தாம் அனுப்பிய இரு சிறுகதைகள் அங்கு பரிசீலனைக்குக் காத் திருப்பதைப் பார்த்தார். ஆசிரியர் என்ற முறையில் அவை அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. உடனே அவற்றைத் தம் விலாசத்துக்குத் திருப்பி அனுப்ப உத்தர விட்டார்!

- 'ஹிந்து'விலிருந்து :
அ. ஷண்முகசுந்தரம்

நம்பலை. இந்தத் தடவை நானே கண்ணாரப் பார்த்துட்டேன். பக்கத்து வீட்டுக்காரங் களோட சூலக்கல் மாரியம்மன் கோயிலுக்குப் போயிருந்தேன். பொள்ளாச்சில பஸ் மாறு றப்போ ஆட்டோல அவ கூட நீங்க இழைஞ் சிக்கிட்டுப் போறதை நான் பார்த்துட்டேன். சே, நாப்பது கிலோமீட்டருக்கு அந்தப் பக்கம் எவளோ ஒருத்தி கூட கூத்தடிச்சிட்டு, பத்து நாளா பிசினஸுக்காக குமுளி போயிருந்ததா கூசாம பொய் சொல்றீங்களே?''

''ஏய் சும்மா நிறுத்துடி.'' அவன் முகம் இறுகினான். ''உனக்குத் தெரிஞ்சிருச்சு. ரொம்ப சந்தோஷம். ஆமாடி.. நான் அவளை வெச்சிருக்கேன். பொள்ளாச்சில வீடு பார்த்து வெச்சிருக்கேன். நீ பிரசவத்துக்காகப் போயி ருந்தியே, அப்ப பழக்கமாச்சு. என்னைப் பொறுத்தவரை ஒரு புள்ளை பெத்ததுமே உன்னோட கவர்ச்சியெல்லாம் தீர்ந்தது. 'மச்சான் நா புள்ளையே பெத்துக்க மாட் டேன். பெத்துக்கிட்டா அப்புறம் என்னை உங்களுக்குப் பிடிக்காமப் போயிரும்'பா. அவளைத்தாண்டி எனக்குப் பிடிச்சிருக்கு.''

''த்தூ... இரட்டை வாழ்க்கை வாழுற ஒருத்தனுக்குப் பெண்டாட்டியா வாழ நான் விரும்பலை. அவகிட்டயே போய்டுங்க.''

''என்னை அனுப்சிட்டு நீ எவனை சேர்த்துக்கலாம்னு பாக்கறே? தழையத் தழைய மல்லிகைப் பூ வெச்சிப்பியே. நெத்தி நெறையக் குங்குமப்பொட்டு வெச்சுப்பியே. இந்தப் பூவும் பொட்டும் உனக்கு நான் போட்ட பிச்சைடி.''

ஜெயந்தி நெற்றிப் பொட்டை உள்ளங் கையால் அழுந்தத் துடைத்தாள். கூந்தல் பூவைப் பிய்த்து அவன் முகத்தில் ஆவேச மாய் விசிறியடித்தாள்.


''வேண்டாம். நீங்க போடற பிச்சை எனக்கு வேண்டாம். பூவும் பொட்டும் இல் லாமலே இந்த உலகத்துல என்னால வாழ்ந்து காட்ட முடியும்.''

பூச்சரம் முகத்தில் தாக்கிய கோபத்தில் பற்களை நறநறத்தான். அவள் தலைமுடியைக் கொத்தாய்ப் பற்றியுலுப்பி கன்னத்தில் அறைந்தான்.

''போறேண்டி.. இனிமே நா உனக்குப் புருஷனா இங்க வர மாட்டேன். போறதுக்கு முந்தி வெடுக்கென்று மாங்கல்யச் சரடைப் பறித்துக் கொண்டு விருட்டென மறைந்து விட்டான். அன்றைக்குப் போனவன்தான்...

''நல்லாருக்கியா?'' கிண்டலாக மறு படியும் கேட்டான்.

ஜெயந்தி சலனமில்லாமல் சொன்னாள்.



''டிகிரி வாங்கின பிறகு நான் மேலே என்ன சார் படிக்கலாம்...?''
''தினமும் பேப்பர்லே வேலை வாய்ப்பு விளம்பரங்களை!''
- கார்த்திக் ராஜா

''ரொம்பவே நல்லாருக்கேன்.''

''ஊருக்கா கிளம்பிட்டே?''

''ஆமா.''

''செலவுக்குப் பணம் வேணுமா?''

விஷச் சிரிப்புடன் பாசாங்காய்ப் பாக் கெட்டில் துழாவினான்.

''அவசியமில்லை. ரெண்டு தையல் மெஷின் வாங்கிட்டேன். ஒரு பொண்ணை சம்பளம் குடுத்து வேலைக்கு வெச் சிருக்கேன்.''

''குழந்தை எங்க?''

''அதோ. அங்க எடை பார்த்துட்டி ருக்கா.''

''அதுக்கு அப்பான்னா என்னன்னு தெரியுமா?'' எகத்தாளக் கேள்வி.

''தெரியும். அவளோட அப்பா சின்ன வயசிலயே செத்துப் போய்ட்டார்ன்னும் தெரியும். அப்படிச் சொல்லித்தான் அவளை வளர்த்திருக்கேன்.''

ஜெயந்தி உதட்டில் புன்னகை காட்டி இதைச் சொன்னதும் - முகம் இருண்டு போனான். மேலே பேச்சின்றி ஜனக்கும்பலில் கலந்து மறைந்தான்.

எடை மெஷினை விட்டு ஓடி வந்தாள் நிவேதா.

''யாரும்மா அந்த மாமா? உன்கிட்டே என்ன கேட்டார்?''

''அவருக்கு வழி தெரியாதாம். என் கிட்டே வழி கேட்டார். எப்படிப் போகா ணும்ன்னு நான் அவருக்கு வழி சொன் னேன்.''

மணிக்கொடி

28

ஜோதிர்லதா கிரிஜா

காதுகளைக் கூர்மைப்படுத்திய படி கவனித்த பாமாவுக்கு அஞ்சனாவும் அமராவதியும் பேசிக் கொண்டது முழுவதும் கேட்டது.

"அஞ்சனா, தூங்கிட்டியா?"

"இல்லே."

"உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்..."

"சொல்லு. என்ன விஷயம்?"

"அம்மா உன்னைப் பத்தி ரொம்பக் கவலைப்படறா, அஞ்சனா. நீ சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கணும்."

"இத பாரு, அமராவதி. இது என்னோட வாழ்க்கைப் பிரச்னை. கல்யாணத்துக்கும் எனக்கும் சரிப்பட்டே வராது. நான் சுதந்தரப் போராட்டத்துல தீவிரமா ஈடுபடணும்னு நெனச்சிண்டிருக்கேன். அதுக்கெல்லாம் கல்யாணம் இடைஞ்சல். ஆத்துல ஒரு கால், சேத்துல ஒருகால்னெல்லாம் என்னால ரெண்டுங்கெட்டானா நிக்க முடியாதுடி."

அஞ்சனாவின் குரலில் ததும்பிய உறுதியும் அழுத்தமும் அமராவதியின் நெஞ்சினுள் ஆழமாக இறங்கின. கணம் போல், 'நரேந்திரநாத் மீது நான் காதல் வசப்பட்டது தப்போ?' என்று கூட அவளை நினைக்க வைத்து விட்டன. சற்று நேரம் எதுவும் பேசாதிருந்த அமராவதி, "உன்னோட கொள்கைக்கு ஒத்த வரனாப் பார்த்துக் கழுத்தை நீட்டினா தீர்ந்தது. அம்மா வீணாக் கவலைப்பட வேண்டாமோல்லியோ?" என்றாள்.

"அப்படி ஒருத்தர் மேல எனக்கு நோக்கம் விழுந்தது. ஆனா, அவருக்குக் கலியாணம் ஆயி ஒரு கொழந்தையும் இருக்கு. என்னால வேற எவனையும் விரும்பவும் முடியாது..." என்று தனக்குள் சொல்லிக் கசப்புடன் புன்னகை செய்து கொண்ட அஞ்சனா, "ஆமா? அம்மாவோட கவலையைப் பத்தி இப்ப எதுக்கு நீ திடீர்னு கவலைப்படறே?" என்று கேட்டு விட்டு மெல்லச் சிரித்தாள்.

"ஒரு தங்கைங்கிற முறையில கேட்டேன். அவ்வளவுதான். வேற காரணம் எதுவும் இல்லே. நீ எதுக்குச் சிரிக்கிறே அதுக்கு?"

"நீ பொய் சொல்றேடி, அமராவதி."

"அப்படியே வெச்சுக்கோ."

"நான் சொல்லட்டுமா? உன்னை யாரோ லவ் பண்றா. நீயும்தான். அக்காவுக்கு முடியாம நான் பண்ணிண்டா நன்னாருக்காதேன்னு கவலை. அதானே?"

அஞ்சனாவின் ஊகிக்கும் திறன் அமராவதியை அயர்த்தியது. "அப்படித்தான்னு வெச்சுக்கயேன். அதுக்காகவாவது நீ சீக்கிரம் பண்ணிக்கலாமில்லியா?"

"கதையா இருக்கே, என்னை விட்டுட்டு நீ பண்ணிண்டா நான் எதுவும் தப்பா நினைக்கவே மாட்டேண்டி."

"எனக்குக் கோவம் வரும், நீ இது மாதிரிப் பேசினா. ஆமா. இந்த டாபிக்கை நான் எடுத்ததே தப்பு."

"உனக்கு யார் மேலயாவது இஷ்டம்னாச் சொல்லு. நான் அப்பா, அம்மாகிட்ட உனக்காகப் பேசறேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. விடு, எனக்குத் தூக்கம் வருது."

அதற்குப் பிறகு இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

பாமாவுக்கு வெகு நேரம் வரையில் உறக்கம் வரவே இல்லை. அஞ்சனாவுக்குத் தோன்றியது போன்றே அமராவதியின் மீது அவளுக்கும் ஐயம் வந்தது. அன்று மாலை மொட்டை மாடியில் நரேந்திரநாத் பானர்ஜியுடன் அவளைப் பார்த்தபோதே அவள் மனத்தில் ஒரு நெருடல் விளைந்திருந்தது. அவன் ஒரு வங்காளியாக இருந்தது அவளால் சற்றும் செரித்துக் கொள்ள முடியாதது. இதே நரேந்திரநாத் அசல் தமிழனாகவே அவர்களது சாதியையும் சேர்ந்தவனாகவே - இருந்தாலும் கூட அவனை மாப்பிள்ளையாக

ஏற்க அவள் தயாராக இல்லை; எந்த நேரமும் அவன் தூக்கிலிடப்படலாம் என்பதால் கொலைக் குற்றத்துக்காகத் தேடப்பட்டு வருபவனை மருமகனாக அங்கீகரிப்பது குறித்து அவளால் நினைத்தும் பார்க்க முடியவில்லை.

இளங்கன்று அச்சமறியாது. துள்ளித்தான் குதிக்கும். குதிப்பதால் ஆபத்து என்பதைத் தாய்ப் பசு உணர்த்தாவிடில் வேறு யார் உணர்த்துவார்கள்?

குஞ்சம்மாவுக்குத் தோன்றிய திட்டம் எளிதாக நிறைவேறும் வகையில் மறுநாள் நாத்தனார் விசாலத்தின் மைத்துனர்களுள் ஒருவர் செங்கல்பட்டில் தவறிப் போக, அவளை ராமசாமி ரெயிலேற்றி அனுப்பி வைத்தார். மாலைக்குள்ளேயே அவள் திரும்புவதாக இருந்தது. அவள் திரும்புவதற்குள் தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளக் குஞ்சம்மா ஆயத்தமானாள். ராமசாமி பள்ளிக்குப் புறப்பட்டதும் அவள் டாக்டரிடம் போவதாய்ப் பக்கத்து வீட்டில் சொல்லிவிட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு தெருவில் இறங்கினாள். பெரிதாகி விட்டிருந்த வயிற்றைத் தூக்கிக் கொண்டு தெருவுக்கு வரக் கூச்சமாக இருந்தாலும் அவளுக்கு இதைவிடவும் வாய்ப்பான தருணம் கிடைக்க வழியில்லை என்பதால் வெட்கப்பட்டுக் கொண்டே அவள் நடந்தாள்.


தன்னைத் தனியாகச் சந்திக்க விரும்பிய பெண்மணி யாராக இருக்கும் என்று வியந்தபடியே பியூனிடம், ''அவாளை வரச் சொல்லு,'' என்று ராஜாராமன் ஆவலுடன் கதவைப் பார்த்தார்.

கதவைத் தள்ளிக் கொண்டு வயிறு முன்னே வர ஆயாசத்துடன் அறைக்குள் நுழைந்த குஞ்சம்மாவைப் பார்த்ததும் அவருக்குத் திக்கென்று ஆகியது. ஏதோ விபரீதம் என்பது புரிந்தது. தம்மையும் அறியாது அவர் எழுந்து நின்றார்.

"வாங்கோ, வாங்கோ. ஏது இவ்வளவு தூரம்? மிஸ்டர் ராமசாமி சவுக்கியந்தானே? உக்காருங்கோ..."

முகத்து வியர்வையைப் புடைவைத் தலைப்பால் ஒற்றியபடி, "வேணாம், நான் நின்னுண்டே பேசிட்டுப் போயிடறேன். ஒரே நிமிஷந்தான். அவர் நன்னாத்தான் இருக்கார்... இங்க இப்ப யாரும் வர மாட்டாளோ?"

"வரமாட்டா. பியூன்கிட்ட சொல்லி இருக்கேன் யாரும் உள்ளே வரக் கூடாதுன்னு. நீங்க உக்காருங்கோ முதல்ல." - அவளை உபசரித்தவாறே ராஜாராமன் உட்கார்ந்து கொண்டார்.



வேறு வழியின்றி அவள் நாற்காலியின் விளிம்பில் பட்டும் படாமலும் உட்கார்ந்தாள்.

பிறகு தன் பையிலிருந்து அந்த மொட்டைக் கடிதத்தை எடுத்து அவரிடம் நீட்டியபடி, "இதைப் பிரிச்சுப் படிக்கிறதுக்கு முன்னாடி நான் சொல்றதை ஒரே ஒரு நிமிஷம் கேட்டுடுங்கோ. நான் எங்காத்துக்காரர் மேல சந்தேகப்பட்டுண்டு இங்க உங்களைப் பார்க்க வரல்லே. அவர் ரொம்ப நல்ல மாதிரி. தப்பு வழிக்கெல்லாம் போகப்பட்டவர் இல்லே. ஆனா இந்த ஊரும் உலகமும் பொல்லாதது... இனிமே நீங்க படிக்கலாம். நான் என்ன சொல்ல வந்தேன்கிறது உங்களுக்கு இப்ப புரியும்...'' என்று படபட



"சார், 'நேற்று சுமங்கலி கல்யாண மண்டபத்தில் தாலி கட்டும் நேரத்தில் மாப்பிள்ளை ஓடிவிட்டார்' இதற்கு 'தலைப்பு' எப்படி சார் கொடுக்கிறது?"

"'மணமகளிடம் இருந்து மயிரிழையில் தப்பிய மணமகன்'னு கொடுத்துடுங்க!"

- சரவணகுமார்



"போலீஸ் வேலைக்கான இண்டர்வியூவுக்குப் போனியே... என்ன கேட்டாங்க?"

"'நைட்டுல ஒருவழிப் பாதையில விளக்கு இல்லாம மூணுபேர் ஒரு மொபெட்ல உன் எதிரில் வந்தாங்கன்னா எவ்வளவு மாமூல் வாங்குவே?'ன்னு கேட்டாங்க!"

- ஆர். ரகோத்தமன்

வென்று பேசி விட்டுக் களைப்புடன் பெருமூச்சு விட்டாள்.

அவர் பரபரப்புடன் அந்தக் காகிதத்தைப் பிரித்துப் படித்தார். அவளுடைய உணர்ச்சிகள் துல்லியமாக அவருக்கு விளங்கின. 'உம்ம பெண்ணை எங்க ஆத்துக்காரரோட பழக விடாதீங்கோ' என்று கேட்க வந்திருக்கிறாள். அவருக்குச் சிரிப்பும் கசப்பும் ஒருசேர வந்தன.

"இது உங்களுக்கு வேணுமா, இல்லே கிழிச்சுப் போட்டுடட்டுமா?"

"வேணாம், வேணாம். கிழிச்சுடாதீங்கோ! எனக்கு வேணும், அது. குடுத்துடுங்கோ."

அவர் மவுனமாக அதை மடித்து அவளிடம் கொடுத்தார். "இதை நீங்க நம்பறேளா?"

"நம்பவே இல்லே. அதான் முதல்லயே சொல்லிட்டேனே, எங்க ஆத்துக்காரர் தப்பு வழிக்கெல்லாம் போகப்பட்டவர் இல்லேன்னு?"

"பின்ன? கிழிச்சுப் போட்டுட்டு சும்னு இருக்க வேண்டியதுதானே? அவர்கிட்ட சொல்லாதேங்கோ. மனசு அடிபட்டுப் போயிடுவார். சொல்லிட்டேளா என்ன?"

"இல்லேல்லே. சொல்லல்லே. சொல்றதாவும் இல்லே."

"என்னை எதுக்குத் தேடிண்டு வந்தேன்னு தெரிஞ்சுக்கலாமா? இதுல நான் என்ன செய்யணும்?" என்று கேட்டார்.

தனது வேண்டுகோளை எப்படி வெளியிட்டால் அவருக்கு மனம் புண்படாதிருக்கும் என்பதற்கு வழியெல்லாம் ஒத்திகை செய்து கொண்டுதான் வந்திருந்தாளெனினும், இப்போது அவருக்கு முன்னால் உட்கார்ந்திருந்த நேரத்தில் விளைந்த கிளர்ச்சியில் குஞ்சம்மாவுக்கு நாவெழும்ப மறுத்தது. தொண்டை முடிச்சு ஏறி இறங்கியது.

"சொல்லுங்கோ..." என்று அவர் திரும்பவும் கேட்டதும், அவள் தலையைக் குனிந்து கொண்டே, "உங்க பொண்ணு அஞ்சனாவால எங்காத்துக்காரர் பேரு கெட்டுப் போறது. அதனால..." என்று தயங்கினாள்.

"...இது மாதிரி கூட்டங்களையெல்லாம் எங்காத்துக்காரரோட கலந்துக்கிறதை அவா நிறுத்தினா நன்னாருக்கும்... அவளுக்கும் நாளைக்குக் கல்யாணம் கார்த்தின்னு ஆகணும் இல்லியா? இவரை விட்டுத் தள்ளுங்கோ. புருஷா. கல்யாணமும் ஆனவர். ஆனா பேரு கெட்டுப் போன ஒரு பொண்ணை நாளைக்கு யாரு கல்யாணம் பண்ணிப்பா?" - குஞ்சம்மா மூச்சு விடாமல் பேசி விட்டு, முதன் முறையாகத் தலை உயர்த்தி அவரைப் பார்த்துப் புன்னகை செய்தாள். 'எல்லாம் உங்க பொண்ணோட நல்லதுக்கோசரந்தான் சொல்றேன்...' என்னும் பாவம் கண்களில் தெரியும்படி பார்த்துக் கொண்டாள்.

ராஜாராமனும் புன்னகை செய்தார். 'குஞ்சம்மாவுக்கு முழு நம்பிக்கை இல்லாதிருக்க வேண்டும், அல்லது காலப்போக்கில் கணவர் மாறி விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அவளுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்' என்பது புரிய, 'மனைவி எனும் பதவியில் உள்ள பெண் வேறென்ன செய்வாள்?' என்று தோன்றியது. எனினும், 'என் பெண்ணைக் கண்டித்து வைக்கிறேன்' என்றோ 'உங்கள் கணவருடன் இனி இவள் கூட்டங்களிலெல்லாம் கலந்து கொள்ள மாட்டாள்' என்றோ வாக்குறுதியளிக்க அவ



"நம்ம கம்பெனி தயாரிக்கும் பிளேடுகள் ஷார்ப்பா இல்லை'ன்னு புகார்க் கடிதம் வந்திருக்கு சார்...!"

"யார்கிட்டே இருந்து?"

"பிக்பாக்கெட் அடிப்போர் சங்கத்தில் இருந்து!"

- த. முகிலன்



"ஒரு ராணுவ வீரனைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்னு சொல்றியே, ஏன்?"

"அவனுக்குத்தான் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தெரியும்!"

- சோம. முத்துக்குமார்

ரால் முடியவில்லை.

இருந்தாலும், அவளுக்கு ஏதேனும் பதில் சொல்லித்தானாகவேண்டுமென்பதால், "இத பாருங்க மிஸஸ் ராமசாமி! எம் பொண்ணு கெட்டவ இல்லே. அவ கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லேன்னும் தேச சேவையே தன்னோட லட்சியம்னும் சொல்லிண்டிருக்கா. எப்ப நான் கல்யாணம் பண்ணிக்க முடிவு பண்றேனோ அப்ப நானே உங்ககிட்ட வந்து சொல்றேன்னு சொல்லிட்டா. அதனால எம்பொண்ணைப் பத்தின பயம் உங்களுக்கு வேண்டாம். ஏற்கெனவே கல்யாணம் ஆனவரோட வாழ்க்கையில குறுக்கிட்டுக் குளறுபடியெல்லாம் பண்ணக் கூடியவளா அவளை நான் வளர்க்கல்லேம்மா. நீங்க கவலையேபடாதேங்கோ," என்றார் சிரித்தபடி.

"அச்சச்சோ. நான் அந்த அர்த்தத்துல சொல்லல்லே..."

"நீங்க எந்த அர்த்தத்துல சொல்லி இருந்தாலும் சரி. நாலு பேர் நாலு சொல்லுவாங்கிறதுக்காக நாம ஒண்ணைச் செய்யறதுன்னோ இல்லே செய்யாம இருக்கிறதுன்னோ ஆரம்பிச்சா நம் பயித்தியக்காரச் சேஷ்டைகளுக்கு முடிவே இல்லாம போயிடும்மா... ஆனா, நான் உங்களைப் புரிஞ்சுக்காம பேசறேன்னு மட்டும் நினைச்சுடாதங்கோ. உங்க கவலை எனக்கு நன்னாப் புரியறது. உங்களுக்கு உங்க ஆத்துக்காரர் மேல எப்படி முழு நம்பிக்கை இருக்கோ, அதே மாதிரி எம் பொண்ணு மேல எனக்கும் நம்பிக்கை இருக்கு."

"நீங்க என்னைத் தப்பாத்தான் புரிஞ்சுண்டுட்டேள். எனக்கு நன்னாத் தெரியறது..." என்ற குஞ்சம்மாவின் கண்கள் நொடிப் பொழுதுக்குள் நிரம்பி விட்டன. ஒரு பிள்ளைத்தாய்ச்சிப் பெண் அழுவதைக் காண அவருக்குச் சகிக்கவில்லை.

அவர் பதற்றத்துடன் எழுந்து நின்றுகொண்டார். "என் பொண்ணைப் பத்தின உங்க கவலையும் எனக்குப் புரியறது. தேங்க்யூ வெரி, வெரி மச்... நான் வேணா உங்களை ஆத்துல கொண்டு வந்து விடட்டுமா, கார்ல?"

குஞ்சம்மா எழுந்தாள். கண்களை நன்கு துடைத்துக் கொண்டு, "வேணாம், சார். நானே போய்க்குவேன்" என்றாள்.

அவள் புறப்பட்டுப் போனதும் ராஜாராமன் சிந்தனை வயப்பட்டார். 'ராமசாமி ராமசாமி' என்று வாய்க்கு வாய் அஞ்சனா அவரைப் புகழ்வதும், அவர் மீது மிகுந்த மதிப்பு வைத்திருப்பதும் மனத்துள் அவளுக்கு அவர்பால் ஒரு கவர்ச்சி இருக்குமோ என்று இப்போது அவரை எண்ண வைத்தன. இருந்தாலும் அஞ்சனா மற்றொரு பெண்ணின் இல்வாழ்க்கையில் குறுக்கிட்டுக் குழப்பம் ஏற்படுத்தக்கூடியவள் என்று சந்தேகப்பட அவர் மனம் மறுத்தது.

அவசர அவசரமாய் வீட்டை நெருங்கிய குஞ்சம்மாவுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. பூட்டிய கதவுக்குப் பக்கத்தில், அதை அணைத்தாற் போன்று இருந்த திண்ணையில் ராமசாமி கையில் இருந்த புத்தகம் ஒன்றைப் புரட்டியபடி உட்கார்ந்திருந்தார். குஞ்சம்மாவுக்கு நெஞ்சு உலர்ந்து விட்டது. இதயத் துடிப்பின் ஒலி அதிகரித்துக் கொண்டே போயிற்று. தலை சுற்றுகிறாற் போல் இருந்தது....!

(தொடரும்)

● தந்தையின் சொத்தில் மகளுக்கும் உரிமை உண்டு.

● கணவனின் சொத்துக்களுக்கு மனைவியும் இணையான அதிபதி.

● பெண்களும் இனி குழந்தைகளைத் தத்து எடுக்கலாம்.

● தாயும், குழந்தையின் 'கார்டிய'னாக உரிமை பெறலாம்.

● ஜீவனாம்சத்தின் உச்ச வரம்பு ரூ. 500 என்பது அகற்றப்பட்டது.

● விபசாரத்தில் ஈடுபடும் ஆண்-பெண் இருவருக்கும் சமமான தண்டனை!

● குடும்பத்தின் அளவை நிர்ணயிப்பதில் பெண்களுக்கும் அதிகாரம்!

● சென்சார் போர்டில் 50% பெண்கள்; பெண்களுக்கெதிரான வன்முறை, ஆபாசம் ஒழித்தல்.

● மக்கள் தொடர்புச் சாதனங்களில், பெண்களை, **'positive role'**களில் சித்திரித்தல்.

இந்தத் திட்டங்களெல்லாம் நமது நாட்டில்தான் போடப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் அல்ல; மகாராஷ்டிர மாநிலத்தில்! இந்த முன்னேற்றத் திட்டங்களை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தவர் ஒரு தமிழ்ப் பெண் - திருமதி சந்திரா ஐயங்கார், ஐ.ஏ.எஸ். (Secretary, Dept. of Women & Child Development & Member Secretary State Women's Commission). அவருடன் ஒரு சந்திப்பு.

கேள்வி : பெண்களுக்கான முன்னேற்றத் திட்டங்களை வரையறுக்கும் போது, உங்களின் இறுதிக் குறிக்கோள் எதுவாக இருந்தது?

சந்திரா ஐயங்கார் : பெண்களிடம் இயற்கையிலேயே நிறைய ஆற்றல் பொதிந்திருக்கிறது; அதை வெளிப்படுத்துவதில்



உள்ள முட்டுக் கட்டைகளை அப்புறப்படுத்துவதே புதிய திட்டத்தின் நோக்கம். அதாவது "Empowering Women" - இதுதான் என் இலக்கு!

கேள்வி : உங்கள் கருத்தில், ஒரு 'இலட்சிய இந்தியப் பெண்' எப்படி இருக்க வேண்டும்?


சந்திரா : பெண்ணைக் கட்டுப்படுத்துவது, அவளுடைய சொந்தத் தகுதிகளும், விருப்பு வெறுப்புகளுமாக இருக்க வேண்டுமேயன்றி, வேறு அந்நியத் தளைகள் கூடாது. ஒரு பெண் குடும்பத் தலைவியாய் மட்டுமே இயங்க விரும்பினால், அவளை வேலைக்குப் போகக் கட்டாயப்படுத்தக் கூடாது; ஆனால் வீட்டுப் பொறுப்புக்களைத் தவிர ஏனைய வெளிப் பொறுப்புகளைச் சுமக்கும் தகுதியும், விருப்பமும் அவளுக்கு இருப்பின், நிச்சயமாக வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

கேள்வி : நீங்கள் கொண்டு வந்திருக்கும் மாற்றங்களுள் எந்த மாற்றம் பெண்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கப் போவதாக நினைக்கிறீர்கள்?

சந்திரா : காவல் துறையில் ஆண் - பெண் இருபாலரும் சமனப்படுத்தப்பட்டிருப்பதை நான் முக்கிய மாற்றமாகக் கருதுகிறேன். இனி மாநிலத்தில் 25% காவல் நிலையங்களாவது, பெண் அதிகாரிகளின் தலைமையில் இயங்கும். உடலாலும் உள்ளத்தாலும் துன்புறுத்தப்பட்ட ஒரு பெண், காவல் நிலையத்தைச் சரண்புகாமலிருப்பதற்கு, அங்கேயும் ஆண்களின் ஆதிக்கமிருக்கிறது என்பது ஒரு காரணமில்லையா?

கேள்வி : சொத்துரிமையால் பெண்களுக்கு என்ன பயன்? வரதட்சிணை கேட்டு வம்பு செய்யும் கணவன்மார்கள் இனி சொத்தையும் கேட்டுத் தொந்தரவு செய்யலாமில்லையா? கல்வி, திருமணத்துடன் சொத்தையும் தர வேண்டுமென்றால் பெண்களை பாரமாக பெற்றவர்களே நினைக்க மாட்டார்களா?

சந்திரா : ஏன் எப்போதும் பெண்ணையும் கல்யாணத்தையும் இணைத்தே பேசுகிறீர்கள்? வரதட்சிணை கொடுப்பது சட்டப்படி குற்றம் என்று தெரிந்த போதும், எதற்காகப் பெற்றோர், தங்கள் சக்திக்கு மீறி பணத்தை வாரி இரைத்துத் திருமணம் செய்ய வேண்டும்? அந்தப் பணத்தை உருப்படியாக அவளது கல்விக்கும், பிறகு ஒரு தொழில் ஆரம்பிப்பதற்கும் முதலீடு செய்தால், அந்தப் பெண்ணின் வாழ்க்கைத் தரத்துடன், சமூக நிலையும் எவ்வளவு உயர்வு பெறும்? இன்று ஒரு பெண், தொழில் துவங்க வேண்டுமென நிதி உதவி கோரினால், கணவனோ, தந்தையோ கடன், அடமானப் பத்திரங்களில் கையெழுத்திட வேண்டும். மேல்படிப்புக்கு வெளிநாடு செல்ல வேண்டுமென்றால், 3½ லட்சத்தைக் கட்டு என ரிசர்வ் பாங்க் பயமுறுத்தும். இது போன்ற அவதிகளிலிருந்து பெண்களை மீட்கத்தான் சொத்துரிமை!



கேள்வி : விவாகரத்து செய்யப்பட்ட பெண், வேறு ஆடவருடன் வாழ்ந்தாலும், பழைய கணவன் ஜீவனாம்சம் தர வேண்டுமென்று ஒரு விதி செய்திருக்கிறீர்கள். இது கணவனுக்கு அநீதி இல்லையா?

சந்திரா : ஜீவனாம்சம் என்பது ஒரு கணக்கு வழக்குத் தீர்ப்புதான். அதற்கும் கற்பு நிலைக்கும் சம்பந்தமில்லை! திருமணத்தால் ஓர் ஆணின் வருமானம் தடைப்படுவதில்லை! ஆனால் திருமணமான ஒரு பெண், இல்லறத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கும்படியாக நிர்ப்பந்திக்கப்படுவதால், பொருளாதார முன்னேற்றம் அவளுக்கு மறுக்கப்படுகிறது அதை ஈடுகட்டு முகமாகத்தான் ஜீவனாம்சம் வழங்கப்பட வேண்டும் என்கிறேன்!

கேள்வி : PITA (Prevention of Immoral Traffic Act) சட்ட மாற்றம் எவ்விதத்தில் சம்பந்தப்பட்ட பெண்களுக்கு உதவப் போகிறது?

சந்திரா : நமது சட்டத்தின்படி விபசாரம் ஒரு குற்றமல்ல; ஆனால், விபசாரத்துக் கழைப்பதுதான் குற்றம். இது சரியாகப்படவில்லை. எனவேதான் சம்பந்தப்பட்ட பெண்களுடன் ஆண்களும் தண்டனை பெற வேண்டுமென மாற்றி அமைத்தோம்.

கேள்வி : கல்வியறிவில்லாவிட்டால் பெண்களுக்குத் தரப்படும் உரிமைகள் பயனற்றுப் போகலாம். அந்தத் துறையில் என்னென்ன செய்திருக்கிறீர்கள்?

சந்திரா : கல்வியறிவு முன்னேற்றத்துக்கு

ஒரு கருவிதான். அதுவே அவளைப் பலப் படுத்தி விடுவதில்லை. ஆயினும், வேலை வாய்ப்புகளில் 30% பெண்களுக்கு இடஒதுக் கீடு அளித்து, அப்படியாவது அவர்களைப் படிக்க வைக்கிறார்களா எனப் பார்க்கி றோம். உயர்நிலைப் பள்ளிகளில் பெண்க ளையே ஆசிரியர்களாக நியமித்து, கிராமப் புறப் பெண்களின் படிப்பு தொடர வழி வகை செய்திருக்கிறோம். கிராமங்களில், பள் ளிக்கு வரும் ஒவ்வொரு நாளும் ஒரு பெண் ணுக்கு ஒரு ரூபாய் ஊக்க போனஸ் வழங்கி, 25 நாளில் ஒருமுறை பணப்பட்டுவாடாவும் செய்கிறோம். அப்படியும் பெண்கள் பள் ளிக்கு வருவதில்லை. அவர்கள் வீட்டிலிருந்து சின்னஞ்சிறிசுகளைப் பார்த்துக் கொண் டால், அவர்களுடைய தாய்மார்கள் வேலைக்குச் சென்று ஒரு நாளைக்கு இருபது வரை சம்பாதிக்கலாமே. எனவே இப்போது கிராமப்புறங்களில் குழந்தைக் காப்பகங்கள் நிறுவி வருகிறோம்!


கேள்வி : இந்த மாற்றங்களைப் பற்றி யெல்லாம், கிராமப்புறப் பெண்களுக்கும் குடிசைவாழ் மகளிருக்கும் தெரியுமா?


சந்திரா : என்னைக் கேட்டால், அவர் களை விட நடுத்தர, உயர்மட்ட வர்க்க மக ளிருக்குத்தான் இந்த மாற்றங்கள் அவசிய மென நினைக்கிறேன்! 'empowerment' என் பதே, பெண்களைச் சுயமரியாதையுடன், சொந்தக் கால்களில் நிற்க உதவுவதுதானே? நகரத்துக் குடிசைவாழ் பெண்டிரும், கிராமத் தில் வயல் வரப்புகளில் உழைக்கும் மக ளிரும், ஏற்கெனவே கணவனின் ஆதர வையோ, வருமானத்தையோ எதிர்பாராமல் குடும்பம் நடத்துபவர்கள்தாமே? சில கிராமப் பஞ்சாயத்துகள் கூட இங்கே முழுக்க முழுக் கப் பெண்களால் நடத்தப்படுகின்றன. இயோலாவில் ஒரு முனிசிபல் கவுன்சில் முழுக்க, பெண் பிரதிநிதிகள்தாம்!

கேள்வி : இந்தச் சட்ட மாற்றங்கள் அனைத்தும் பார்லிமெண்டில் 'பாஸ்' ஆனால்தானே நடைமுறைக்கு வரும்? இது வும் ஒரு 'தேர்தல் ஸ்டண்ட்' இல்லையே?

சந்திரா : ஏற்கெனவே சில மாற்றங்கள் நடைமுறைக்கு வந்து விட்டனவே! கிராமப் புறங்களில், 50% மகளிர் கையெழுத்திட்டு மனுக் கொடுத்தாலே போதும்; அங்குள்ள சாராயக் கடை உடனே மூடப்பட்டு விடும். 40, 50 கடைகள் இப்படி மூடப்பட்டு விட் டன!

பேட்டி : **ஜெயஸ்ரீராஜ்**





டீ.வி. மூலம் பிரபலமாகி விட்ட முகங்கள் இவை. இங்கே, சும்மா ஒரு சின்ன Profile :



டீ.வி. முகம்: கல்கி அறிமுகம்!

சாந்தி கணேஷ் :

❑ எண்பது - எண்பத்தைந்து நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார் - டீ.வி.யில்.

❑ 800 முறை மேடை நாடக அனுபவம். எஸ்.வி. சகஸ்ரநாமம், பூர்ணம் விஸ்வநாதன், கோமல் சுவாமிநாதன், தில்லைராஜன், டெல்லிகணேஷ், அகஸ்டோ ட்ரூப்களின் ஆஸ்தான ஆர்டிஸ்ட்.

❑ கணவர் கணேஷ் 'சலங்கை' என்று ஒரு பத்திரிகை நடத்து கிறார்.

❑ உலகத் தமிழ் மாநாட்டுக் காக இரண்டு வரலாற்று நாடகங்களில் நடிக்க இருக்கிறார். இப்போதிலிருந்தே டயலாக் மனப்பாடத்தினால் தூக்க மறியாக் கண்கள்.

❑ சினிமா பிரவேசம் : தங்கைக் கோர் கீதம். இளைஞர் அணி வரை தொடர்ந்திருக்கிறது.

"சின்னச் சின்ன ரோல்தான் தருகிறார்கள். நாடகங்களில் ஹீரோயினாக நடித்து விட்டு, சும்மா வெறுமனே சினிமாவில் தலை காட்டுவது கஷ்டமாக இருக் கிறது. குளோஸ்-அப் ஷாட்ஸ் களும் தரமாட்டேனென்கிறார் கள்."

❑ போற்றிப் பாதுகாப்பதில் ஒன்று பாரதியார் படம். எஸ். வி. சகஸ்ரநாமம் கொடுத்ததாம்.

ஜெயஸ்ரீ சுந்தர் :

❑ கி. ஆ. பெ.யின் பேத்தி ஜெயஸ்ரீ இப்போது இருப்பது, முன்னர் மு. வ. இருந்த வீட்டின் மாடியில்!

❑ எம். ஏ. பட்டதாரி. பி. எட். ரிசல்டுக்கு காத்திருக்கிறார். எம்.ஃபில், பி.எச்டி. கனவுகள் உண்டு.

❑ செய்தி வாசிக்க வருமுன் ஒரு வருடம் முத்தமிழ் மன்றம், இலக்கியச் சோலை நிகழ்ச்சி களில் போட்டியெல்லாம் எடுத்திருக் கிறார்.

❑ செய்தி வாசிக்கும் ஸ்டைல் தன்னால் வந்தது. திருச்சியில் தாத்தாவுக்கு தினசரி செய்திகள் வாசித்துக் காட்டுவது பழக்கமாம். அவர் அளித்த திருத்தங்கள் இப்போது உதவுகின்றன.

❑ "செய்தி வாசிப்பதை ரெகார்ட் பண்ணி போட்டுப் பார்ப்பேன். காட்டன் புடைவைகள் அணிந்து கொள்வதும், அதிக ஆபரணங்கள் இல்லாதிருப்பதும் பிடிக்கும்."

❑ ஒரு யு.கே.ஜி. பெண் குழந்தை. டீவியின் பாதிப்பால் சினிமா பாடல்கள் எல்லாம் மனப்பாடம் ஆகி விட்டது என்று வருந்துகிறார்.

❑ பிற தனியார் தொலைக்காட்சிகளிலிருந்தும் அழைப்பு வருகிறதாம். "ஏற்கத் தயக்கமாயிருக்கிறது."

❑ பிடித்த செய்தி வாசிப்பாளர் : முன்பு செந்தமிழ் அரசு. இப்போது : ஷோபனா ரவி.

ரபி பெர்னாட் :

❑ சன் டீ.வி.யில் பார்த்திருப்பீர்கள். 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியின் ஹீரோ. சென்னை லயோலா கல்லூரியின் விஷுவல் கம்யூனிகேஷன் துறை விரிவுரையாளர்.

❑ கும்பகோணம் சொந்த ஊர். பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். எனவே இயல்பாய் ஒட்டிக் கொண்டது வாத்தியார் உத்தியோகம்.

❑ 1974-ல் மணிலா சென்று, தகவல் தொடர்பு இயலில் பட்ட மேற்படிப்பு முடித்து, இந்தியா வந்ததும் சில காலம் தினமணியில் நிருபராய் பணியாற்றியிருக்கிறார்.

❑ கலாநிதி மாறன் நடத்திய 'பூமாலை' வீடியோ இதழுக்கு முன்னதாகப் பல நிகழ்ச்சிகள் தயாரித்துத் தந்திருக்கிறார். அதுவே இப்போது சன் டீ.வி.யில் நிகழ்ச்சி நடத்த வழிவகுத்தது.

❑ எந்த பிரபலத்தையும், தயக்கமின்றி கேள்விகளால் மடக்கி அழவிடும் ரபி, இயல்பாய் மிக மென்மையானவர். நோ பந்தா பிஸினஸ்.

— துளசி, மௌலி

மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம் - 11



மொத்தம் ஆறு தவறுகளைச் செய்திருக்கிறார் ஓவியர். அந்த ஆறு தவறுகளையும் கீழுள்ள இடத்தில் எழுதிப் பத்திரப்படுத்துங்கள். 26 - வது வார முடிவில் மொத்தமாக எல்லாக் கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள்.

அதிகப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

"டாக்டர் நையாண்டியாவும் சாமர்த்தியமாவும் பதில் சொல்லுவார்."

"எப்படி...?"

"உடம்பு இளைக்க என்ன செய்யலாம்னு கேட்டவர்கிட்ட, திருப்பித் தராமல் இழுத்தடிக்கிறவனா பார்த்து ரூ. 5000/-, 10,000- கடன் கொடுங்கன்னு சொன்னாரே!"

- சீர்காழி வி. ரேவதி

ஜோக்கைப் படித்துச் சிரித்தது சரி. ஆனால் ஜோக்குக்கான படம் தவறில்லாமல் தான் வரையப்பட்டிருக்கிறதா? நன்றாக உற்றுப் பாருங்கள்.

போட்டி - 11

ஆறு தவறுகள் :

1.
2.
3.
4.
5.
6.

பெயர் : ....

விலாசம் : ....

....

....

பெண் குழந்தை பிறந்தது என்று கவலை வேண்டாம்!
அதனை கொண்டு சென்று அரசு தொட்டிலில் இட வேண்டாம்!

உங்கள் பெண், ஆண் குழந்தைகளை படிக்க வைக்க திருமணம் முடிக்க கவலை கொள்ள வேண்டாம். இதோ ஒரு அருமையான திட்டம்! சிறிய முதலீடு! பெரிய வருமானம்!!

திருமாங்கல்ய திருமண திட்டம்



வயது	தாங்கள் செலுத்தும் தொகை	டெப்பாசிட் செய்யும் மாதங்கள்	தங்களுக்கு கிடைக்கும் தொகை
1 வயது	ரூ. 1,000/-	240	64,000
1 வயது	ரூ. 2,500/-	240	1,60,000
1 வயது	ரூ. 5,000/-	240	3,20,000
5 வயது	ரூ. 15,000/-	180	3,60,000
10 வயது	ரூ. 45,000/-	120	3,60,000

* இவை தவிர இன்னும் பல டெப்பாசிட் திட்டங்களும், 6 மாத வட்டி 1 வருட வட்டி டெப்பாசிட் செய்தவுடனேயே பெறும் திட்டங்கள் உண்டு.

** தங்க நகை, இந்தியாவில் எங்கும் உள்ள சொத்துக்களுக்கும் பணம் கிடைக்கும்.

தொடர்பு கொள்க!

லேவா தேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் — செவ்வாய் வார விடுமுறை

சசிநாத் சாஸ்வத நிதி லிமிடெட்

H.O. 36, ரங்கநாதன் தெரு,
சென்னை - 600 017. Ph : 4346786
கிளைகள் : 35, M.C. ரோடு சென்னை - 600 021.
34, C, ரயில்வே ரோடு, காஞ்சிபுரம் - 631 501.
56, கடப்பா டிரங் ரோடு, திருத்தணி - 631 209.

மக்கள் சேவையில் 17 ஆம் ஆண்டு

சசிநாத்துடன் இணைவோம்! சௌவுக்கியமாக வாழ்வோம்!

மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!

நினைவலைகள் 16

I PACK MY FILMS THINKING EACH FILM IS MY LAST FILM.

- INGMAR BERGMAN -

நான் Bergman அல்ல; மிகச் சாமானியமானவன். ஆகவேதான் Each film is my first film என்று ஒவ்வொரு திரைப்படத்தையும் நான் அணுகுகிறேன். "திரைப்படத் துறையில் பத்தாண்டு காலம் ஓர் இயக்குநராகப் பணிபுரிவதென்பது பொதுவாக மற்ற துறைகளில் இருபதாண்டுகள் பணிபுரிந்ததற்குச் சமமானது" என்று இன்னொரு திரைப்பட இயக்குநர் கூறியிருக்கிறார். அதென்னவோ உண்மைதான். (ஆனால் அந்தந்தத் துறையைப் பற்றி அந்தத் துறையில் பணிபுரிபவர்கள் இப்படியேதான் கூறுவார்களோ என்னவோ? Give me the benefit of doubt.)

ஒவ்வொரு படத்தையும் இயக்கி வெளியிடுவதற்கு முன்பாக கடைசி ஒன்பது வாரங்கள் ஒரு நாளைக்குச் சராசரி 23 மணி நேரமாவது ஆழ்ந்த கவனத்துடன் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அந்த ஒரு மணி நேரம் கூட முகம் கழுவி, குளித்து, சிறிது உணவருந்தி வேலையில் மீண்டும் ஈடுபடத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்ற நேரம் தான். ஓர் இயக்குநரின் செயல்பாட்டில் மிக மிகக் கடினமான காலகட்டம் இதுதான்.

'ஷூட்டிங்' என்பது என்னவென்று பொதுவாகக் கேட்டால் வெவ்வேறு விதமான பதில்கள்தான் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கிடைக்கும். ஆனால் எல்லோரும் ஒரு கருத்தில் மட்டும் ஒத்துப் போவார்கள். சிந்தையிலே அரும்புகின்ற கருத்துக்களைக் காகிதத்தில் எழுதி, அதில் தேவையானவற்றை மட்டும் கோவையாக 'செல்லுலாய்டு'க்குள் சாமர்த்தியமாக, ரசிக்கத்தக்க வகையில் எழுதப்படுகின்ற வித்தைதான் படப்பிடிப்பு என்பது.

ஆனால் எது தேவை, எது தேவையில்லையென்று கடைசி நேரத்தில் தராசு கொண்டு எடைபோட்டுப் பார்க்கும் அந்த மதிப்பீடும் முடிவும் கிடைப்பதற்குள் ஒரு யாகமே நடத்த வேண்டியிருக்கிறது.

திரைப்படம் எடுப்பதென்பது ஒரு போர்க்கால நடவடிக்கை மாதிரி; ஒரு காட்டு யானையைப் பிடித்துக் கூண்டிலடைத்து, அதனை அடக்கி அமைதிப்படுத்தி நம் வழிக்குக் கொண்டு வருவது மாதிரியான ஒரு பூதாகாரமான செயல்!

பகீரதன் வேலை!

அதற்கு வெகுநேர்த்தியான, சிறிதும் குழப்பமில்லாத ஒரு மனது, ரசனை, உன்னிப்பான உணர்வு, திட்டமிடப்பட்ட ஒரு முன்னறிவுக் கணக்கீடு, மதிப்பீடு, செயல்பாடு இவையெல்லாமே தேவைப்படுகிறது.

In a film the eternal triangle consists of the director, the writer and the editor.

ஓர் இயக்குநருக்கும், எழுத்தாளருக்கும், படத்தைத் தொகுக்கும் எடிட்டருக்குமிடையே ஒருவருக்கொருவர் எப்பொழுதும் முரண்பட்டுக் கொண்டிருக்கும்படியான ஒரு சாசுவதமான முக்கோணப் பிரச்னை. ஒரு Eternal triangle. தனித்தனி நபராக இல்லாமல் இந்த மூன்று பொறுப்புக்களையும் ஒருவரே ஏற்றுக் கொண்டு செயல்படும் போதும் இந்த முக்கோண பிரச்னையின் தாக்கத்தை ஒருவரே எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

எல்லாவற்றையும் விட சரியான கதாபாத்திரங்களுக்குச் சரியான நடிக, நடிகையரைப் போடுவது என்பதுதான் மிக மிக முக்கியமாக, ஆழ்ந்த சிந்தனைகளுக்குப் பிறகு கவனமாக எடுக்கப்பட வேண்டிய ஒரு முடிவு.

Correct casting is the life of the film.

"ரொம்பவும் புத்திசாலித்தனமான, அறிவார்த்தமான ஒரு நடிகன் மிகச் சிறந்த நடிகனாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால் நடைமுறை உண்மை பல நேரங்களில் இதற்கு நேர் எதிரிடையாக இருக்கிறது."

இப்படிச் சொன்னவர் Michelangelo Antonioni.



கதாபாத்திரங்களுக்கு நடிக, நடிகையரைத் தேர்வு செய்யும் போது, நல்ல நடிகர், நல்ல நடிகை என்பதை விட பாத்திரத்திற்குப் பொருத்தமான நடிகர், அல்லது பொருத்தமான நடிகையைத் தேர்ந்தெடுப்பதில்தான் அதன் அடிப்படை வெற்றியோ, தோல்வியோ அடங்கியிருக்கிறது என்பது நான் அனுபவபூர்வமாகக் கண்டறிந்த உண்மை.

"My films have failed. But I have never failed in my casting" என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு.

ஆனால் ஒரே ஒருமுறை இந்தக் கோட்பாட்டில் நான் தோற்றுப் போனதும் உண்டு.

படம் : எதிரொலி.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் தனது நவரச நடிப்பின் மூலம் தமிழக மக்களின் இதயங்களையெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நேரம். அவருடைய பொற்காலத்தின் உச்சக்கட்ட காலம். ஏதோ புதுமை செய்வதாக நான் நினைத்துக் கொண்டு, சிவாஜி அவர்களை சின்னத் தவறு செய்து விடுகின்ற ஒரு வழக்கறிஞர் குணசித்திரத்தில் எதிரொலி படத்தில் நடிக்க வைத்ததுதான் நான் செய்த இமாலயத் தவறு!



ஒரே ஒருமுறை, தற்செயலாகத் தன்னிடம் வந்து சேர்ந்த பெட்டியில் இருக்கும் பணத்தைக் கையாடல் செய்து விட்டு மனச்சாட்சியின் சித்திரவதைக்கு உள்ளாகும் ஒரு குணசித்திரம் அது. ரசிகப் பெருமக்கள் அந்தக் கதாபாத்திரத்தை குணசித்திரமாக ஏற்றுக் கொள்ளவில்லை! சிவாஜியாக எடுத்துக் கொண்டு விட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு தவறான காரியத்தை சிவாஜி செய்வதை ரசிகர்களால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. சிவாஜி எங்கேயாகிலும் பணத்தைக் கையாடல் செய்வாரா? என்று ஏகப்பட்ட கண்டனக் குரல்கள் எழும்பின. சிவாஜி அவர்கள் நடிப்பதற்கு வேறு ஒரு கதையை நான் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்; அல்லது இதே கதைக்கு Image இல்லாத ஒரு நடிகரை நான் தேர்வு செய்திருக்க வேண்டும்.



இதுதான் பண்பட்ட நடிக, நடிகையரின் Image அல்லது Charisma எனப்படுவது.

சில சமயங்களில் இயக்குநர்களுக்கும் Image என்கிற மாயை இடையூறாக இருப்பதுண்டு. "பாலசந்தர் படத்தில் இப்படி ஒரு காட்சியா? You too Balachander?" என்கிற கேள்விக்கணைகளை நான் எப்பொழுதாவது சந்திப்பதுண்டு.

ஒருமுறை :

எனது கறுப்பு ஃபிரேம் போட்ட கண்ணாடி, படப்பிடிப்பின் போது உடைந்து போயிற்று. ஒரு மாறுதலுக்காக அதை கோல்டு ஃபிரேம் கண்ணாடியாக மாற்றினேன்.

படப்பிடிப்பிற்குச் சென்ற போது எல்லோரும் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள், நான் ஏதோ பெரிய தவறைச் செய்து விட்டு வந்தவன் போல்.

அன்றைய படப்பிடிப்பில் இருந்த விவேக் சொன்னான் :

"இந்த கோல்ட் ஃபிரேம் கண்ணாடி உங்களுக்கு நல்லா இல்லே ஸார்! சிங்கத்துக்கு பிடறி மாதிரி உங்களுக்கு அந்த கறுப்பு ஃபிரேம் போட்ட கண்ணாடிதான் கரெக்ட்! கோல்ட்ஃபிரேம் கண்ணாடியோட நீங்க வந்து நின்னா இது K.B. இல்லே யாரோ A.B. ன்னு நினைச்சுக்கிட்டு நான் கூட எழுந்து நிக்க மறந்து போயிடுவேன்!"

"A.B." ன்னா என்னடா?" என்றேன் நான்.

"அரிச்சுவடி!"

விவேக் மட்டும் கொஞ்சம் பயமில்லாமல் பேசுவான்.

'எதற்கு வீண் வம்பு?' என்று மீண்டும் கறுப்பு ஃபிரேம் கண்ணாடியே அணிய ஆரம்பித்து விட்டேன்.

எனக்கே இப்படி வெளித்தோற்றம் பற்றிய ஒரு Image என்றால், சிவாஜி அவர்களின் அகத் தோற்றம் Mental Image எந்த அளவிற்கு விசுவரூபமாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

M.G.R. அவர்கள் புகைபிடிப்பது மாதி

கே. பாலசந்தர்

ரியோ அல்லது மது அருந்துவது போலவோ திரைப்படங்களிலே காட்ட முடியாது. அது அவருடைய Image.

ரஜினிகாந்த் எந்தக் கதாபாத்திரம் ஏற்றாலும் அவரை இன்னொரு கதாபாத்திரம் படத்திலே திட்டி விட முடியாது; தியேட்டர்களில் வெண்திரை கிழிந்து போய் விடும். அது ரஜினி Image.

அனுபவம் கற்றுத் தந்த இந்தப் பாடங்களின் அடிப்படையில்தான் புதுமுகங்களுடன் பணிபுரிவதில் மிகப் பெரிய அனுகூலம் இருப்பதை நான் மெல்ல மெல்ல உணர்ந்தேன்.

பல நூறு முறைகள் உபயோகப்படுத்தப் பட்ட முகங்களைக் காட்டிலும் சில புது முகங்களிடமிருந்து போதுமான அளவிற்கு நடிப்புத் திறமையை நாம் வெளிக்கொணரும் போதும், அவர்களுடைய Freshness, கிளர்ச்சியூட்டும் புதுப்புனல் அவர்கள் நடிப்பின் சிகரத்தையே எட்டியதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

சில புதுமுகத் தேர்வுகள்தான் குறிப்பிட்ட கதையின் அந்த குணசித்திரத்திற்கு புதுப் பொலிவையும், ஒரு நம்பகத் தன்மையையும் வெகுஜன ரசனையையும் உடனடியாக உண்டாக்குகிறது. ஒரு OVERNIGHT STARDOM.

கைதேர்ந்த நடிகர்களின் நூற்றுக்கு நூறு சதவிகித நடிப்புப் புலமை கூட சில நேரங்களில் விமர்சகர்கள், ரசிகர்கள் இவர்களின் பார்வையில் இன்னும் அதிகமான எதிர்பார்ப்புகளையே உண்டாக்குகிறது. ஆனால் ஒரு புதுமுக நடிகரோ, நடிகையோ நாற்பது சதவிகித நடிப்புப் புலமையைக் காண்பித்தாலே அது எண்பது சதவிகித நடிப்புப் புலமைக்கு ஈடாகிறது.

ஆனால் அப்படிப்பட்ட புதுமுகத் தேர்வுகள் மிகச் சுலபமாக அமைந்து விடுவதில்லை. It is always a million dollar problem.

ஓர் அழகான பாடகிக்கும் அழகாகப் பாடும் பெண்மணிக்கும் வித்தியாசம் உண்டு. அதே போல் அழகான கண்கள் இருப்பதாலேயே நல்ல நடிகையாகி விட முடியாது; அதை வெகு அழகாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

சில கதாநாயக, நாயகிகளின் பாத்திரங்களுக்கு தனிப்பட்ட Image னால் பாதிக்கப் படாத குணசித்திர நம்பகத் தன்மை அவசியமாகத் தேவைப்படுகிறது.

உதாரணம் :

அவள் ஒரு தொடர்கதை - கவிதா.

மரோசரித்ரா - ஸ்வப்னா.

அரங்கேற்றம் - லலிதா.

அவள் ஒரு தொடர்கதை - கவிதா பாத்திரத்திற்கு ஒரு சுஜாதா தேவைப்பட்டார். இன்னும் சொல்லப் போனால் அந்தப் படத்தில் எல்லோருமே புதுமுகங்கள்; கமல் ஒருவரைத் தவிர!

ஒரு பள்ளிக்கூடம் நடத்துவதைப் போல்தான் படப்பிடிப்பு நடக்கும். தமிழிலிருந்து அதன் உச்சரிப்பிலிருந்து, வசன ஏற்ற இறக்கங்கள், பார்வைகள், ஏக்கங்கள், நடை உடை பாவனைகள் அனைத்துமே பால பாடமாக போதிக்கப்பட்டு, ஒவ்வொரு காட்சியும் நாடகம் போல் பலமுறைகள் ஒத்திகை பார்க்கப் பட்டு, புதுமுகங்களை குணசித்திரங்களோடு ஒன்றி விடச் செய்கின்ற அந்த இயக்கப் பணி இருக்கிறதே அது ஒரு Labour painதான்.


ஒருநாள் அவள் ஒரு தொடர்கதை படப்பிடிப்பு அரங்கத்திற்கு நியூடோன் ஸ்டுடியோவில் என்னைப் பேட்டி காண வந்திருந்த Film fare நிருபர் ஒருவர் நான் 'செட்'டிலே பட்ட சிரமங்களையும், விடா முயற்சியுடன் சின்னச் சின்ன 'டச்'சுகளை காட்சிகளிலே அமைத்துப் புதுமுகங்களிடம் வேலை வாங்குவதையும் கவனமாகப் பார்த்திருந்து விட்டு Ingmar Bergman சொன்ன மேற்கோள் பற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்டார்.

அவர் குறிப்பிட்ட அந்த மேற்கோளும் நான் சொன்ன பதிலும்தான் இந்தக் கட்டுரையின் தொடக்க வரிகள்.

(தொடரும்)

சிரிக்காமல் படியுங்கள்!

❑ டாக்டர் தன் நோயாளியிடம் சொன்னார், "உங்களுக்கு ஒரு நல்ல நியூஸ்; ஒரு கெட்ட நியூஸ்."



அதற்கு நோயாளி, முதலில் கெட்ட நியூஸ் என்னவென்று சொல்லச் சொன்னதும்,

"உங்களுக்கு வலது காலுக்கு பதிலாய் இடது கால் விரலை வெட்டி ஆபரேஷன் செய்து விட்டேன்."

நோயாளி அதிர்ச்சி அடைந்தார். அதிலிருந்து மீளாமலேயே கேட்டார் :

"நல்ல நியூஸ்?"

"இன்று உங்களைப் பரிசோதித்த பெரிய டாக்டர், வலது கால் விரலுக்கு ஆபரேஷனே அவசியமில்லை என்று சொல்லி விட்டார்! என்ன சந்தோஷம்தானே?"

— ஜூலி



கிராமத்துக்கு காரில் புறப்படும்போது அம்மா ரொம்பவும் உற்சாகமாக இருந்தாள். கண்கள் மலரச் சிரிப்பும், சந்தோஷமுமாக இருந்தாள். "நீ பிறந்த வீட்டைக் காண்பிக்கிறேன், பார்!" என்றாள் நெகிழ்ச்சியுடன். கிருஷ்ணன் சிரித்துக் கொண்டான்.

"அதெல்லாம் இப்போ இடிந்து சிதிலமாகியிருக்கும் அம்மா!" என்றான். "இல்லை என்றால் யாராலும் கலைமானோ, ஜேக்கப் ஜார்ஜோ அதை வாங்கி, அடையாளமே தெரியாமல் மாற்றியிருப்பார்."

இருபது வருடங்களுக்கு அப்புறம் சொந்த கிராமத்துக்குப் போகும் சிலிர்ப்பு.

வயல் வெளிகள் வலப்புறமும் இடப்புறமும் பச்சைப் பசேல் என்று காரின் பாய்ச்சலில் சுருண்டன. காற்று அலைக்கழிக்கும் ஓலைகள் இடையே இளநீர்கள் குலுங்க, தென்னை மரங்கள் வழிவிட்டன. நெளிந்து நெளிந்து ஓடும் ஆறுகளின் சலசலப்பு துல்லியமாகக் கேட்டது. அறுநூறு கிலோ மீட்டர் பயணமும் அலுக்கவே இல்லை. கோவையைத் தாண்டியதுமே, கேரளத்தின் இயற்கை வளம் மனசை இதமாக வருடிக் கொடுத்தது.

"முதலில் கணபதியான் கோவில். அப்புறம் லட்சுமி வீடு. பிறகு ராமநாதன் மாமாவைப் பார்த்து விசாரித்துவிட்டு அன்றைக்கே திரும்பி விடலாம்!" என்றாள் அம்மா.

"அவரைப் பார்க்காமல் வரக் கூடாது என்று குறைந்த பட்சம் பத்துத் தடவை சொல்லி விட்டார் அப்பா" என்றான் கிருஷ்ணன்.

நாகரிகம் ஏதோ கண்டு விரலால் மட்டுமே தொட்ட மாதிரி, அங்கங்கே ஓவ்வொரு நவீன வீடு. மற்றபடி கிராமத்தின் இலக்கணம் இம்மியும் மாறாத தெருக்களும், வீடுகளும், எட்டிப் பார்க்கும் மாமிகளும்...

கோவிலில் யாருமே இருக்கவில்லை அந்த வேளையில். பத்தடி தள்ளியிருந்த வீட்டிலிருந்து, நிறுத்திய காரைப் பார்த்துவிட்டு குருக்கள் வந்தார். பூஜை செய்து விபூதி-குங்குமம் கொடுத்த போது, அம்மா கிருஷ்ணனிடமிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை வாங்கி, கற்பூரம் மெலிதாகச் சுடர்விட்ட தட்டில் வைத்தாள்.

"எங்கேருந்து... பம்பாயா...தில்லியா?" என்றார் குருக்கள்.

"மெட்ராஸ்."

காரைத் தெற்குக் கிராமத்துக்குக் கொண்டுவர டிரைவரிடம் சொல்லிவிட்டு, வயல் வரப்பில் விழாமல் நடந்து, முதல் வீட்டுத் திண்ணையில் எட்டிப் பார்த்து, "லட்சுமீ..." என்று சன்னமான குரலில் அம்மா அழைத்தாள்.

"எந்த லட்சுமியைக் கூப்பிடுகிறீர்கள்?" என்று உள்ளேயிருந்து குரல் வந்தது. தொடர்ந்து வந்த பெரியவர், கையை உயர்த்திக் கண்களுக்கு மேலாகப் பிடித்தபடி



பயணம்

சாருகேசி

அம்மாவைப் பார்த்தார்.

"லட்சுமி போயாச்சே!" என்றார் கரகரப்பாக.

"எங்கே?"

பெரியவர் மேலே கையைக் காண்பித்தார், பேசினால் குரல் உடைந்து போய், அழுகுரல் வெளிப்படுமோ என்று பயந்து.

"இவன் என் பிள்ளை. கிருஷ்ணன்" என்றாள் அம்மா சட்டென்று. குளிக்கப் போகும்போதும், விளையாடவும் கூடவே வந்த அந்த நாள் சிநேகிதியின் மறைவு தாக்கிய சோகம் வெளிப்படாது சமாளிக்கும் முயற்சியும் அதில் தெரிந்தது.

"இவன் பிறந்த வீடு இது!" என்று பக்கத்து வீட்டைக் காண்பித்தாள் அம்மா. "இவனுக்கு வீட்டைக் காட்டலாம் என்று நினைத்தேன்."

"அதை வக்கீல் ரெண்டு வருஷம் முன்னால் விற்றுவிட்டாரே! இப்போ பூட்டிக் கிடக்கிறது. சாவிகூட இங்கே தரவில்லை!" என்றார் பெரியவர்.

அம்மாவுக்கு ஏமாற்றமாய் இருந்தது. கிருஷ்ணனுக்கும்தான்.

"ராமநாதன் இருக்கிறாரோ?" என்று கேட்டாள் அம்மா, தயங்கி.

"இருக்கார். படுக்கைதான். நாலு வீடுகள் சேர்ந்தாற்போல் எதிரே தெரிகிறதே, அதில் முதல் வீடு."

"எனக்குத் தெரியும். ஞாபகம் இருக்கிறது" என்றாள் அம்மா. புறப்பட்டபோது இருந்த உற்சாகத்தில் ஒரு துளி அந்தக் குரலில் வெளிப்பட்டது.

'நாலு வீடுகளை ஒரு சேரக் கட்டி, எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே தாழ்வாரம் போல்... என்ன வகைக் கட்டட அமைப்பு இது?' என்று கிருஷ்ணன் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே, முதல் வீட்டுத் திண்ணையில், கட்டிலில் படுத்திருந்த பெரியவரைப் பார்த்தாள் அம்மா.

"ராமநாதனா? ராமநாதன்தானா..?" என்று கேட்டாள் ரொம்பவும் சுவாதீனமாக.

போர்வையை சிரமத்துடன் விலக்கிவிட்டு, மெல்ல எழுந்தார் ராமநாதன்.

"யாரு, தங்கமா? தங்கம் குரல் மாதிரி அல்லவா இருக்கிறது?"

"தங்கம்தான்," என்றாள் அம்மா. "என்ன உடம்பு?"

"உடம்புக்குப் பெரிதாக ஒன்னும் இல்லை" என்று சொல்லிவிட்டு, சற்றே நிறுத்தி, உள்ளே கையைக் காட்டினார் ராமநாதன். வாசலிலிருந்து உள்ளே செல்ல முடியாமல் கதவு சாத்தியிருந்தது. கிருஷ்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் உள்ளே படுக்க வில்லை? வெளியே இப்படிப் படுத்தால் மழை, வெயில் எல்லாம் அடிக்காதா?" என்று கேட்டாள் அம்மா.

ராமநாதன் வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை.

மூன்றாவது வீட்டிலிருந்து ஒரு பெண், எவர்சில்வர் தட்டில் சாப்பாடு எடுத்துக் கொண்டுவந்து, ராமநாதன் கையில் கொடுத்தாள். கொடுத்துவிட்டு, "நீங்கள் எல்லாம்

யார்?" என்பது மாதிரி ஒரு பார்வை பார்த்தாள்.

"அப்பாவோட ஃப்ரெண்டு ராமநாதன்... நாங்கள் மெட்ராசிலேருந்து வரோம்" என்றான் கிருஷ்ணன்.

ராமநாதன் மெதுவாகச் சாப்பிட்டு, தம்ளரிலிருந்து இரண்டு விழுங்கு தண்ணீரைக் குடித்துவிட்டு, தட்டிலேயே கையைக் கழுவி, வாயைத் துடைத்துக் கொண்டார்.

சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்த பெண் விடை பெறுகிற மாதிரி ஒரு புன் சிரிப்புச் சிரித்துவிட்டு, தட்டை எடுத்துக் கொண்டு மெதுவாகப் போய், கண் பார்வையிலிருந்து மறைந்தாள்.

"உம் பிள்ளை எங்கே?"

"ஆபீஸ்" என்றார் ராமநாதன். "பாலக்காட்டில்."

"உங்கள் மருமகள் எங்கே? அவள் சாதம் போட மாட்டாளா?" என்றாள் அம்மா. ஒரு சின்னக் கோபம்கூட அந்தக் குரலில் தொனித்ததை கிருஷ்ணன் உணர்ந்தான்.

"நித்தியம் இதுதான் வழக்கம்!" என்றார் ராமநாதன், "ஏதோ மூணாம் வீட்டுலேருந்து, மனசிறங்கி ஜானகிதான் என் பெண் மாதிரி வந்து வேளா வேளைக்குக் காபியும் சாப்பாடும் தருகிறாள். இந்த வீட்டுக் கதவு திறக்காது. என் பிள்ளை வரும்போது திறந்தாலும், என்னைக் கவனிக்க மாட்டாள் என் நாட்டுப் பெண்!"

பெரிய பெரிய ஆரஞ்சுப் பழங்களையும் கொத்துக் கொத்தாக திராட்சையையும் அவர் கட்டிலருகே வைத்தாள் அம்மா. "சாப்பாடு கொண்டு வரும்போது அந்தப் பெண்ணிடம் உரித்துத் தரச் சொல்லிச் சாப்பிடுங்கள்!"

திரும்ப காரில் ஏறி உட்கார்ந்து கிளம்பிய பிறகு அம்மா எதுவுமே பேசவில்லை. கிராமத்தை விட்டுத் தாண்டியதும், கணபதியான் கோயில் கண்ணிலிருந்து மறைந்தது.

"உன் அப்பாவிடம் ராமநாதன் பற்றி எதுவும் சொல்லாதே! சௌக்கியமாக இருக்கிறார் என்று மட்டுமே சொல்லு. இரண்டு பேரும் உசிருக்கு உசிரா பழகினவர்கள். கேட்டால் தாங்காது அவருக்கு!" என்றாள் அம்மா.

புறப்பட்ட போது இருந்த உற்சாகமும், மகிழ்ச்சியும் தலைகீழாக மாறிய சூழ்நிலையில் கிருஷ்ணனின் மனசு வெகுவாகக் கனத்தது.

ஒரு பெரிய கண்ணீர்த்துளி அம்மாவின் கண்களிலிருந்து இறங்கி, அவள் அணிந்திருந்த கண்ணாடியில் படாமல் தப்பி, வலது கையில், இரண்டு வளைகளுக்கு இடையே விழுந்து தெறித்தது.



கடலிலே கம்பீரம்; தரை தட்டினால் பரிதாபம்!

பயந்து போன யானை ஒன்று பதுங்கிப் படுத்திருப்பது மாதிரி கரை ஓரம் ஒதுங்கிப் போய் சாதுவாக நிற்கிறது 'சாகர்!'

"எங்கள் போர்ட் டிரஸ்ட்டுக்கும் இந்தக் கப்பலுக்கும் சம்பந்தமே இல்லை. மேற்கு வங்கத்திலிருந்து உர மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வந்த கப்பல், புயலில் அலைக் கழிக்கப்பட்டு கரை தட்டிப் போய் திருவொற்றியூர்க் கடற்கரையில் மணலில் சிக்கிக் கொண்டிருக்கிறது!" என்றார் துறைமுகப் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி.

நங்கூரச் சங்கிலிகள் அறுபட்டு, 'புரொபெல்லர்' எனப்படும் இயக்கிச் சக்கரம் கிட்டத்தட்ட மேலே தெரியும் அளவுக்கு வந்து விட்ட நிலையில், சென்னையைத் தாக்கிய புயலில் சிக்கிய 'சாகர்' கரையில் தரை தட்டி நிற்கிறது. கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து, தொட்டுத் தொட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்!

நெதர்லாந்து நிபுணர்கள் சிலர் வந்து கப்பலின் நிலையைப் பார்வையிட்டிருக்கிறார்கள். இயந்திரங்களைக் கொண்டு அதிகச் சேதம் இல்லாமல் கப்பலை நகர்த்த முடியுமா? இல்லை என்றால் உடைத்துப் பிரிப்பதைத் தவிர வேறு வழியில்லையா...? இன்னும் முடிவாகத் தெரியவில்லை.

இதற்கு முன்பே 1966லும், 1970லும் இது போல இரண்டு கப்பல்கள் கரை தட்டிப் போயிருக்கின்றன. இது மூன்றாவது.

"பங்களாதேஷைச் சேர்ந்த இந்தக் கப்பல் ஊழியர்களும் சென்னை நகர ஓட்டல்களில் இப்போது தங்கியிருக்கிறார்கள். உரத்தை முன்பே இறக்கி விட்டார்கள். கப்பலில் சரக்கு எதுவும் இல்லை!" என்கிறார் சவுத் இந்தியா கார்ப்பரேஷன் ஏஜன்சீஸ் அதிகாரி ஒருவர்.

கப்பலுக்குப் போலீஸ் காவல் நிற்கிறது. திருடிக் கொண்டு போய்விட முடியுமா என்ன!

-எஸ்.வி.என்.

புகைப்படம்: பாலாஜி

ஸ்ரீராமஜெயம்

தாமலுக்கு வாருங்கள்
தாமோதரனைப் பாருங்கள்
தாராளமாய்த் தாருங்கள்

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று ஔவை புகழ்ந்தார். 'முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி' என்று வேதாந்த தேசிகர் பாடினார்.

அத்தகைய தொண்டை நன்னாட்டுக் காஞ்சியின் மிக அருகே 12. கி.மீ. தொலைவில் - சென்னை பெங்களூர் மெயின் ரோடில் அமைந்துள்ளது ''தாமல்''.

'பாட்டம்மாள்' என்று சிறப்பித்துப் போற்றப்படும் D. K. பட்டம்மாளும், பெயர் பெற்ற நிர்வாகியான சர். சி.பி. ராமசாமி ஐயரும், தேச விடுதலைப் போரில், உடல், பொருள், ஆவி அனைத்தையும், தேசத்திற்கு உகந்தளித்த உண்மைத் தியாகிகள் பலரும் தோன்றிய உன்னத ஊர் தாமல்.

புற நானூற்றில் இடம் பெற்ற தாமப்பல் கண்ணனார் இவ்வூரைச் சேர்ந்தவர் என்றும் கூறுவர்.

இத்தகைய சிறப்புகளுடைய ஊரின் நடுநாயகமாக அமைந்தது அருள்மிகு தாமோதரப் பெருமாள் திருக்கோயில்.

இக்கோயில் தற்போது புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இவ்வூரில் உள்ளவர்கள், பல காரணங்களால் தாமலை விட்டு வெளியே சென்று வாழும் நல்லுள்ளம் கொண்டவர்கள் ஆகியோரின் கவனம் கோயிலின் பக்கம் திரும்பியுள்ளது.

இத்திருக்கோயிலின் புனரமைப்புக்கு ரூ. 10 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டு, அதனுடன் ரூ. 5 லட்சம் நிரந்தர வைப்பாக வைத்து அதன் வட்டி மூலம் தினசரி அர்ச்சனை, ஆராதனை, வருஷ உத்ஸவங்கள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிகழும் நவம்பர் 13 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை முதல் இப்புனிதத் திருப்பணி தொடங்குகிறது.

திருவாளர் D. P. ரங்கஸ்வாமி, D. V. வாஸுதேவன், T. V. நியூஸ் வரதராஜன் போன்றவர்களைக் கொண்ட குழு ஒன்று இத்திருப்பணிக்காக அமைக்கப்பட்டுள்ளது.

'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்' என்ற பாரதியின் வாக்குப்படித் தங்களால் இயன்ற நன்கொடைகளைத் தாராளமாக வாரி வழங்குமாறு கொடையுள்ளம் கொண்டவர்கள் வேண்டப்படுகிறார்கள்.

தாமலை விட்டு வெளியே வாழும் அனைவரின் கவனமும் கோயில் பக்கம் திரும்பட்டும். இயன்றவரை முயற்சி செய்து 'இப்பெரும் தொழில் நாட்டுவம் வாரீர்' என்று திருப்பணிக்குழு வரவேற்கிறது.

நன்கொடையளிப்பவர்கள்,

செயலர்/தலைவர்,


(அ/மி. தாமோதரப் பெருமாள் பக்தஜன சபை)

சதர்ன்குரூப் கம்பெனிகள்

161, கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006.

தொலைபேசி : 8278353.

என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து அருள்மிகு தாமோதரனின் திருவருள் பெறு மாறு கனிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



சிவப்பாய்ச்

ஒரு விபத்து நடந்து விட்டது. விபத்தில் சிக்கிக் கொண்டவர்களால் அது, எப்படி நடந்தது என்பதை உணர்ந்து கொள்ள முடியாது. அவர்கள் பாதிக்கப் பட்டவர்கள். அவர்கள் விபத்தின் ஓர் அங்கம். எனவே விபத்து பற்றிய முழுமையான பார்வை அவர்களுக்கு வாய்க்காது.

ஆனால் பாதுகாப்பான தூரத்தில் நின்று, பதற்றம் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு எவ்வாறு இந்த விபத்து நடந்தது என்பது நன்கு தெரியும்.

அது போலத்தான் வாழ்க்கைச் சம்பவங்களில் விலகி நின்று பார்ப்பவர்கட்கே இது ஏன் இப்படி நடந்தது என்கிற உண்மை புரியும். இத்தகைய உணர்வு பூர்வமான விலகல்தான் சமநிலை என்று யோக நூல்களில் வர்ணிக்கப் படுகிறது.

'ஸ்திதப்ரக்ஞன்' என்கிற இந்த சர்டிபிகேட்டுக்காக வாழ்வின் சுவாரஸ்யமான பகுதிகளை இழந்து விடமுடியுமா? என்று பலர் நினைக்கக் கூடும். உணர்ச்சிகளற்ற ஜடம்போல் இருக்கும் நிலையல்லவா அது என்று பலர் வெறுப் படையக் கூடும். உண்மை அதுவல்ல. ஞானிகள், துன்பத்திற்குத் துன்பப் படமாட்டார்களே ஒழிய துன்பத்தைத் துடைக்க முன் வரமாட்டார்கள் என்று பொருள் இல்லை.

கங்கை ஆற்றில் குளித்து விட்டுக் கரையேறிய சாது ஒருவர் மீது வெற்றிலை பாக்கு எச்சிலைத் துப்பினான் ஒரு முரடன். சாது வருத்தம் இன்றி கங்கையில் மீண்டும் நீராடிக் கரை ஏறினார். மறுபடியும் துப்பினான். ஒரு முறை இரு முறை அல்ல.. நூறு முறை இது நடந்தது. சினமோ, துயரோ ஞானிக்கு இல்லை. துன்பத்திற்குத் துன்பப்படவில்லை அவர். நூறுமுறை நீராடினார். முரடன் மனம் வருந்திக் காலில் விழப் போனான். ஞானி தடுத்தார். ''அப்பா நானல்லவா உன்னை வணங்க வேண்டும். இந்தப் புனிதமான கங்கையில் ஒரே நாளில் நூறுமுறை நீராடுவது நடக்கக்கூடிய காரியமா? உன்னால் அல்லவா இந்தப் புண்ணியம்! உனக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்றார் சாது.

''சுவாமி.. என்னை மன்னிக்க வேண்டும். இந்த ஊரில் ஒரு செல்வர் தங்கள் புகழைப் பொறுக்காது என்னைத் தூண்டி விட்டார். நீங்கள் கோபம் வந்து என்னைத் திட்டுவீர்கள். திட்டினால், கட்டிப் புரண்டு மண்ணில் நாம் உருண்டால் உங்கள் பெயர் கெடும். அப்படி நடந்தால் ஒரு பொன் தருகிறேன் என்றார். அந்தப் பொன்னுக்கு ஆசைப்பட்டு இப்படி நடந்து கொண்டு விட்டேன்!'' என்று கூனிக் குறுகி நின்றான் அந்த முரடன்.

சாது சொன்னார்: ''அப்பா, இது எனக்கு முன்பே தெரியாமல் போய்விட்டதே! என்னால் உனக்கு ஒரு பொன் கிடைக்கும் என்று எனக்குத் தெரிந்திருந்தால் கட்டிப் புரண்டு சண்டை கூட போட்டிருப்பேனே!''

தெரிந்த வெள்ளை மலர்கள்

சுகி சிவம்

என்றார். இதுதான் சாதுக்கள் நிலை - துன்பத்திற்குத் துன்பப்பட மாட்டார்கள். ஆனால் துன்பம் துடைக்க முன் நிற்பார்கள்.

ஒரு சினிமா பார்க்கிறோம்... அதில் வரும் ஒரு பாத்திரத்தோடு ஒன்றிப் போனவர்கள் சினிமாவின் சகல அம்சங்களையும் ரசிக்க முடியாது. அந்தப் பாத்திரத்தின் துக்கத்தோடு அழவும், சிரிப்போடு சிரிக்கவும் மட்டுமே முடியும். கொஞ்சம் விலகி நின்றால்தான் மெல்லிசை, காமிரா, வசனம், டைரக்ஷன், நடிகர்களின் பலவித நடிப்பாற்றல் என்று எல்லாமே ரசனைக்குரியதாகிறது. சமநிலைதான் வாழ்க்கைச் சுவையை மேலும் சுவையுடையதாக்குகிறது; நியாயம் உடையதாகவும் ஆக்குகிறது.

சமநிலை உள்ளவர்கள்தான் உள்ளது உள்ளபடி- உண்மையாக உலகத்தைப் புரிந்து கொள்கிறார்கள்; சமநிலை இழந்தவர்கள் தவறுதலாகத்தான் உலகைப் புரிந்து கொள்வார்கள் என்பதை சுவாமி சித்பவானந்தர் அழகாக விளக்கியுள்ளார். உடைந்து விட்ட கண்ணாடியில் - சமம் அற்ற கண்ணாடிப் பரப்பில் - உருவங்கள் பின்னப்பட்டுத்தான் தெரியும். உடையாத சமமான கண்ணாடியில்தான் உள்ளது உள்ளபடி தெரியும். எனவே சமநிலையில் உலகைப் பார்க்கப் பழக வேண்டும் என்பது அவரது அறிவுரை.

துளசிதாஸர் இராமாயணம் எழுதும் போது அசோக வனத்தில் இருந்த 'வெள்ளை மலர்கள்' என்று எழுதினார். அனுமன் குறுக்கிட்டு, "அங்கு வெள்ளை மலர்கள் இல்லை, அந்த மலர்கள் சிவப்பு நிறம்" என்றார். "இல்லை அந்த மலர்கள் வெள்ளைதான்" என்றார் துளசி. "ஸ்வாமி நான் நேரில் பார்த்தவன்... நான் சொல்கிறேன்.. நம்பமாட்டீர்களா?" என்று சொல்லிவிட்டு, ராமனிடம் போய் முறையிட்டார்.

"துளசி எழுதியதுதான் சரி... மலர்கள் வெள்ளைதான். அப்போது கோபத்தில் உன் கண்கள் சிவந்திருந்தன... அதனால் மலர்கள் உனக்குச் சிவப்பாகத் தெரிந்தன" என்றார் ராமர் என்று ஒரு கதை உண்டு. உணர்ச்சி வசப்படாத பார்வைதான் உண்மையை உணர உண்மையான வழி.

எப்போதும் இப்படி அறிவு சார்ந்த - உணர்ச்சிகளை வென்ற சமநிலையிலேயே இருக்க மனிதனால் முடியுமா? என்ற கேள்வியை எழுப்பினால் அதற்கும் விடை தருகின்றார், ஆசார்ய வினோபா பாவே, கொஞ்சம் பக்தியை வாழ்வில் கலந்து விட்டால் இது சாத்தியம் என்பதே அவரது விடை.. கடவுள் மேல் பாரத்தைப் போட்டு விட்டால் கஷ்டம் தெரியாது; இறைவன் தரும் இன்பம், உலகம் தரும் இன்பத்தைவிட உயர்வாகவே இருக்கும்.

சிரமப்பட்டு படியேறி மாடிக்குப் போக முடியாதவர்கள் லிஃப்டின் துணையோடு மாடிக்கு வந்தால் குற்றம் இல்லைதானே! வாழ்க்கையில் இயல்பான நல்லறிவால் உயர முடியாதவர்கள் பக்தியின் மூலம் சுலபமாக உயர்வது குற்றமல்ல என்பது அவர் தம் முடிவு. 'எல்லாம் பகவான் பார்த்துக் கொள்வார்... எல்லாம் பகவான் செயல்' என்று பக்தன் தீர்மானிப்பதால் யோகியின் மனோநிலையைப் பக்தனும் அடைந்து விடுகிறான்.

இந்தச் சமநிலையை எந்தப் புத்தகத்தில் படித்துத் தெரிந்து கொள்ள முடியும்? எந்தப் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டத்தில் இந்தச் சமநிலை போதிக்கப்படுகிறது? எப்படிக் கற்றுக் கொள்வது என்ற அர்ச்சுனன் கேள்விக்கு -

"சாதுக்களிடம் போய்ப் படி" என்கிறார் கண்ணன். "அர்ச்சுனா! பணிந்து கேட்டும் பணிவிடை புரிந்தும் நீ இதை அறிந்து கொள்க. உண்மையை உணர்ந்த ஞானிகள் உனக்கு இந்த ஞானத்தை உபதேசிப்பார்கள்!" என்கிறார் பகவான்.



• தெய்வத்தின் ஆட்சி!

● சி. முருகேசன், திருமருகல்.

? தமிழ்நாட்டில் மன்னராட்சி கொண்டு வந்தால்....?

! தெய்வத்தின் ஆட்சியே நடக்கும் போது மன்னராட்சி எதற்கு, ஓய்!

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? 'கண்டதும் கேட்டதும்' என்னும் தலைப்பில் சுயசரிதம் எழுத உத்தேசம். நூல் போணியாகுமா?

! கண்டதையெல்லாம் எழுதினால் நூல் போணியாகும்தான். ஆனால் உமது முதுகு கோணியாகாதிருக்க கூட்டுப் பிரார்த்தனை செய்வோமாக!

● கி. பாஸ்கரன், சாலைமாநகர்.

? இன்றைய காதலின் நிலை என்ன?

! Take it easy policy ஆகிவிட்டது, விசனத்துக்குரியது.



• தலைகுனிவு

● ஆர். சங்கரநாராயணன், குணசீலம்.

? 'ஜே ஜே' என்று வாழ என்ன ஸார் செய்ய வேணும்?

! தண்டால் எடுக்கப் பழகுங்கள்!

● ம. செந்தில்நாதன், மதுரை.

? 'இக்காலத்து நரகாசுரர்கள் அரசியல்வாதிகளே' என்ற விஜயகாந்தின் கருத்து...?

! சபாஷ்! ஆனால் கண்ணனைத்தான் காணோம்.

● எஸ். சங்கரநாராயணன், சென்னை - 83.

? நானும் ஒரு கவிஞன்தான்; 'கவியரசு'', ''கவிச் சக்கரவர்த்தி'' போன்ற விருதுகள் எங்கே கிடைக்கும்?

! கிடைக்குமிடம் தேடி அலைவானேன்? நீங்களே போட்டுக் கொள்ள வேண்டியதுதானே!



• கேட்கிறார்!

● மு. ரவிச்சந்திரன், சேலம் ❑

? வயதாகி விட்டதே என்று எந்த நேரத்திலாவது வருத்தப்பட்டிருக்கிறீர்களா?

! உம், இரண்டு நாட்களுக்கு முன்பு கூட 'ரேகனுக்கு வயதாகி விட்டதே' என்று வருத்தப்பட்டேன். வயது காரணமாய், மூளையே மரத்துப் போகச் செய்கிற ஒரு வியாதி அவரைப் பிடித்திருக்கிறதாம். ஆரம்ப நிலையாம். கண்ணியமாக, 'இதனைத் தாங்குவதற்குரிய சக்தியை எனது மனைவிக்கு அருளுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன்' என்றும், தமக்கு ஆதரவு அளித்த மக்களுக்கு நன்றி கூறியும் எத்தனை உருக்கமாக விடை பெற்றிருக்கிறார் தெரியுமா!

ஜே.ஜே. என்று வாழ என்ன செய்ய வேண்டும்?

● சுந்தர், பாளையங்கோட்டை.

? இந்தியாவில் சூட்கேஸ் விற்பனை அதிகரித்து வருகிறதாமே?

! அதிலும் தமிழ்நாட்டில் அமோக விற்பனையாமே!

● எஸ். குமார், காரைக்குடி.

? சென்னை டீவி, சன் டீவி - தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகளில் எது உங்களைக் கவர்ந்தது?


! வீதியிலிருந்து வந்த வெடிச் சத்தத்தை எதுவும் விஞ்ச முடியவில்லை!



• உருக்கமான அறிக்கை

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

? ம.தி.மு.க. தாக்குப் பிடிக்குமா? தாக்குப் பிடித்தால் வாக்குப் பிடிக்குமா? வாக்குப் பிடித்தால் கோட்டை பிடிக்குமா?



• கோப்பை வென்றார்!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
மு. ரவிச்சந்திரன்,
19-ஏ, அந்தோணிசாமி தெரு,
சாமிநாதபுரம், சேலம் - 636 009.

! மதி.மு.க.வுக்கு வாக்கும் பிடிக்கும், கோட்டையும் பிடிக்கும். ஆனால் வாக்கையும் கோட்டையையும் பிடிக்குமா என்பது மிலியன் டாலர் கேள்வி! வோட்டுகளைச் சிதற அடிக்கும் என்பது நிச்சயம்.

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? 'மெட்டுக்குப் பாட்டு எழுதத் திணறுபவர்கள் கவிஞர்களா?' என்று இளையராஜா கேட்கிறாரே?

! மெட்டுக்குப் பாட்டு எழுதும் போதும் அர்த்தமுள்ள பாட்டு எழுதுகிறவனே கவிஞன். பாட்டுக்கு மெட்டுப் போடும் போதும் உள்ளம் கவர்கிற மாதிரி மெட்டுப் போடுபவனே இசை அமைப்பாளன்!

● எஸ். சசிகுமார், சென்னை.

? இந்திய அணி வில்ஸ் கோப்பையைக் கைப்பற்றுமா?

! பெப்சியையும் சேர்த்துக் கைப்பற்றி விட்டதே! ஆனால் ஒன்று. வில்ஸ் கோப்பை ஆட்டம் பிரமாதம்; அந்தக் கோப்பைதான் பரிதாபம். ஜோதிபாசு தர, அஷார் பெற்றுக் கொண்டபோது, 'சே, இன்னும் கொஞ்சம் எடுப்பாக அமைந்திருக்கலாம், கோப்பை' என்றுதான் தோன்றியது.

● ஆர். கர்ணன், பெத்தரெங்கபுரம்.

? சேஷனின் தற்போதைய நிலை?

! எம்.ஜி.ஆர். பற்றி அவர் எழுதியவையெல்லாம் அவதூறுக்குச் சமமாகும் என்று கூறி புத்தகத்துக்கு உயர் நீதி மன்றம் தாற்காலிகத் தடைவிதித்த பிறகு, சேஷனின் தற்போதைய நிலை தலைகுனிவு நிலைதான். புத்தகத்தில் அண்ணா, எம்.ஜி.ஆர். பற்றிய ஆட்சேபணைக்குரிய பகுதிகளை நீக்கிவிட்டு வருத்தம் தெரிவிப்பதே அவர் செய்யக் கூடிய கண்ணியமான காரியம். எழுத்துச் சுதந்திரம் என்பது பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும். உயர் பதவியில், அதிகாரத்தில் உள்ளவர்களே துஷ்பிரயோகம் செய்தால் குட்டி எழுத்தாளருக்குக் கூடக் குளிர் விட்டுப் போகும்.

● மஞ்சுதேவன், பம்பாய்.

? ஹௌரா-பம்பாய் மெயில் கோர விபத்து?

! முப்பது பேரைப் பலி கொண்ட அந்தத் தீ விபத்துக்குக் காரணம், சில பயணிகள் ரயிலில் மது அருந்திக் கொண்டிருந்ததுதான் என்று கூறப்படுகிறது. மது அரக்கன் எப்படியெல்லாம் கொடுமை புரிகிறான் பாருங்கள். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் திண்டுக்கல் அருகே ரயில் கவிழ்ந்து 32 பேர் படு காயம். அந்தச் செய்தி ஆறுவதற்குள், சென்னைப் புறநகர் ரயில் ஒன்று நிலையாக நின்ற இஞ்சினில் மோத, மோட்டார்மேன் மரணம்; 14 பேருக்குக் காயம். முன்னதை இயற்கையின் சீற்றம் எனக் கொள்ளலாம் எனினும் பின்னது நிச்சயமாக அலட்சியத்தின் விளைவுதான். ரயில்வே பணியில் தப்புத்தாளங்கள், பயணிகளுக்கு எமன் விடுக்கும் அழைப்புகள்.




• சபாஷ்!



• எம்.ஜி.ஆர்.



• அருணாசலம்



• திருநாவுக்கரசு

இரண்டாவது ஆரம்பம் இடையூறின்றி நடக்குமா?

எம். ஜி. ஆர். அறக்கட்டளை :

எம். ஜி. ஆர். அண்ணா தி. மு. க. தலைவரான திருநாவுக்கரசு, மதுரையில் நடத்தவிருந்த எம். ஜி. ஆர். அறக்கட்டளையின் துவக்க விழாவை, நடத்த முடியாதபடி செய்துவிட்டார் ஜெ. இந்த நிலையில் எம். ஜி. ஆரின் நினைவு தினமான டிசம்பர் 24- ஆம் தேதி சென்னையில் அதை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார் திருநாவுக்கரசு.

"இங்கும் நடத்த முடியாமல் செய்ய முடியாதா?" திருநாவுக்கரசிடம் கேட்டோம்.

"முடியாது. காரணம், ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோகம் செயல்பட முடியாத இடத்தில்தான் அதை நான் நடத்தப் போகிறேன்."

"அண்ணா அறிவாலயத்திலா?"

"அறிவாலய வளாகம் மட்டும்தான் அப்படி உள்ளதா என்ன? காம ராஜர் அரங்கம் இல்லையா? இதுபோல் சென்னையில் நிறைய இடங்கள் இருக்கின்றனவே?"

"ஜெ. பயணம் செய்யவிருந்த விமானத்தில் மத்திய அமைச்சர் அருணா சலத்தை ஏற்ற மறுத்தார்களே, அப்போது மதுரை விமான நிலையத்தில் தானே இருந்தீர்கள்? என்னதான் நடந்தது?"

"குறிப்பிட்ட நாளன்று மாலை எனக்குச் சென்னையில் ஒரு நிகழ்ச்சி இருந்தது. அதனால், அன்று காலை மதுரையிலிருந்து கிளம்பும் தனியார் விமானம் ஒன்றில் டிக்கெட் வாங்கியிருந்தேன். காலை ஏழு மணிக்கே விமான நிலையம் சென்று விட்டேன். அமைச்சர் அருணாசலமும் வந்து விட்டார். அவருக்கும் சென்னையில் ஒரு முக்கிய நிகழ்ச்சி. இருவரும் ஓய்வறையில் காத்திருந்தோம். பன்னிரண்டு மணிவாக்கில், விமானம் ஒரு மணிக்கு வரும் என்றும், அதில் முதல்வர் தமது குழுவினருடன் செல்வதால், அதில் பயணிகள் செல்ல முடியாதென்றும், அதே விமானம் மாலை நான்கரை மணிக்கு வரும்போது செல்லலாமென்றும் அறிவிக்கப் பட்டது. அருணாசலத்துக்கு மிக்க அவசர வேலை என்பதால் முதல்வர் செல்லும் விமானத்திலேயே தாமும் செல்ல விருப்பப்பட்டு, அவமானப் பட்டார். கடைசியில் அந்த விமானம் மாலை நான்கரை மணிக்கும் வர வில்லை. டிக்கெட் வாங்கிய நாற்பது பயணிகளும் ஏமாற்றப்பட்டுவிட் டோம். நுகர்வோர் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய விஷயம் இது!"

சிறையில் மலர்ந்த காதல்!

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை என்னதான் ஆயிற்று? குற்றப் பத்திரிகை முப்பது பக்கம்தான் என்றாலும் சாட்சியங்கள் 10,000 பக்கம். காரணம், 1014 சாட்சிகள்! வழக்குக்காக நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் பக்கம் 10,000. ஆக, இருபதாயிரம் பக்கங்களை அச்சடித்துக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விநியோகிப்பதில் நிறைய தாமதம். கூடவே, தமிழ் தெரியாத சில வழக்குரைஞர்களுக்கு இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுப்பதில் தாமதம்... என்று நிறைய தாமதம்.

இதற்கிடையில் கைதிகள் என்னதான் செய்தார்கள். முன்பு நளினிக்குப் பிறந்த பெண் குழந்தையான ஸ்ரீநியைக் கொஞ்சுவதில் காலம் கழித்தார்கள். குழந்தைக்கு இரண்டு வயதானதால், அது திருச்சியிலுள்ள நளினியின் நண்பர் வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இது எல்லோருக்கும் ஏமாற்றம்தான் என்றாலும் விடுதலைப்புலி விக்கிக்கும் பெண்புலி ஆதிரைக்கும் அதுவே காதல் மாற்றமாகிவிட்டது. கல்யாணத்திற்கும் தயாராக இருக்கிறார்கள்!

தொகுப்பு : ப்ரியன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

உங்கள் மழலைச் செல்வம் அவனது மென்மையான மிருதுவான உலகம்.



அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.

உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.

ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.

பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.

உங்கள் செல்வ மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.



லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.

நெஸ்டம்

எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25.
புதுடில்லி-110016

முக்கிய அறிவிப்பு : உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்